தமிழீழ ஆவணக் காப்பகம்

ஜூலை - ஓகஸ்ட் 1996

# எரிமலை



## ஓயாத அலைகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஓடிக்கொண்டே திரும்பிப் பார்த்தேன்.
துரத்தி வந்தார்கள்.
கைகளில் வெட்டரிவாள்
கண்டகோடாலி
ஒருவர் கையில் உலக்கை
இன்னும் வேகமெடுத்தேன்.
தோளிருந்து துணிப்பை விழுந்தது.
நின்றெடுக்க நேரமில்லை.
என்னூரின் எல்லை வந்தாச்சு.
இன்னும் என்பின்னால் அவர்கள்
என்னை ஊர்விட்டுக் கலைக்க இவர்கள் யார்?
கோபமெழுந்து யாரென்றேன்.
குரல் வயல்வெளியில் எதிரொலித்தது.
பதிலில்லை.
இப்போது ஆட்களெவரும் இல்லை
காலடிச் சத்தமே கலைத்தது.
மீண்டும் மூச்சிரைக்க ஓடினேன்.
பக்கத்தூரின் எல்லாக்கும் வந்தாச்சு.
பெரிய மதவடியில் பெருங்கூட்டம்
அப்பாடா...... ஒரு ஆறுதல் மூச்சு
துணைக்கொரு கூட்டம் கிடைத்தது.
என்ன இது?
இப்போது இவர்களேன் ஓடுகிறார்கள்?
கூட்டத்திலொருவனாய் நானும்.
தோளிலேதோ தொட்டது
திடுக்குற்று விழித்தேன்.
அட... எல்லாமே கனவா?
என்ன இழவடா இது.
பயந்தொழிக்கும் வாழ்வில்
உறக்கமும், விழிப்பும் ஒன்றாகிவிட்டதா?
அவர்களை நான் கலைப்பதுபோல
கனவிலாது காணக்கூடாதா?
வெளியிற் சொல்வதா?
வேண்டாம்.
வெட்கம்.

— மாலிகா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




எரிமலை





கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

ஜூலை / ஓகஸ்ட்

1996

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 43 58 11 42


# பிரபாகரன்: காலக் கனிவு

மூலதந்திரோபாயத்தில் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் தெளிவாக இருக்கிறார்; எப்போதுமே தெளிவாக இருப்பார் என்பதற்கான அண்மைக்கால ஆதாரங்கள் இரண்டை எடுத்துக்காட்டலாம். ஒன்று அரசியல் தந்திரோபாயம் பற்றியது; மற்றையது இராணுவ தந்திரோபாயம் பற்றியது. விடுதலைப் புலிகள், 95 ஏப்ரலில் பேச்சுவார்த்தையிலிருந்து காலக்கெடு கொடுத்து விலகியபோது உலகில் கண்டனக்குரல்கள் எழுந்தன. எம் மக்களில் ஒரு சிலரும் அங்கலாய்த்தனர். பிரபாகரன் அன்று செய்தது சரியென்று அவர்களே இப்போது கூறும் போது, சிறீலங்கா அரசாங்கத்தின், சந்திரிகாவின் சூழ்ச்சியை புரிந்துகொள்ள அவர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேல் பிடித்துள்ளது என்றே கூறலாம். உடனே அப்போதே இதனைப் புரிந்து கொண்டபடியால்தான் பிரபாகரன் காலம் கனிந்து உருவான தலைவராக இருக்கிறார். தான் வகுத்த அரசியல் தந்திரோபாயத் திட்டத்தில் தமக்குச் சாதகமான காலம் வரும்வரைக்கும் பேச்சுவார்த்தையை இழுத்தடித்துக் கொண்டு அரசாங்கம் சென்றிருக்கும். விடுதலையை முன்னெடுக்காமல் காலத்தை விரயமாக்குவதில் விடுதலைப்புலிகளின் சக்தி வீணடிக்கப்பட்டிருக்கும். தற்போது, இராணுவத் தீர்வு என்ற அரசாங்கத்தின் உண்மை முகம் வெளிப்பட்டுள்ளது. உலகையும், தமிழ் மக்களையும் ஏமாற்றத் தான் வைத்த தீர்வுத் திட்டத்தை தானே மலினப்படுத்தி, மலினப்படுத்தி தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் ஒழுங்குக்குக் குறைவாக அரசாங்கம் கொண்டுசென்றுள்ளது. அதாவது ஒற்றை ஆட்சி முறைக்குள் தீர்வு; தற்போது தற்காலிகமாக இணைந்திருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிப்பு என்ற சிங்களக் கருத்தொற்றுமை இறுதியாக வெளிப்பட்டுள்ளது. காலங்கடந்து இதனைப்புரிந்து கொண்டபோதும் கொழும்புக் குழுக்கள் சொல்லத் தயங்குகின்றனவே! இதனைத்தான் அடிவருடித் தன்மை என்று கூறுவோம். உலக சமூகம் இதனை எப்போதோ புரிந்து கொண்டாலும், பலம் பொருந்தியோர் நலனுக்கமையவே ஒண்றைச் சரியா, பிழையாவென வரையறுக்கும் முயற்சிகள் இடம்பெறும்.

இராணுவத் தந்திரோபாயத்தில், விடுதலைப்புலிகள் யாழ். குடாநாட்டிலிருந்து தற்காலிக பின்னகர்வை மேற்கொண்டபோது, தமது பிரதான தளத்தை வன்னிக்கு மாற்றியபோது, விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்துவிட்டதாகவும், விடுதலைப் போராட்டமே உடைந்து கொட்டுப்பட்டுவிட்டதாகவும் கருதப்பட்டது. மூலதந்திரோபாயத்தில் அரசபடைகள் வெற்றியை ஈட்டவில்லை என்பதே உண்மையாகும். இராணுவ தந்திரோபாயத் திட்டத்துள் சிக்காது பிரபாகரன் நேரடி மோதலைத் தவிர்த்துக் கொண்டார். அதற்கெதிரான மாற்றுத் தந்திரோபாயத்தை வகுத்து, குடாநாட்டில் அரச படைகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளி, போராட்டத்தை வெற்றியை நோக்கிச் செலுத்துவதற்கான முன்னெடுப்புக்களை (initiatives) தன் கையில் எடுத்துக்கொண்டார். அம்முன்னெடுப்புக்களே குடாநாட்டில் கெரில்லா ரீதியான தாக்குதல்களாக வெளிப்படுகின்றன. மேலும் நன்கு திட்டமிடப்பட்டு, உளவு அறியப்பட்டு, மரபு ரீதியான சண்டையின் மூலம் முல்லைத்தீவு பாரிய இராணுவ முகாம் ஒரு சில மணி நேரங்களில் விழுந்தது இதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு. பலவீனம் அடையாத, ஒழுங்கமைக்கப்பட்ட, சிறந்த தலைமையையும், படிமுறைக் கட்டமைப்பையும் கொண்ட இராணுவமாக உலகிற்கு விடுதலைப் புலிகள் வெளிப்பட்டனர். அரசாங்கத்தின் பொய்ப்பிரச்சாரமும் பத்திரிகைத் தடைகளும் அம்பலமாயின. இவை இரண்டும் பிரபாகரனின் தீர்க்கதரிசனத்திற்கும், பின்வாங்கிப் பாய்கின்ற வேகப்பாய்ச்சலுக்கும் கட்டியம் கூறுகின்றன.

அரசியல் தீர்வு என்ற நாடகம் பிசுபிசுத்துப் போன நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவத் தீர்வு முயற்சியிலேயே ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறது. அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்கள், "பச்சைத் தொப்பிகள்" என்று அழைக்கப்படும் விசேட படையினர், வீரவில என்னும் இடத்தில் சிறீலங்கா இராணுவத்திற்கு அதிரடிப் போர்முறை பற்றி பயிற்சி அளிப்பதும், சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைக்குத் தூண்டுதலை அளித்திருக்கலாம். இதுவே கிளிநொச்சி நோக்கிய படைநகர்வுத் திட்டத்திற்கு வழிவகுத்திருக்கலாம். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குகின்ற, மக்களை சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்குகின்ற அரசின் இராணுவ நடவடிக்கைகள் சரிவராது; அதற்கு அமெரிக்கா துணைபோகக் கூடாது என்று வலியுறுத்த வேண்டியதாக உள்ளது.

மேலும், பலவீனமான இந்திய மத்திய அரசு உறுதியான தளத்தில் தனது புதிய வெளிவிவகாரக் கொள்கையை வகுக்க முடியாதுள்ளது. விடுதலைப் புலிகள் மீதான தடை இந்தியாவில் அண்மையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது இதனையே காட்டுகின்றது. தேசிய இன உரிமைகளும், சுயாட்சிக் கோரிக்கைகளும், இந்திய மாநிலங்களில் வலுவடைந்து வரும் நிலையில், தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்திய நலனுக்கு நீண்டகால அடிப்படையில் நல்லது என்பதையும், அமெரிக்கக் காலூன்றல் ஆபத்தானது என்பதையும் இந்திய மத்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும். தமிழீழ மக்களின் நலனைப் பாதிக்கும் இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் மாற்றத்திற்கு தமிழ்நாடு அரசு அழுத்தமாக அமைதல் வேண்டும். இது இலங்கையில் போரின் முடிவுக்கும், இந்தியப் பாதுகாப்புக்கும் வழிவகுக்கும் என்பதையும் இந்தியக் கொள்கை வகுப்பாளர் உணர்வது நலம். இத்தகு மாற்றங்கள் வருவதற்கிடையில் எவ் வளவோ செய்வதற்கு உள்ளன என்பதையே தற்போதைய நிலைமை காட்டுகிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### கரும்புலிகள்:

# ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்



தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்கு குரல் கொடுக்கவோ, கைகொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கி றார்கள். முழு உலகமுமே ஒன்றுதிரண்டு எமது எதிரி களுக்கு முண்டுகொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில், நாம் எம்மாலான சகல வழிகளை யும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோ கித்து ஒரு தற்காப்புப்போரை நிகழ்த்த வேண்டும். இந்த தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்யமுடி யாது. அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்து போவதைத் தவிர்க்கமுடியாது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப்பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள், இரும்பு போன்ற உறுதியும் பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்க ளது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல் லாவற்றுக்கும் மேலாகவே தன்னையே காதலிக்கின் றான். தனது உயிரையே நேசிக்கின்றான். உயிர் வாழ வேண்டும் என்று துடிக்கின்றான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர் வாழ விரும்புவதால், உயிர் அற்று போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்கு பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரை விட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்த குறிக்கோள் அவ னது சுயத்திற்க்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லா தொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்த தெய் வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்துகொள்ளவேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடு தலை செய்துகொள்பவன் தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும் போது தான் வீரம் தோன்றுகிறது; துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண் மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளி களுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத் தனத்தின் தோழன்; உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தை கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்று விடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறு கிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்த வர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்துவிடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப் பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்து மாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

(தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் 'எனது மக்களின் விடுதலைக்காக' என்னும் நூலிலிருந்து)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஓயாத அலைகள்

முல்லைத்தீவு இராணுவத் தளம் மீதான தாக்குதல்




முல்லை நிலம் விடுதலைப் புலிகளின் வெடி அதிர்வுகளால் சிலிர்த்தது. கடலும் கடல் சார்ந்த நிலத்தில் இடியும் மின்னலுமாக போர்க்களம். புகைமண்டலங்களுள் இருந்து எழுந்த தீச்சுவாலைகள் எட்டுத் திக்கும் உதயத்தின் வரவுக்கான சந்தோஷக் கனல்களை மூட்டின.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டோம் என்று வீணான, கற்பிதமான போக்கிலிருந்த சிங்களப் பேரினவாதிகளுக்கு இது கசப்பானதும் மறக்க முடியாததுமான ஒரு மிகப் பெரிய அனுபவமாக அமைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பெற்ற தாக்குதல் ஒவ்வொன்றின் போதும், சிறீலங்கா இராணுவம் தமது முகாங்களை உசார்ப்படுத்தி விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கு ஏற்ற ஆயத்தங்களை செய்வது வழமை. இம்முகாம் தாக்குதலுக்கு உள்ளாகும் என்பது குறித்து சிறீலங்கா இராணுவத்திற்கு புலனாய்வாளர்கள் முற்கூட்டியே தெரிவித்திருந்தும் அவர்களால் முகாம் மீதான தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் போனமை சிறீலங்கா இராணுவத்தினரின் பலவீனத்தையே கோடிட்டுக் காட்டுகிறது.

கடற்புலிகளின் பலம் குறித்து சிங்கள இராணுவ விமர்சகர்களே வியந்து பேசியிருக்கிறார்கள். கடற்புலிகளின் ஆதிக்கம் வலுப்பெற்று வருவது குறித்த அச்சத்தை அவர்கள் நிறையவே கொண்டிருந்தார்கள். இவ்வளர்ச்சிப் போக்கு இராணுவ முகாங்களுக்கான, யாழ் குடாநாட்டிலுள்ள விநியோகப் பாதைகளை அறுத்து விடும் ஆபத்தை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இதனால் படையினருக்கான ஆயுத தளபாடங்கள், உணவு, மருந்து என இத்தியாதி தேவைகளுக்கான தட்டுப்பாடுகள் அவர்களை நெருக்கத் தொடங்கும். அத்தோடு அவர்கள் முகாங்களை விட்டு வெளியேற முடியாத அவல நிலையும், அடிக்கடி தொடரும் விடுதலைப் புலிகளின் ஓயாத தாக்குதல்களும் இராணுவத்தை பலமிழக்கச் செய்துவிடும் என்பதை இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையானது விடுதலைப் புலிகளின் தாக்குதல் தந்திரோபாய உத்திகளில் பலத்த மாற்றத்தைக் கொணரும் என்றும் இந்த இடம் பெயர்வு விடுதலைப் புலிகளின் படைபல சக்தியை அதிகரிக்கச் செய்யும் என்றும் எச்சரித்தனர். வன்னிப் பிராந்தியத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட முறையில் களம் அமைத்திருக்கும் விடுதலைப் புலிகள் பலமான தாக்குதல்களை மேற்கொள்ளுவார்கள் என்பது குறித்த அச்சத்தையும் தெரிவித்திருந்தார்கள்.

முல்லை இராணுவ முகாம் மீதான தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகளின் படைக்கல சக்தி பன்மடங்காக அதிகரித்துள்ளமை யாழ் குடாநாட்டிற்குச் செல்லும் கடல், ஆகாய ரீதியிலான சுயாதீனப் போக்குவரத்தை கேள்விக்குறியாக்கி உள்ளது.

கடல் பரப்பைப் பொறுத்தவரை கொழும்பிலிருந்து தென்பகுதி ஊடாக திருமலை செல்லும் கடற்பரப்பானது இதுவரை சிறீலங்காப் படைகளிற்கு பாதுகாப்பானதாகவே இருந்து வருகிறது. ஆனால், திருமலையிலிருந்து வடக்கே செல்லும் கடற்பாதையானது சிறீலங்காவுக்கு மிகவும் பாதுகாப்பற்ற பகுதியாகவே உள்ளது. இதனால், குறிப்பிட்ட தூர இடைவெளிகளில் உள்ள தமது முகாங்களில் பெரும் எண்ணிக்கையிலான படையினரை நிறுத்தி கனரக ஆயுதங்களைக் குவித்து பலப்படுத்தி வருகின்றனர். யாழ் குடாநாட்டில் இருந்த பலாலி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முப்படைத்தளம், காரைநகர் கடற்படைத்தளம், மண்டைதீவு இராணுவ முகாம் ஆகியவற்றில் மண்டைதீவு இராணுவ முகாம் சென்ற வருடம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்பானதாக அமைந்தது. அத்துடன் ஆனையிறவு, பூனகரி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களிலும் இவர்களது பாரிய இராணுவ முகாங்கள் அமைந்திருக்கின்றன. இதில் மன்னார் இராணுவ முகாமானது மேற்கில் அவர்களது போக்குவரத்திற்கு ஒரு முக்கிய தளமாக அமைந்திருக்கிறது. கிழக்கில் திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இராணுவ விநியோகங்களைச் செய்வதற்கு முல்லைத்தீவு இராணுவ முகாமானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்ந்தது. கடற்புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்கும் இந்த முல்லைத்தீவு இராணுவ முகாம் சிறீலங்காப் படையணிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்தது. விடுதலைப் புலிகள் முல்லைத்தீவில் உள்ள ஆக்கிரமிப்பு இராணுவத்தை தாக்கியழிப்பதற்கு இது மாத்திரம் காரணமல்ல. வேறு பல காரணங்களும் இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதாவது சென்ற வருடம் சிறீலங்கா இராணுவத்தினரால் யாழ் குடாநாடு மீது மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் பெருமளவு படைகளை விடுதலைப் புலிகள் ஈடுபடுத்தாமல் சிறுதொகையான வீரர்களை மட்டும் தாக்குதலில் ஈடுபடுத்திவிட்டு உத்திரீதியான நகர்வை மேற்கொண்டிருந்தார்கள்.

வன்னிப் பிராந்தியத்தில் தளமிட்டிருக்கும் விடுதலைப் புலிவீரர்களிற்கு மிக அருகாமையில் முல்லைத்தீவு முகாம் இருந்தது. அது விடுதலைப் புலிகளுக்கு ஆபத்தானதாக இருந்தது. மேலும், பெருமளவு மக்கள் தங்கியிருக்கும் வன்னி பெருநிலப்பரப்பு மீதான ஆக்கிரமிப்புக்கு ஏதுவான மேடையாக இருந்தது. வன்னிப் படையெடுப்பு நடவடிக்கை ஒன்று முப்படையின் பலத்தையும் கூட்டி மேற்கொள்ளப்படும் பட்சத்தில் முல்லை இராணுவ முகாமின் இருப்பு பலத்த இன அழிவை ஏற்படுத்தும் என்பது விடுதலைப் புலிகளின் கருத்தாக இருந்தது. அதனால் அவ்வாறானதொரு இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்கொள்ள முன் வன்னிப்பிராந்தியத்தில் உள்ள இவ் இராணுவ

# தமிழரும் புலிகள்

“அவர்கள் இராணுவ தளத்தை முற்றிலுமாகக் கைப்பற்றிய பின்னர் உழவு இயந்திரத்தைக் கொண்டு வந்து ஆயுதத் தளபாடங்களையும் இராணுவத்தினரது உடல்களையும் கொண்டு சென்ற பின்னர் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து விடுதலைப் புலிகளுக்கு உதவிகளைச் செய்தனர்” இவ்வாறு தான் நேரில் கண்டதைக் கூறுன்கிறார் முல்லத்தீவு இராணுவத் தளப்பிரதேசத்தில் இருந்து புலிகளின் தாக்குதலின்போது தப்பி ஓடிய சிறீலங்கா இராணுவச் சிப்பாய். சிப்பாயின் தகவலானது, முல்லைத்தீவுப் படைத்தளப் பிரதேசம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது என்பதை மட்டுமல்ல, வேறு சில பாதகங்களையும் சிறீலங்கா அரசுக்குப் புரிய வைத்திருக்கும். அது தமிழ் மக்கள் அது தமிழ் மக்கள் புலிகளின் பக்கமே நிற்கின்றனர் என்பது முக்கியமானதாகும்.

தமிழர் தாயகப் பகுதி மீது பாரிய படையெடுப்புக்களை சந்திரிகா அரசு மேற்கொண்டபோதெல்லாம் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்கே அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறியது. ரிவிரச 1, 2, 3 ஆகியவற்றின் போது இதையே பிரச்சாரப்படுத்தியது. வலிகாமம் மீதான படையெடுப்பைக் கண்டு மக்கள் அப்பட்டமாக வெளியேறியபோது, அரசாங்கம் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவில்லையா அல்லது தெரிந்து கொள்ளவில்லையா? மாறாக தென்மராட்சிப் படையெடுப்பின்போது, மக்கள் வேறுவழியின்றி வலிகாமம் திரும்பியபோது, தமிழ் மக்களை இராணுவம் விடுவித்ததாகப் பிரச்சாரம் செய்தது. ஆனால், தற்போது, முல்லைத்தீவு இராணுவத் தளத்திலிருந்து தப்பி ஓடி வந்த சிப்பாய் கூறியதைக் கொண்டு சிறீலங்கா அரசுக்கு ஒன்று தெளிவாக விளங்கியிருக்க வேண்டும். அதாவது, புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்பது தவறு என்பது. புலிகளின் பிடியிலிருந்து விடுபட தமிழ் மக்கள் விரும்பவில்லை. இராணுவத்தின் பிடியிலிருந்து விடுபட விரும்புகின்றார்கள் எனபதே அதுவாகும்.

ஏனெனில் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது, தமிழ் மக்கள் தமது உணர்வுகளைத் தெளிவாகவே வெளிக்ககாட்டினர். முகாம் வீழ்ச்சியின் போது, தமது பூரண ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கிய மக்கள் ஒருபுறம் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதத் தளபாடங்கள் உட்பட பெருந்தொகையான பொருட்களை மீட்டெடுக்கப் பெரிதும் உதவினர். முகாம் பகுதிக்குள் எறிகணை வீச்சோ அன்றி விமானக் குண்டுவீச்சோ விழலாம் என்பதை கூட அவர்கள் பொருட்படுத்தாமல் புலிகளின் வெற்றியை முழுமைப்படத்த தமது ஒத்துழைப்பை வழங்கினர். மறுபுறம் இராணுவத்துடனான மோதலில் காயமடைந்த போராளிகளுக்கென பெருந்தொகை இளைஞர்கள் முன்வந்து இரத்ததானம் செய்தனர். அத்தோடு, வெற்றிக்களிப்போடு இருந்த மக்கள் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு திரளாக வந்து அஞ்சலியைச் செலுத்தினர். சுருக்கமாக கூறப்போனால், புலிகளின் வெற்றியானது தமிழ் மக்களின் வெற்றியென்றே அவர்களால் கருதப்பட்டது; சொல்லவும் பட்டது. இந்த நிலையில் விடுதலைப் புலிகடம் இருந்து தமிழ் மக்களை விடுவிப்பது என்பதும் தமிழ்மக்கள் வேறு புலிகள் வேறு என்று சந்திரிகா அரசு கூறிக் கொள்வதும் வேடிக்கையானதும் நகைப்புக்கிடமானதும் ஆகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணலாம் என சந்திரிகா அரசு எவ்வாறு நம்பியதோ அதேபோன்றே சிறு சிறு சலுகை அறிவிப்புக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும்; தமிழ் மக்கள் சலுகை அறிவிப்புக்களுக்கு மயங்கி விடுவார்கள் என்று சந்திரிகா அரசு நினைப்பதும் தவறானதாகும். அத்தோடு, இது புலிகளுக்கு எதிரான போரே ஒழிய தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல என்பதெல்லாம் பொருட்படுத்தப்படப்போவதில்லை. தமிழ் மக்களின் குரலே விடுதலைப் புலிகள் இயக்கம் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடும் யதார்த்தமும் ஆகும். புலிகளின்றி தீர்வில்லை என்பதும் அவ்வாறானதே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



முகாமை தாக்கியழித்துவிட விடுத லைப் புலிகள் அலையாய் எழுந்தார்கள்.

யாழ்ப்பாணத்தை சிறீலங்காப் படைகள் ஆக்கிரமித்தபோது, விடுத லைப் புலிகளினதும் மக்களினதும் இடம்பெயர்வு ஒரு தற்காலிகப் பின் னடைவுதான் என்பதை விடுதலைப் புலிகள் தெளிவாக விளக்கியிருந்தார் கள். விடுதலைப் புலிகள் திட்டமிடப் பட்ட மரபு ரீதியான ஒரு படை நகர்வை அன்றிருந்த சூழலில் எதிர் கொள்ள விரும்பவில்லை. தாம் விரும் பியவாறு எதிரியை எதிர்கொள்ளல் என்பதை முல்லைத்தீவில் நிரூபித்துக் காட்டினர். 1500 இராணுவத்தினர் இருந்த முகாமில் 30 பேரே உயிர் தப்பினர். 122 மில்லி மீற்றர் பீரங்கிகள், கவசவாகனங்கள் என்ற ரீதியில் பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங் கள் கைப்பற்றப்பட்டன. இன்னொரு விசேசமாக உதவிக்கு வந்த படை களை முறியடித்தும் பின்வாங்கச் செய்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அம் முகாம் பகுதியை கட் டுப்பாட்டிலேயே விடுதலைப் புலிகள் வைத்துக்கொண்டனர். இதன் மூலம் விடுதலைப் புலிகள் பலம்வாய்ந்த ஒரு படை பல சக்தியை உருவாக்கி அந்த சக்தியைக் கொண்டு ஓயாத அலை யாக எழுந்து போராட்ட வரலாற்றில் புதிய பரிணாமங்களைப் படைத்தும் தொட்டும் நிற்கிறார்கள் என்பது வெள்ளிடை மலை.

# எவ்வளவு காலம் பொய்மை வாழும்?

1991ம் ஆண்டு ஆனையிறவுச் சமரின்போது, வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட இரா ணுவம், ஆனையிறவு முகாம் வந்தடைவதற்கு, சுமார் மூன்று வார காலம் வரை சென்றது. ஆனால், அப்போது சிறீலங்கா இராணுத் தரப்பு கூறிவந்த தகவல்களைத் தொடர்ச்சியாகக் கேட்டு வந்த பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் "சிறீலங்கா இரா ணுவம் கூறுவதைக் கொண்டு பார்த்தால், இதுவரை சிறீலங்கா இராணுவம் பிரிட்டன் வந்து சேர்ந்திருக்க வேண்டும்" என்று தெரிவித்தார். அந்தளவிற்கு சிறீ லங்காத் தரப்பு காலையும் மாலையுமாக இராணுவம் முன்னேறுகின்றது என்றே கூறிவந்தது. இதேபோன்றே இன்று முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு உதவுவ தற்கு தரையிறக்கப்பட்ட இராணுவம் குறித்தும் சிறீ லங்கா அரச தரப்பு கூறியது. முகாமிற்க அருகிலேயே உதவிப்படைகள் இறங்கியிருப்பதாகக் கூறிய சிறீ லங்கா அரச தரப்பு 5 நாட்களாக முகாம் நோக்கி இராணுவத்தின் முனேறுகின்றனர் என்றும் வெகு விரைவில் முகாம் சென்றடைந்து விடுவார்கள் என் றும் கூறிக்கொண்டிருந்தது. இதில் முககியமாக, 22.07.96 அன்று பகல் சிறீலங்காப் பாதுகப்பமைச்சு, தரையிறங்கிய படையினர் அன்று மாலை முகாமைச் சென்றடைந்துவிடும் என்று கூறியது. ஆனால், மறு நாள் 23.07.96 அன்று பாதுகாப்பமைச்சின் அறிக் கைகளோ முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் என்று மீண்டும் கூறியுது. அதாவது முதல்நாள் கூறியது போன்று முகாமை அடைந்துவிட்டோம் என்று கூறவில்லை. சண்டை தொடர்ந்து நடைபெறுகின் றது என்றே இரானுவம் கூறியது. சிறீலங்கா அரசின் கூற்றினைக் கொண்டும், களத்திலிருந்து கிடைக்கும் தகவல்களைக் கொண்டும், இராணுவமானது முகாமி லிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் – அதாவது, வடக்கிலும் கிழக்கிலும் – இறக்கியுள்ளது. ஆனால், தரையிறங்கிய நிலையிலிருந்து சிறிது சிறிதாக நகர்ந்து வந்தாலும் அது முல்லை முகாமை வந்தடைந்திருக்க வேண்டும். ஆனால் இராணுவம் இவ்வாறான நகர்வினைச் செய்தாவது முகாமை நோக்கி நகர்ந்த தாகத் தெரியவில்லை. தரையிறங்கிய இராணுவம் பலத்த உயிரிழப்புக்களுடன் முன்னேற முடியாதள வுக்கு பாதிக்கப்பட்டது. ஒருவகையில், தரையிறங்கிய படை பலத்த நெருக்கடிக்கு உள்ளாகியது என்றே கூறவேண்டும். ஆனால், பாதுகாப்பமைச்சு இவற் றுக்கு மட்டுமாதான் பொய்கூறுவதாக இல்லை.

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி முல்லை முகாம் அழிக்கப்பட்ட போதும், இன்னமும் இராணு வம் முகாமின் ஒரு பகுதியில் உள்ளது என்றே அமைச்சு பிரச்சாரம் செய்து வந்தது. ஆனால், முகாமுடன் தொடர்பு இல்லாமையால், அதனை உறுதிசெய்ய முடியாது உள்ளது என்பது சிலருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதக இருக்கலாம். ஆனால், 5 தினங்களாக அலம்பிலில் தரையிறக்கப்பட்ட படை யினரை வழிநடத்தியதன் காரணமாக பிரதிப் பாது காப்பமைச்சர் ரத்வத்தை கொழும்பிலுள்ள பாது காப்பு ஆய்வாளர்கள் சகலரையும் மடையர்களாய் எண்ணுகிறார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இவை எவையும் தமிழ் மக்களை ஏமாற்றிவிடப் போவதில்லை. முல்லைத்தீவு முகாம் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டதாக அவர்கள் அனைவ ருக்கும் தெரியும். இதேசமயம் சிறீலங்கா அரசாங்கம் தற்போது பொய்களைக் கூறுவதனாலும், பிரச்சாரம் செய்வதனாலும் ஏமாறப் போவது அப்பாவிச் சிங்கள மக்களே. இராணுவத்திற்கு தமது பிள்ளைகளை அனுப்பிவைத்த சிங்களப் பெற்றோரும், குடும் பத்தினரும் ஏமாறுகிறார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## விடுதலைப் பூமியில்.....

# புல்லும் நிமிர்ந்து போர்க்கோலம் கொள்ளும்

யூலை மாதம் 4ம் திகதி யாழ் ஸ்ரான்லி வீதியில் மதியம் 12.20க்கு பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடிக்கின்றது. திசையதிர, தீச்சுவாலை மேலெழுந்தது. சிறீலங்காவின் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா, தலையில் காயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்ப, அவருடன் வந்த சகாக்கள் பிணமாகச் சிதறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தமது ஆதிக்கக் கால்களை அகலப்பதித்துவிட்டு, தமது ஆளுமைக்குள் யாவும் அழகாக நடைபெறுகின்றன எனக் காட்சி காட்டும் ஒரு நிகழ்வாக, கட்டிடப் பொருட் கூட்டுத்தாபன சில்லறை விற்பனை நிலையம் ஒன்றை திறந்துவைத்துவிட்டு அமைச்சர் திரும்பும் வேளையிலேயே இக்குண்டுத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை வலிகாமத்தில் இருந்து துடைத்தெறிந்தாகிவிட்டது என வீரம் பேசிய யாழ்ப்பாணக் கொமாண்டர் பிரிகேடியர் ஆனந்த கமங்கொட இரத்தம் பீறிட பிணமாகச் சரிகின்றார். இடியோசை போன்ற சத்தத்தில் சதுரம் நடுங்க ஓடியொழித்துக்கொண்ட பாதுகாப்புப் படையினர், சற்று நேரத்துக்குள் வீரம் கொப்பளிக்க உமிழ்ந்து தள்ளிய துப்பாக்கி ரவைகளாலும், கைக்குண்டு வீச்சாலும் அமைச்சருக்கு கைகாட்ட அழைக்கப்பட்டிருந்த மக்களில் பலர் உயிரிழந்து விழுகின்றனர். இன்னும் பலர் படுகாயமடைந்து மண்ணில் சரிகின்றனர்.

யாழ்ப்பாணத்தை சமாதான நகரமாக ஆக்கப்போவதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்து இரண்டு வாரம் ஆவதற்குள், சிறீலங்கா அரசிற்கு அதிர்ச்சி தரும் பாடம் ஒன்று இதன்மூலம் அனுப்பிவைக்கப்படுகின்றது. அதேவேளை, எமது மக்களிற்கும் இந்த உலகத்திற்கும் தமது நிலைப்பாடு குறித்தும் சிங்களப் படையினர் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள பௌத்த சிங்களப் பேரினவாத இராணுவ யந்திரம், தான் மிதித்து நிற்கும் புல்தரையும் பூகம்பமாய் வெடிக்கும் என்பதை உணரத்தலைப்பட இந்தக் குண்டுவெடிப்பே போதுமானது. நகரின் மையத்தில், அமைச்சரின் வருகைக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்ட நிலையில், சிங்களப் படையினரின் கழுகுக் கண்களையும் தாண்டி அப்பெண் குண்டுசுமந்து எப்படிச் சென்றாள்..? சிங்கள ஆட்சியாளர்களைக் குடையும் இந்தக் கேள்விக்கு விடை இலகுவானது. இது அப்பெண் உடலோடு கொண்டுசென்ற குண்டின் வெடிப்பு அல்ல. மனத்தின் வெடிப்பு. இது எந்தக் கழுகுக் கண்களாலும் காவல் காக்க முடியாது என்பதை வரலாற்றுப் படிப்பினைக் கூடாகவே விளங்கிக்கொள்ளுதல் செப்பமாக அமையும். நமது மண்ணில், சுதந்திர வேள்வித்தீயில் நனைந்து ஒரு யான கரந்தடிப்போர் முறைத் தாக்குதல்களால் நிலைகுலைய வைத்துவிடுவதே விடுதலைப் புலிகள் வகுத்துக் கொண்ட திட்டம் என்பதை செம்மையாகத் தெரிவிக்கும் வகையில் குடாநாடு ஒரு கரந்தடிப் போர்க்களமாகவே மாறியுள்ளது.

சிறீலங்காப் படை ஒருபோதும் வெல்லமுடியாத யுத்தகளத்தில் தாமாகவே வந்து மாட்டிக்கொண்டுள்ளன என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமேயல்ல.

குடாநாட்டை விட்டு விடுதலைப் புலிகள் கட்டமைவு சிதைவுறாமல், சண்டையிடும் வல்லமையை இழக்காமல் தந்திரமாகப் பின்வாங்கிக்கொண்டதே, இத்தகைய பரந்துபட்ட கரந்தடிப் போர்க்களமாக குடாநாடு மாறும் என்பதை இராணுவக் கணிதம் தெரிந்தவர்கள் கண்மூடிக்கொண்டே சொல்லும் கணிப்பு. சிறீலங்கா பாதுகாப்பமைச்சர் சந்திரிகாவுக்கோ அல்லது பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தைக்கோ தெரியாமல் இருக்க நியாயம் இல்லை. அப்படியிருக்க யாழ் ஆக்கிரமிப்புக் கொண்டாட்டங்கள் ஏன் நடத்தப்பட்டன? வரலாற்றுத் தோல்வியை வழங்கப்போகின்ற குடாநாட்டு யுத்தகளத்தை, வெற்றிக்கொடியேற்றிக் கொண்டாடியது அற்ப ஆயுளைக்கொண்ட குறுகிய நலனை உள்நோக்காகக் கொண்டதாகக் கருதமுடியுமே தவிர, இதில் நிரந்தர வெற்றி எங்கே இருக்கின்றது?

சரித்திர யாகம் நடத்திக்கொண்டிருக்கும் ஒரு எழுச்சி மிகு தலைமுறை, கைகட்டிக் கூனிக்குறுகி நின்று, அடிமைத்தனமான அமைதி காக்காது என்பதற்கு இது உதாரணமாகவே கொள்ளலாம். இதன் தொடர், கைதடியிலும், கரணவாயிலும், மாவிட்டபுரத்திலும், மல்லாகத்திலுமாக தொடரவே செய்யும். அவர்கள் சுற்றிவளைத்து அமைத்த இராணுவ வேலிகள் சரசாலைகளில் சரியும். இது வரலாற்றில் மாற்றி எழுதப்படமுடியாத விதி.

குடாநாட்டில் இராணுவம் நிம்மதியாக மூச்சுவிடச் சந்தர்ப்பம் கொடுக்காமல் விடுதலைப் புலிகள் தொடர் தாக்குதலை தொடுத்தவண்ணம் உள்ளனர். பரவி விரவி நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை தொடர்ச்சி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழ் மக்களின் அதிருப்தி மீது, விடுதலைப் புலிகளின் எதிர்ப்பின் மீது நின்றுகொண்டு, ஒரு ஆக்கிரமிப்பு நிலப்பகுதியை சமாதானப் பிரதேசமாக மாற்றுவோம் எனப் பிரகடனம் செய்வதற்கு புத்திப்பிசகும், குழப்பமும், குதர்க்கமும் கொண்ட மன நோயாளர்களைத் தவிர வேறு யாரால் முடியும்?

சமாதானம் என்பது பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பும், பரஸ்பரம் நம்பிக்கையுடனும் நல்லுணர்வுடனும் பிரச்சினையின் ஆழ நீளங்களை அலசி ஆய்ந்து, பிரச்சினையின் மூலத்தை அறிந்து, எதிர்ப்படும் சகல தடைகளையும் முறியடித்து உளசுத்தியுடன் பரிகாரம் காண திடசங்கற்பம் எடுத்துக்கொண்டாலே போதும் சமாதானம் இயல்பாகவே தோன்றிவிடும்.

அதைவிடுத்து, பிரச்சினையின் மையக்கருவை பார்வையில் இருந்து மறைத்துவிட்டு, தனது படைபலத்தை முழுமையாகப் பாவித்து, வெறித்தனமான ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேற்கொண்டு, மக்களின் உணர்வுகளை மிதித்தபடி சமாதான மலர்ச்செண்டை நீட்டினால், கைக்குண்டுகளைத்தானே அம்மக்கள் பரிசாகத் தருவார்கள்.

சுதந்திரப்பூக்கள் அரும்பி மணம் பரப்பும் ஓர் விடுதலைப் பூமியில் அடிமைத்தனமான சமாதானம் எப்படித் தோன்றும்?

அமைதி சமாதானம் என்று பேசிக்கொண்டு, 'ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா அரசு, இன்று யுத்தத்திற்கே முன்னுரிமை கொடுக்கின்றது. நாட்டின் சகல பிரச்சினைகளும் பின்தள்ளப்பட்டு, யுத்தம் ஒன்றே அரசின் தலையாய கடமையாய் சந்திரிகா அரசால் சிரமேற்கொள்ளப்படுகிறது. யுத்தத்தின் அபாரத் தேவையை ஈடுகட்ட என்னவெல்லாமோ செய்கின்றது சந்திரிகா அரசு. யாழ்நகரைப் புனரமைக்கப்போவதாகக் கூறி உலகத்தின் கையை எதிர்பார்த்து நிற்கிறது சந்திரிகா அரசு. தாக்குதல்கள் தொடரும்; மோதல்கள் வெடிக்கும் என்ற நிலையில் உள்ள யாழ் நகரை புனரமைக்க ஒற்றைக்காலில் நிற்கும் சந்திரிகா அரசு, அங்கு உணவுக்கே வாடும் மக்களுக்கு உணவளிக்க மறுப்பதேன் எனக் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலின்றி முளிக்கின்றது. யாழ் நகரைத் திருத்துவதில் உள்ள அவசரம், மக்களின் அன்றாட அவசியப் பிரச்சினைகளில் காட்டும் அதீத தயக்கம் என்பன, அரசின் நோக்கத்தை சந்தேகமின்றி நிரூபிப்பதாக அரச ஆதரவுத் தமிழ்க் குழுக்களே பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளன.

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வருமுன்னரும் அதற்குப் பின்னரும் கூறிவருவது போல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, நாட்டை முன்னேற்றுவோம் என்பது, அரசின் நடவடிக்கைகளால் நடவாத காரியமாகவே ஆகப்போகின்றது.

முரண்பாடுகளை மேலும் கூர்மையடையவைத்து, போரின் எல்லையை மேலும் விரித்து விஸ்தரித்து, ஒரு பரந்த யுத்தத்திற்கு வழிவகுக்கும் செயற்பாடுகளே நடைபெறுகின்றன.

சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவீனம் அசுரவேகத்தில் உயர்ந்து செல்வதைப்போல், மரணத்தில் இருந்து இளைஞர்களைக் காப்பாற்றுவேன் எனத் தேர்தல் பிரச்சாரங்களில் அன்புத்தாய் வேடம்பூண்ட அம்மையாரின் ஆட்சியிலே இராணுவத்தினரின் இழப்பும் கட்டின்றி உயர்ந்தே செல்கின்றது.

முதலாம் கட்ட ஈழப்போரின் போது, 360 கோடி ரூபாவாக இருந்த சிறீலங்காவின் வருடாந்த போர்ச் செலவீனம், இரண்டாம் கட்ட ஈழப் போரின்போது 1500 கோடி ரூபாவாக உயர்ந்தது. அதன்பின், சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் மூன்றாம்கட்ட ஈழப்போரின் ஆரம்ப ஆண்டில் அதாவது 1995ல் 3500 கோடி ரூபாவாக, என்றுமில்லாதவாறு உயர்ச்சிகண்டது.

இதேபோல 1990ல் இருந்து 1994ம் ஆண்டு வரையான 5 வருட காலப் பகுதியில் 2679 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 5565 இராணுவத்தினர் காயமடைந்தனர். இது பின்னர் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில், அதாவது 1995ம் ஆண்டு – ஒரு வருடத்தில் மாத்திரம் 1621 இராணுவம் கொல்லப்பட்டு, 545 இராணுவம் காயமடைந்தது. அத்துடன் 40 இராணுவம் காணாமல் போயுள்ளது. (இது சிறீலங்கா தரப்புத் தகவல்)

இந்த ஆண்டு இராணுவத்தின் இழப்பு இன்னும் அதிகரிக்கும் என்பதுடன், சிறீலங்காவின் போர்ச் செலவீனமும் மேலும் அதிகரிக்கும் என்பது வெளிப்படையானது. இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்துவோம் என தமிழ்மக்களுக்கு வழங்கிய உறுதிமொழி காற்றில் பறக்கவிடப்பட்டதுபோல், சிங்கள மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் சந்திரிகா அரசு எதுவித சங்கடமும் இன்றி காலில் போட்டு மிதிக்கின்றது.

— சுப்பு

## மக்களின் உயிர் மூச்சைக்கொண்டு

நீ துண்டித்த தலையை
மக்கள் எனக்குத் திருப்பித் தருவார்கள்
நீ தோண்டி எடுத்த கண்கள்
காலத்தின் விழிகளாகும்
நீ வெட்டியெறிந்த விரல்கள்
ஒடுக்கப்பட்டோரின்
சகாப்தத்தை எழுதும்
மக்களின் உயிர்மூச்சைக்கொண்டு
வரலாறு உனது தற்காலிக
வெற்றிகளுக்கு
நிரந்தர சமாதி கட்டும்.

தெலுங்கு மூலம்: சிவசாகர்
மொழிபெயர்ப்பு: எஸ்.வீ. ராஜதுரை, வ. கீதா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நீதியான சமாதானத்திற்கான சர்வதேச மகாநாடு



அவுஸ்திரேலியாவில், கன்பரா நகரில், யூன் மாதம் 27, 28ம் திகதிகளில், 'நீதியான சமாதானம்' என்ற தலைப்பில் மகாநாடு ஒன்று இடம்பெற்றது. இம்மாநாட்டை அவுஸ் திரேலிய மனித உரிமை அமைப்பும், அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து நடாத்தி யிருந்தன. இம்மகாநாட்டின் இறுதித் தீர்மானம், "நீதியானதும், நிரந்தர மானதுமான அரசியல் தீர்வுகாணப் படுவதற்கான பேச்சுவார்த்தை, இரண்டு யதார்த்த உண்மைகளின் அடிப்படை யில் இடம்பெற வேண்டும். அதாவது, இலங்கைத் தீவில் தமிழ், சிங்கள தேசிய இனங்கள் உள்ளன. அவற்றிற்கு வரலாற்று ரீதியாக வரையறுக்கப் பட்ட பாரம்பரிய பிரதேசங்கள் உள் ளன என்பது அங்கீகரிக்கப்பட வேண் டும்" என்று அறைகூவல் விடுத்தது.

இம்மகாநாட்டிற்கான பேராளர் கள் தென்னாபிரிக்கா, இலங்கை, ஐரோப்பா, மலேசியா, இந்தியா, நியூசி லாந்து, அமெரிக்கா, ஐக்கிய இராட் சியம் ஆகியவற்றிலிருந்து வந்திருந்த னர்.

மகாநாடு, 27ம் திகதி காலை 9.30 மணிக்கு அவுஸ்திரேலியாவின் மூன்று முக்கிய பிரமுகர்கள் சமாதான விளக்கை ஏற்றி வைத்ததுடன் ஆரம்ப மானது. அவுஸ்திரேலிய வெளிவிவகா ரம், பாதுகாப்பு, வர்த்தகத்திற்கான பாராளுமன்ற கூட்டுக்குழுவின் தலை வர், திரு. இயன் சின்கிளேயர், அவுஸ் திரேலிய வெளிநாடுகளிற்கான உதவி அமைப்பின் (ACFOA) தலைவர் திரு. பில் ஆம்ஸ்ரோங், அவுஸ்திரேலிய மனித உரிமைகள் அமைப்பின் தலை வர் திரு. அலெக்ஸ் கில்கூர் ஆகி யோரே அம்மூவராகும். மகாநாட்டு ஆரம்ப உரையை வண. ரிச்சட் வூட் டன், வரவேற்புரையை பேராசிரியர் சி.ஜே.கலியேசரும் நடத்தினர்.

மகாநாடு வெற்றிபெறுவதற்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை தென்னா பிரிக்க ஜனாதிபதி திரு. நெல்சன் மண்டேலா அனுப்பியிருந்தார். தமிழ் மக்களின் துன்பங்களில் அக்கறையை யும், அவர்களுக்கு நீதியான சமாதா னம் கிடைப்பதற்கான விருப்பத்தை யும் வெளிப்படுத்துவதாக அமைந்த அறிக்கை மகாநாட் டிற்கு மிகுந்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்ததோடு, மகா நாட்டில் பெரும் வரவேற்பை யும் பெற்றது.

மகாநாட்டு பேச்சாளர்க ளில், அவுஸ்திரேலிய நீதிமன்ற நீதிபதியும், முன்னாள் சர்வ தேச நீதியாளர் ஆணைக்குழு வின் (International Commission of Jurists) தலைவருமான திரு. மார்க்கஸ் அயன்வீல்ட் அவர்களின் பேச்சு காத்தி ரமானதாகவும், தமிழ் மக்களின் சுயநிர் ணய உரிமையை வலியுறுத்துவதாக வும் இருந்தது. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான கோரிக்கை இலங்கையில் நடைபெறும் போரின் அடிநாதமாக உள்ளது. தமிழ் மக்க ளின் தனித்துவமான மொழி, பண் பாடு, புறம்பான மத அடையாளம், வரையறுக்கப்பட்ட நிலம் ஆகியவற் றின் காரணத்தினால் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய வர்கள். அதாவது, தங்கள் அரசியல் தலைவிதியை தாங்களே தீர்மானிக்க உரித்துடையவர்கள். இனப்பிரச்சி னையின் தீர்வுக்கான முயற்சிகள் முடுக்கிவிடப்படுவதற்கு முன்னர், அதற்கு அடிப்படைக் காரணிகளாக



பீற்றர் ஷால்க்





குமார் பொன்னம்பலம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருக்கின்ற, தமிழ் மக்களின் சமத்துவத்திற்கான போராட்டமும், அதன் வெளிப்பாடுகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதாவது அம்மக்களது ஆயுதப் போராட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்று திரு. மார்க்கஸ் அயன்வீல்ட் தெரிவித்தார்.

டெல்லியிலிருந்து வெளிவரும் "OUTLOOK" சஞ்சிகையின் தென்னிந்திய அலுவலகப் பொறுப்பாளர், திரு. பன்னீர்செல்வன் பேசுகையில், விடுதலைப் புலிகள் இல்லாமல் தீர்வு எதுவும் சரிவராது என்றார். மேலும் அவர் தெரிவிக்கையில், 'விடுதலைப் புலிகளுக்கான இவ்வங்கீகாரம் எனது கருத்தோ அல்லது தமிழ் மக்களது கருத்தோ மட்டமல்ல; இலங்கை, இந்திய அரசாங்கங்களின் கருத்தும் இதுதான்" என்று அவ்விரு அரசாங்கங்களும் விடுதலைப் புலிகளுக்கு கடந்தகாலப் பேச்சுவார்த்தைகளில் வழங்கிய அங்கீகாரத்தை எடுத்துக் காட்டினார்.

அமெரிக்க மனித உரிமைகள் சட்டத்தரணி திருமதி கரன்பாக்கர் தெரிவிக்கையில், "தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீது 40 ஆண்டு காலத்துக்கு மேலாக சிறீலங்கா அரசாங்கங்கள் தொடர்ச்சியாகவும், பாரதூரமாகவும் செய்து வந்த மீறல்கள், தமிழ் மக்களை சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாக்கி விட்டன." என்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை அண்மைக்கால அடக்குமுறை வரலாற்றோடு ஒப்பிட்டு நோக்கி தனது ஆய்வுரையை நிகழ்த்தினார்.

தென்னாபிரிக்காவிலிருந்து வந்த பேராளர்களே கூடிய எண்ணிக்கையில் இருந்தனர். சட்டத்தரணி திரு. ராஜா நாயுடு, சர்வதேச மத்தியஸ்த சேவை என்ற நிறுவனத்தின் இயக்குனராகவும், நெல்சன் மண்டேலாவின் தேசிய அரசாங்கத்தில் ஒரு அமைச்சராகவும் இருந்துள்ளார். மேலும், தென்னாபிரிக்க பாராளுமன்ற உறுப்பினரும், நெல்சன் மண்டேலாவின் ஆலோசகர்களில் ஒருவருமான திரு. பிரவீன் கோர்டான் இன்னொரு பேராளராகும். மேலும் சிறீலங்காவின் ஒடுக்குமுறைக்கெதிரான மக்கள் இயக்கத்தின் பிரதிநிதிகளாக மூவர் தென்னாபிரிக்காவிலிருந்து வந்திருந்தனர். திரு. ராஜா நாயுடு தமிழ் விடுதலை இயக்கத்தை ஆபிரிக்க தேசிய காங்கிரஸோடு ஒப்பிட்டுப் பேசினார். திரு. பிரவீன் கோர்டான், தென்னாபிரிக்க அரசாங்கம் இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உதவி செய்ய முன்வரலாம் என்ற கருத்தை வெளியிட்டார்.

இரண்டாவது பெரிய பேராளர் குழு இலங்கையிலிருந்து வந்திருந்தது. தமிழீழத்திலிருந்து வந்திருந்த விக்கார் ஜெனரல் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவலின் பேச்சு மிக உருக்கமாக இருந்தது. உண்மைக்குச் சாட்சியமாக வந்துள்ளதாக அவர் தெரிவித்தார். பத்திரிகைத் தடையின் பின்னர், சமாதானத்தைக் காணப்போவதாகக் கூறி, படிப்படியாகப் போரை விஸ்தரித்த தானது அரசாங்கத்தின் இரகசியத் திட்டத்தை வெளிப்படுத்துவதாகக் கூறினார். இத்திட்டம் வேறொன்றுமல்ல; தமிழ் மக்களை இராணுவ ஆட்சியின் கீழ் அடக்குவதுதான் என்றார். "மனித சமூகத்துக்குத் தொண்டு புரியும் கடவுளின் சேவகனாக இங்கு நான் உங்கள் முன் நிற்கிறேன். காதைச் செவிடுபொடியாக்கும் ஆயிரக்கணக்கான குண்டுகள் எம்மண்ணில் விழுந்து பரிசுத்தமான உயிர்களைப் பலிகொள்ளும் இவ்வேளையில், மோசஸ் முன்னாளில் கூறியதைப் போல், 'அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு எனது மக்களைப் போக விடு' என்று அழைக்கிறேன் என்றார்.

நவசமாஜக் கட்சியின் பிரதிநிதியாக வைத்தியக் கலாநிதி சுனில் ரட்ணபிரிய கொழும்பிலிருந்து வந்து கலந்துகொண்டார். அரசாங்கத்தின் செயல்பாடுகள், இராணுவ – இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதாகவும் அதன் மூலம் சமாதானத்திற்கென வாக்களித்துப் பதவியில் அமர்த்திய மக்களை சந்திரிகா ஏமாற்றிவிட்டதாகவும் தெரிவித்தார். நவசமாஜக்கட்சி,




எப்போதும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், சுயாட்சிக்கும் போராடி வந்ததாகவும், ஏனைய தொழிற்சங்கங்களும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பொறுத்தவரை இதே கருத்தைக் கொண்டுள்ளதாகவும் தனது பேச்சின்போது தெளிவுபடுத்தினார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளர் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் கொழும்பிலிருந்து வந்து கலந்து கொண்டார். சிங்கத்தின் குகையிலிருந்து வந்த புலி என்ற அறிமுகத்துடன் தனது பேச்சினை ஆரம்பித்தார். சேர். பொன்னம்பலம் அருணாசலம் காலத்திலிருந்து இன்றைய இராணுவத் தீர்வு முயற்சி வரை சிங்கள இனவாதம் எவ்வாறு விடாப்பிடியாக உள்ளது என்பதை வரலாற்று ரீதியாக எடுத்துக்காட்டினார். இவ்வினவாதம் வளர்ந்து வருகின்றதே தவிர தளரவில்லை. சிங்கள அரசாங்கம் வெளிநாட்டு மத்தியஸ்த உதவிகளை நிராகரித்துவிட்ட நிலையில் "நிலையான சமாதானம்" கிடைப்பதற்கு தற்போது வழியே இல்லை. சிறீலங்கா அரசின் அணுகுமுறை இவ்வாறு பிழையாக இருக்கும்போது, சமாதானத் தீர்வுத்திட்டங்களில் அர்த்தம் எதுவும் இல்லை. தமிழ் சிங்கள மக்கள் இணைந்து தமிழீழத் தனியரசை உருவாக்கும் போதுதான் "நீதியான சமாதானம்" கிடைக்கும் என்று வலியுறுத்திக் கூறினார்.

திரு. விஸ்வநாதன் ருத்ரகுமாரன், விடுதலைப் புலிகளின் அமெரிக்கப்


பில் ஆம்ஸ்ரோங்


கரன் பாக்கர்


லோரன்ஸ் திலகர்


அருட்தந்தை இமானுவல்


சி.ஜே. கலியேசா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பிரிவின் அரசியல் ஆலோசகர் என்ற ரீதியில் தனது கருத்தினை வெளியிட்டார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தாயகம் ஆகியவை அங்கீகரிக்கப்படுதல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னோடியான விடயங்கள் என்று கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரான திரு லோரன்ஸ் திலகர், சிறீலங்கா அரசாங்கத்துடன் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி உற்றதற்கான காரணங்களை விளங்கப்படுத்தினார். சிறீலங்கா அரசாங்கம் சமத்துவ அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தாதது, பொருளாதாரத் தடையை பேச்சுவார்த்தையில் அழுத்தக் கருவியாகப் பயன்படுத்தியது, அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் ஆகியவையே பேச்சுவார்த்தை முறிவடையக் காரணம் என்று கூறினார். இதற்குப் பின்னணியில் அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுத்திட்டம் செயல்பட்டதென்றும் தெளிவுபடுத்தினார்.

இவ்விராணுவத் தீர்வு அணுகுமுறை தற்போதும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவித்த அவர், சிறீலங்கா அரசாங்கம் போரை விஸ்தரிப்பதை விடுத்து, தனது துருப்பினை ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து மீளப் பெறுவதன் மூலமும், பொருளாதாரத் தடையை நீக்கி மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கச் செய்வதன் மூலமும் நல்லெண்ணச் சூழலை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். சர்வதேச மத்தியஸ்தத்துடனும், சமத்துவ அடிப்படையிலும், விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமெனில், சர்வதேச சமூகம், தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் யதார்த்தங்களை ஏற்றுக்கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மகாநாடு இடம்பெற்ற வேளை, அவுஸ்திரேலிய வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, வர்த்தகம் ஆகியவற்றிற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு திரு. லோரன்ஸ் திலகரை அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் வைத்து சந்தித்தது. அச்சந்திப்பில் திரு. திலகர் இனப்பிரச்சினை தீர்வுக்கான தமிழரது நிலைப்பாட்டை எடுத்து விளக்—கினார்.

மேலும் பல அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மகாநாட்டில் உரையாற்றினர். ஜேர்மன் – மலேசியன் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி டாக்டர் டக்மார் ராஜநாயகம், அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஜோன் பவர்ஸ், தமிழ் முஸ்லீம் எழுத்தாளர், மலேசியாவைச் சேர்ந்த திரு. பீர் முகமது, முன்னாள் ரூபவாகினித் தலைவரும், பீ.பீ.சி. சிங்களச் சேவைப் பொறுப்பதிகாரியுமான திரு. வசந்தராஜா, நியூசிலாந்து மஸே பல்கலைக்கழக மானிடவியல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் மார்கரட் ரவிக், சுவீடன், உப்சலாப் பல்கலைக்கழகத்தின் மத வரலாற்றுப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷால்க், மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தின், விவசாய பீடத்தின், மூத்த விரிவுரையாளர் கலாநிதி சிறீஸ்கந்தராஜா, அவுஸ்திரேலிய வெளிநாட்டு உதவிகளுக்கான அமைப்பின் (ACFOA) நிர்வாக இயக்குனர் செல்வி ஜனற் ஹன்ற், இலங்கைக்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகச் செயலாளர், லண்டனைச் சேர்ந்த பிரையன் வூல்ப், அவுஸ்திரேலிய தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த ஆனா பரராஜசிங்கம் ஆகியோர் உரையாற்றி, உயர்தர மகாநாடாகச் சிறப்பித்தனர்.

மகாநாட்டு உபகுழு, நீதிபதி மார்க்கஸ் அயன்வீல்ட் தலைமையில் கூடி மகாநாட்டுத் தீர்மானம் ஒன்றைத் தயாரித்தது. அது மகாநாட்டுப் பேராளர்கள் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மகாநாட்டுத் தீர்மானம், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்; அவர்களுக்கு வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட தாயகபூமி உண்டு என்ற யதார்த்தங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அதன் அடிப்படையில் சர்வதேச உதவி, கண்காணிப்பில் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என்றும் கூறியது. தமிழரிடம் ஆட்சி அமையக்கூடியதாக தீர்வு அமைய வேண்டும் என்று வலியுறுத்திய அத்தீர்மானம், பத்திரிகைத் தடை, பொருளாதாரத் தடை ஆகியவற்றை நீக்கவேண்டும் என்றும் சிறீலங்கா அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. இவ்வடிப்படைகளில் இத்தீர்மானம், காத்திரமான, தமிழர்களின் அடிப்படை அபிலாசைகளை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கின்ற ஒரு ஆவணமாக அமைந்தது. இத் தீர்மானத்தை வரவேற்று விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் பின்னர் வெளியிட்ட அறிக்கை, மேலே கூறிய வாறான பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் முகமாக, சிறீலங்கா அரசாங்கம், தனது இராணுவ நடவடிக்கைகளை கைவிட்டு, தனது படைகளை ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து அகற்றவேண்டும் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறியது.

அவுஸ்திரேலிய சமாதான மகாநாடு, தமிழரது போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச அறிஞர்களுக்கூடாக உலகிற்கு எடுத்துக்கூறுவதற்கான தளமாக அமைந்து வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. மறைமுக ஆதரவு அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில், சர்வதேச சமூகத்தின், குறிப்பாக மேற்குலக நாடுகளின் ஆதரவை, தமிழர் போராட்டத்திற்கு திருப்புவதற்கான நெம்புகோலாகவும் இம் மகாநாட்டைக் கொள்ளலாம்.

— ரஜீவன்
















www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# யாழ் குடாநாட்டின் மீதான இராணுவ ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும்



சென்ற இதழ் தொடர்ச்சி...



சூரியக் கதிர் 3 நடவடிக்கை, குறுகிய அரசியல் இலாபங்களைக் கருத்தில் கொண்டு எடுக்கப்படவில்லை என்று அரச தரப்பில் கூறப்படுகின்றது. அப்படி என்றால் அதற்கான காரணம் எதுவாக இருக்கும்? தற்போது அரசிடம் இருக்கும் மூலவளங்களைக் கொண்டு, அல்லது மேலதிக வளங்களைத் திரட்டுவதன் மூலம் தமிழரின் தாயகப் பகுதிகள் அனைத்தையும் ஒரு சில மாதங்களில் கைப்பற்றிவிடலாம்; இறுதியில் விடுதலைப் புலிகளை அழித்து தமிழரின் போராட்டத்தையும் அழித்து விடலாம். இத்தகு நோக்கத்தோடுதான் அனுருத்த ரத்வத்த தனது சூரியக்கதிர் நடவடிக்கைகளை ஆரம்பித்தார் என்ற வாதம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதுவே காரணமென்றால், இந்த இராணுவ மூலதந்திரோபாயம், இராணுவ அழிவில் மட்டுமல்ல, பொருளாதார, அரசியல் அழிவில் முடியுமென்பதே எனது கருத்தாகும்.

சூரியக்கதிர் நடவடிக்கையின் நோக்கங்கள் குறித்து இராணுவத் தளபதி பின்வருமாறு கூறியிருந்தார். "மூன்று நோக்கங்களை மனதில் கொண்டு செயற்படுகிறோம். வலிகாமத்திலிருந்து வெளியேறிய மக்களை திருப்பிக் கொண்டு வருவதற்கான வழி ஒன்றைத் திறந்து விடுவது. இரண்டாவது கிளாலி நீரேரியைக் கைப்பற்றுவது, மூன்றாவது தென்மராட்சியைக் கைப்பற்றுவது."

அவர் கூறிய மூன்று நோக்கங்களில் முதலாவது மிக முக்கியமானதெனக் கருதுகிறேன். இரண்டாவதும் மூன்றாவதுமான விடயங்கள், முதலாவது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் என்பது எனது கருத்து. அரசாங்கத்தின் பிரதான திட்டம் கைப்பற்றிய பகுதிகளில், இராணுவ அதிகாரத்தின் கீழ், ஒரு சிவில் நிர்வாகத்தை உருவாக்குவதுதான். அந்த நிர்வாகம், அரசாங்கத்தின் அரசியல் நாடகத்தை நடத்துவதற்குரிய அடிப்படைகளை அங்கு இடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தத் திட்டம் இரண்டு நோக்கங்களைக் கொண்டிருந்தது. முதலில், வெளிநாட்டு அரசாங்கங்களை திருப்திப்படுத்தி அவற்றிடம் இருந்து உதவிகளைப் பெறுவது. அவ்வுதவிகள் இல்லாவிடில், போர் முயற்சிகளே தகர்ந்து போகும். அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் சிவில் நிர்வாகம் ஒன்றை தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தார்கள் என்று உலக சமூகத்தை நம்பவைக்க வேண்டியிருந்தது. இரண்டாவது, தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முரண்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கமும் இருந்தது. தோல்வியில் முடிந்த சமாதானப் பேச்சுவார்த்தையின் போதும், இந் நோக்

**வசந்தராஜா**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கமே அரசாங்க மூலதந்திரோபாயத் திட்டத்தின் பிரதான பகுதியாக இருந்தது. தமிழர் போராட்டத்தை நசுக்குவதற்கு விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து பிரித்தல் வேண்டும் என அரசாங்கமும், இராணுவத் தலைவர்களும் நம்பினார்கள்.



சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ், குடாநாட்டு மக்களில் ஒரு பகுதியினரை வலிந்து கொண்டு வந்து தனது நோக்கங்களை அரசாங்கம் நிறைவேற்ற முயல்கிறது. இம்முயற்சியின் போது, பல மோசமான அதிர்ச்சிகளை அரசாங்கம் சந்திக்கும் என்றே கருதுகிறேன்.

மிகக் கொடூரமான இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ், திறந்த சிறைக் குடியிருப்புக்களில் அம்மக்களை அடக்கி வைத்துக் கொண்டு தனது திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் எண்ணுகிறது.

“பொருளாதாரத் தடை”, “இராணுவ பயங்கரவாதம்” ஆகியவற்றை நுணுக்கமாகக் கையாண்டு விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாட்டை வளர்த்து விடலாம் என்று அரசாங்கம் அசட்டுத்தனமாக நம்புகிறது. அம்மக்களுக்கு பணம், உணவு, மின்சாரம், மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை லஞ்சமாகக் கொடுத்து அம்மக்களை அடிபணிய வைக்க முனைகிறது. ஆயினும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதையே அறிய முடிகிறது. உணவுப் பொருட்களின் விலை வானளாவ உயர்ந்துள்ளதையும், மக்கள் நீண்ட வரிசைகளில் நின்றும் உணவுப் பொருட்கள் கிடைக்காமல் வெறும் கையோடு திரும்புவதையும் அங்கு காணக்கூடியதாக உள்ளது. அதே வேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் மீது பூரணமான பொருளாதாரத் தடையை விதித்து மக்களைப் பட்டினி போட்டு மண்டியிட வைக்க அரசாங்கம் முயல்கிறது. மேலும், கண்மூடித்தனமான எறிகணை வீச்சு, விமானக் குண்டு வீச்சு ஆகியவற்றின் மூலம், அப்பகுதிகளில் மிக மோசமான சூழ்நிலையை உருவாக்க எண்ணுகிறது. இத்தகு நடவடிக்கைகளின் மூலம், தமிழ் மக்களின் மனவுறுதியைத் தகர்த்துவிடலாம் என்று அரசாங்கம் நம்புவது போல் தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னியில் அகதிகளாக வாழ்கின்ற மக்கள், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் “உயர்வதைக்” கண்டு அங்கு திரும்பி வருவதற்கான உந்துதல் பெறலாம் என்று அரசு கருதுகிறது. இத்தகு சூழ்நிலை உச்சத்தை அடையும் போது விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் முரண்பாடு வெடிக்கும் என்றும் அரசாங்கம் எண்ணுகிறது. ஆனால் இதற்கு மாறாக, அரச தடைகளுக்கெதிரான மக்களின் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அடிக்கடி இடம்பெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையுடன், அவர்களை ஓரம் கட்டும் அரசியல் நடவடிக்கை இணைந்து செல்ல வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கணிப்பாக இருந்தது. இதனை வலியுறுத்துவதாக, லெப்டினட் ஜெனரல் தலுவத்தை அளித்த பேட்டியில், “இராணுவம், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கீழ்மட்டக் கிளர்ச்சியாகக் குறைத்து விடும். இறுதியில் கிளர்ச்சி பிசிபிசுத்துப் போய்விடும்” என்று கூறியுள்ளார்.

உண்மையில், அரசாங்கமும், இராணுவத் தலைமையும் தங்கள் மூல தந்திரோபாயத்தில் பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால், அதில் இரண்டு அடிப்படைத் தவறுகள் இருப்பதாக கருதுகிறேன். ஒன்று, தமிழரது விடுதலைப் போராட்டம் குறித்துக் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. குறிப்பாக கடந்த பத்து ஆண்டு காலமாக துரித கதியில் வளர்ந்து வந்த தமிழ் தேசிய உணர்வின் ஆழத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். இரண்டாவது, தென்பகுதியின் அரசியல், பொருளாதார காரணிகளும், தமிழ் நாட்டின் நிலைமைகளும் நிலையானவை என்ற அடிப்படையில் இராணுவ மூலதந்திரோபாயம் வகுக்கப்பட்டிருந்தது. இவை வேகமாக மாறும் தன்மை கொண்டவை என்பதே உண்மையாகும்.

முதலாவது தவறை ஆராய்வோம். இராணுவம் கைப்பற்றிய குடாநாட்டுப் பகுதி, விடுதலைப் புலிகளால் தலைமை தாங்கப்பட்ட அரச விரோதம் கொண்ட மக்களால் சூழப்பட்டிருந்தது.

குடாநாட்டை தமிழர் தாயகத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து முற்றாகப் பிரித்து வைத்து, அங்கு விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்குரிய கடும் கண்காணிப்பு நடவடிக்கைகளைக் மேற்கொண்டது. அதே வேளை, மக்களுக்கு பணம் போன்ற ஒருசில வசதிகளைச் செய்து கொடுத்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவர்களின் நன்மதிப்பைப் பெற்று விடலாம் என்றும் இராணுவம் கருதியது. இது சரிவரும் என்று நான் எண்ணவில்லை. சமுதாயம் முழுமையும் போர்ச் சூழ்நிலையிலேயே வளர்ந்தது என்பதை நாம் மறுத்தல் ஆகாது. கொடிய சிங்கள இராணுவம், தங்கள் தாயகத்தை ஆக்கிரமித்துக்கொண்டு தொடர்ச்சியான குண்டுவீச்சுக்கள் மூலம், தங்கள் தாய், தந்தை, சகோதரங்களைக் கொன்றொழிப்பதே அவர்களது அனுபவமாக இருந்தது. இளம் சந்ததி மட்டுமல்ல, முழுச்சமுதாயமுமே ஆக்கிரமிக்கப்பட்ட தம் தாயகத்திலிருந்து கடைசி சிங்கள இராணுவத்தினன் நீங்கும் வரை ஓயப்போவதில்லை.

குடாநாட்டில், இராணுவம், ஒவ்வொரு தமிழனையும் குறிப்பாக இளைஞரை அச்சத்தோடும், சந்தேகத்தோடும் பார்ப்பதாக தகவல்கள் கூறுகின்றன. இது கடுமையான இராணுவ நிர்வாகத்திற்கு வழிவகுத்ததோடு, விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட பகுதிகளை பெரும் கூட்டுச் சிறை முகாம்களாகவும் மாற்றியுள்ளது. வலிகாமத்தில், கண்காணிப்பதற்கு வசதியாக இளைஞர்கள் பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கப்படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

இளைஞர்களும், யுவதிகளும் கண்மூடித்தனமாகக் கைதுசெய்யப்பட்டு காணாமல் போகும் விடயங்களும் இடம்பெறுகின்றன. இது 1980–ம் ஆண்டுகளில் தென்னிலங்கையில், மக்கள் விடுதலை முன்னணி (JVP) கிளர்ச்சியின் போது, 60,000 சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட பயங்கரக் காலத்தை நினைவுபடுத்துகிறது. வடக்கில் தற்போது கையாளப்படும் கொடூர வழிமுறைகள், தெற்கில் கையாளப்பட்டவையோடு ஒத்ததாகவேயுள்ளன. இராணுவம் விடுதலைப் புலி ஆதரவாளர்களை அடையாளம் காட்ட முகமூடிகளைப் பயன்படுத்துவதாக அறிகிறோம். இந்த முகமூடிகள் இராணுவத்தால் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களாக உள்ளனர். சிங்கள இராணுவத்தோடு இணைந்து செயற்படும் இவர்கள் பிரதான வீதிகள், சந்திகளில் நிறுத்தி வைக்கப்படுகின்றனர். முகமூடி, ஒருவரை விடுதலைப்புலி ஆதரவாளர் எனத் தலையாட்டும் பட்சத்தில் அவர், இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்படுகிறார். ஜே வி. பி. கிளர்ச்சியின் போது, இவ்வாறு இராணுவத்தால் அமர்த்தப்பட்ட முகமூடிகள், ஒவ்வொருநாளும் ஒரு சிலரையாவது தலையாட்டிக் காட்டிக் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அல்லாது போனால் தம்மீதே இராணுவம் சந்தேகம் கொண்டுவிடும் என்று அவர்கள் பயந்ததே காரணம். இராணுவத்தின் மீதான தமது விசுவாசத்தை நிரூபிக்கும் ஒரே நோக்கத்திற்காக தலையாட்டி பல அப்பாவி இளைஞர்களை மரணத்திற்கு அனுப்பி வைத்தனர். இதே போன்ற விடயங்கள் தற்போது வடக்கில் பெருமளவில் நடைபெறுவதாக அறிகிறோம். விடுதலைப்புலிகளின் சிவில் நிர்வாகம் பல்லாண்டு காலமாக வடபகுதியில் இருந்த காரணத்தினால், விடுதலைப் புலிகளோடு தொடர்புகொள்ளாத ஒரு சிலராவது வடபகுதியில் இருப்பர் என்று நான் கருதவில்லை. எனவே ஏவலாக அமர்த்தப்பட்ட முகமூடிகள், பலரை விடுதலைப்புலி ஆதரவாளர்களாக அடையாளம் காட்டுவதில் கஸ்டம் இராது.

நான் சொல்லவரும் விடயம் இது தான்: தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தொடர்ந்து தாக்கிய வண்ணம் இருப்பர். இதனால் இராணுவம் மிகுந்த பயத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகும். இறுதியில் இராணுவ நிர்வாகம், தற்போது உள்ளதைவிட மேலும் தமிழ் மக்களோடு முரண்படும் நிலைக்கே தள்ளப்படும். விடுதலைப்புலிகள், தமது செயற்பாடுகளை ஆற்றுவதற்கான மேலும் பண்பட்ட நிலமாக தமிழ் மக்கள் அமையும் சூழ்நிலையே ஏற்படும்.

அரசாங்கத்தின் மூலதந்திரோபாயத்தில் உள்ள இரண்டாவது ஓட்டையைத் தற்போது ஆராய்வோம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடத்தப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகள், வேறெவற்றோடும் தொடர்பற்றவை என்று கருதி செயற்படுவது பெருந்தவறான முடிவாகும். தென்னிலங்கையின் அரசியல், பொருளாதார நிலைமைகளுக்கும், தேர்தல் நடந்து முடிவுற்ற தமிழ்நாட்டு நிலைமைகளுக்கும், வடக்கு, கிழக்கு பகுதி நிலைமைகளுக்கும் இடையிலான நேரடித் தொடர்புகளை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது.

தென்னிலங்கையில், வேகமாக வளர்ந்துவரும் பெரும் பொருளாதார, அரசியல் நெருக்கடிக்குள் சந்திரிகா



யாழ் பொதுசன நூலகத்தை மீளத் திருத்தியமைக்கப் போவதாக சந்திரிகா கயிறுதிரித்துக்கொண்டிருந்தார். இதன் மூலம் தான் சர்வதேச ரீதியாக நன் மதிப்பைப் பெற முயல்வதும், பெரும் நிதியை இத்தகைய புனரமைப்புக்களுக்கென செலவிட வேண்டியருப்பதாகக் கூறி அந்நிதியைப் பெற்று தமிழ் இன அழிப்பை மேற்கொள்வதற்கான அவரது நாடக உத்தியைப் புரியாத ஒரு பேரினவாதி, 'யாழ்ப்பாணத்தில் அமைச்சர்களால் எரிக்கப்பட்ட நூல்நிலையம் பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கவலைப்படுகிறது. அதனைத் திருத்தி அமைக்கப் போவதாகவும் கூறுகின்றது. ஆனால் அண்மையில் மத்திய வங்கிய குண்டு வெடிப்பில் சிதைக்கப்பட்ட மத்திய வங்கி நூல்நிலையம் பற்றி அது கவலை கொள்வதாகவில்லை. அங்கு வாக்கு வேட்டையாடலாம் என எண்ணுகிறது போலும்' என கொழும்பு தினசரியொன்றிற்கு எழுதியிருந்தார். தமிழர் எதிர்ப்பு உணர்வு அத்துணை தூரம் அவருள் வளர்ந்துள்ள நிலையில், சந்திரிக்கா அரசின் கபட நாடகத்தைப் புரிந்துகொள்ள முடியாது போய் அவரைக் கோபம் கொள்ள வைத்திருக்ககிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அரசாங்கம் சிக்குறுவதை அரசியல் அவதானிகள் எடுத்துக் காட்டுகின்றனர். பிரபல கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றின் நிருபர் குறிப்பிடுகையில், "நாடு என்றுமில்லாத அரசியல், சமூக குழப்ப நிலையில் காணப்படுகின்றது" என்று தெரிவித்துள்ளார். இன்னொரு அரசியல் ஆய்வாளர் தெரிவிக்கையில், "சந்திரிகா அரசாங்கம் தகர்ந்து வருகின்றது." என்றார்.

பாராளுமன்றத்தில் ஒரேயொரு மேலதிக வாக்குப்பலத்தில் தங்கியுள்ள ஐக்கிய முன்னணி அரசாங்கம் உடைந்து கொட்டுப்படுவதற்கு பொருளாதார நெருக்கடியே காரணமாய் அமையும். தமிழரது போராட்டத்திற்கு எதிராக உயர் தொழில் நுட்பம் நிறைந்த போர் ஒன்றை அரசாங்கம் நடாத்துவதால் பொருளாதாரம் நாளாந்தம் சீர் குலைந்து போகிறது. அரசாங்கம் போரை நடத்துவதற்கு கோடிக்கணக்கான ரூபாய்களை கடன் பெறுவதால், அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. சமூக நலச் செயற்பாடுகள் கைவிடப்படுகின்றன. கடன்களுக்குள்ளான வட்டி வீதங்கள் உயர்ந்து செல்கின்றன. முதலீடுகள் இல்லாது போகின்றன. வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை நிரப்பமுடியாதவாறு விரிவடைந்துவருகின்றது.

இந்த அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள், வெளிநாட்டு முதலீடுகளிலேயே முழுமையாகத் தங்கியிருக்கின்றது என்பதை மறத்தல்கூடாது. அண்மையில் மத்திய வங்கியையும், எண்ணைக் குதங்களையும் நிர்மூலமாக்கியும், துறைமுகத்தைத் தாக்கியும் கொழும்பில் பொருளாதார இலக்குகள் மீது தாம் எந்த நேரமும் தாக்கும் வல்லமை படைத்தவர்கள் என்பதை விடுதலைப்புலிகள் நிரூபித்துக் காட்டினர். "முதலீடுகளுக்கான சொர்க்கம்" என்று இலங்கைக்கிருந்த பெயரின்மீது விழுந்த பேரிடியாய் இது அமைந்தது.

செலவு மிகுந்த போரில் அரசாங்கம் மேலும், மேலும் புதையுண்டு வருகின்றது. அதுமாத்திரமல்ல, சந்திரிகா குமாரதுங்க இராணுவத்தின் கைப்பொம்மையாக மாறி வருகிறார். இவை, முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதை மேலும் குறைக்கும்.

மலையகத் தமிழ் மக்கள், தமிழர் போராட்டத்துக்கு கூடுதலான ஆதரவைத் தெரிவித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மையில், 5 இலட்சம் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் ஒருவாரம் செய்த வேலை நிறுத்தத்தினால், அரசாங்கத்திற்கும், தோட்ட முதலாளிகளுக்கும் பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டதையும் குறிப்பிடவேண்டும்.

இலங்கையின் பொருளாதாரமும், அரசியல் நிலைமைகளும் அதலபாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கும் போது, யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றியது குறித்து அரசாங்கம் பெருமை பாராட்டிக் கொள்வது அர்த்தமற்றது.

போர்ச்செயற்பாடுகளில் இதுவரை காலமும் உதவியாக இருந்து வந்த இந்திய மத்திய, தமிழ்நாடு மாநில அரசாங்கங்கள் அகற்றப்பட்டமை இலங்கை அரசாங்கத்துக்கும் பெரும் கவலையை அளித்துள்ளது. இதுவரை காலமும் ராஜீவ் காந்தி சம்பவத்தை வைத்தே இலங்கை அரசு, தனது போருக்கான ஆதரவை இந்தியாவிடமிருந்து பெறமுடிந்தது. காங்கிரஸ் கட்சியின் தோல்வியுடன் அக்காரணியை இனிமேல் இலங்கை பயன்படுத்த முடியாது.



தமிழ்நாடு தி.மு.க அரசு, மத்திய அரசில் செல்வாக்கு வகிக்கும் அளவிற்குப் பலம் வாய்ந்ததாக உள்ளது. எனவே தமிழ்நாட்டு மக்களின் தூண்டுதலின் அடிப்படையில், தி.மு.க அரசு, இலங்கைத் தமிழ் மக்களின் அவல நிலை குறித்து ஏதாவது நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்படும். கடந்த வருடம் டிசம்பர் மாதம், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் திரண்டெழுந்து, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஒருநாள் கடையடைப்பைச் செய்து தமிழ்நாடு முழுவதையும் ஸ்தம்பிக்கச் செய்ததை நாம் மறக்க முடியாது. எனவே இனிவரும் காலத்தில் தமிழ்நாட்டு நிலைமை வெறும் நடுநிலையில் இருந்து இலங்கைத் தமிழர் போராட்டத்திற்கு தீவிர ஆதரவு என்ற நிலைக்கு மாறலாம் என்று நம்புகிறேன்.

இராணுவத் தளபதி றொகான் தலுவத்த, மேலும் பல படையெடுப்புக்களை நடத்தப்போவதாகத் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளித்த "விடுதலைப்புலிகள்" பத்திரிகை, இத்தகு இராணுவக் கொள்கை, மிக மோசமான அழிவுகளையும், தோல்விகளையும் அரசபடைகளுக்குக் கொண்டு வரும் என்று எச்சரித்திருந்தது. இராணுவத் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்கும் அரசின் கொள்கை, மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்றும் அது தெரிவித்திருந்தது.

அப்பத்திரிகை தெரிவித்த எச்சரிக்கையின் ஆழத்தை நான் நன்கு விளங்கிக் கொண்டுள்ளேன். எனவே கொழும்பிலுள்ள சிங்கள அரசாங்கம் தற்போதைய தனது மூலதந்திரோபாயத்தைப் பரீசீலனை செய்து, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நல்லெண்ணத்துடன் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான தகுந்த சூழ்நிலையை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதோடு, மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்த உதவியையும் அது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எழுவான் கரையில்

புதுக்குடியிருப்பில் இருந்து பருத்தித்துறைக்கு வந்து இரு மாதங்களுக்கு மேலாகி விட்டிருந்தது.

வேலைத் திடீர் மாற்றம், புதுப் புது ஆசிரியர்கள்... இதைவிட பரபரப்பும், பதட்டமும், எப்போது எங்களுக்கும் இடப்பெயர்வு நேருமோ என்ற அச்சமும் கொண்டு அவசரமாய் செல்லும் சனங்கள் – எல்லாமே ஓரளவுக்குப் பழக்கப்பட்டு மாமூலுக்கு வர; இப்படி ஒரு வேதனையான செய்தி நிம்மதியைக் குலைத்து நித்திரை வர மறுத்தது.

படுக்கையை விட்டு எழும்பி கதவைத் திறந்து வெளியில் வந்தேன்.

வாடைக்காற்று சில்லென்று வீசியது.

மனசுக்குள் இருந்த வலி இன்னும் அதிகரித்த மாதிரியிருந்தது.

கற்கோவளம் கடல் வெளியும் – திட்டுத் திட்டாய் மணல் மேடும் விரிந்து போய்க் கிடந்தது.

'சே!.... எப்படி முடிந்தது அவனால்...' நினைக்க நினைக்க மனசுக்குள் வேதனை அடர்ந்துகொண்டே வந்தது.

நேற்று வந்திருந்த கடிதத்தைப் பார்த்த கணத்திலிருந்து எதுவுமே செய்ய முடியாதபடியும், செயலுக்கு எண்ணத்தை திருப்பமுடியாதபடிக்கும் ஆக்கிவிட்ட விடயம் – ரமேஸ் இயக்கத்திற்குப் போய்விட்டான் என்று அம்மா எழுதியிருந்தது.

எப்படி அவனால் முடிந்தது?

நேற்றுப்போலிருக்கிறது... பள்ளிக்குப் போகும் போது கைப்பிடித்துக் கொண்டே கரைச்சிக் குடியிருப்பு வரைக்கும் காலால் நடந்து போனது. உண்ணாப் புலவு சவக்காலையால் தனிய வரமாட்டான். என்னோடு வந்தாலே அந்தப் பக்கம் திரும்ப மாட்டான். அப்படிப் பயந்தான் கொள்ளியாய் – பதுமையாய் இருந்தவன், இன்று இயக்கத்திற்குப் போய் விட்டான் என்று அம்மா கடிதம் எழுதியிருக்கிறா.

தம்பி! நீ காலத்தின் தேவையறிந்து களத்துக்குப் போய்விட்டாய். அது இந்தச் சந்ததிக்குரிய கடமைதான். ஆனால், உன்னை விட்டு ஒரு கணம் கூட அம்மா பிரிஞ்சிருக்க மாட்டாவே.

ஞாபகம் இருக்கிறதா?... எங்கட சிலாவத்தைக் குளத்தில விடிகாலைப் பொழுதினில் சில்லிட்டுப் போகும் அந்த சலசலத்த ஓடையில் நீயும் நானும் நேரம் போவதே தெரியாமல் குளித்துக்கொண்டேயிருப்போம். வெய்யிலும் ஏற, குளித்த களைப்பும் கண்ணை மயக்க கரையேறிப் பார்த்தால், மகிழமர நிழலில் அம்மா எங்களையே பார்த்துக்கொண்டிருப்பா... ரமேஸ்!... நீ கடைக்குட்டி என்பதால் அம்மா உன்மேல் உயிரையே வைத்திருந்தா. நீயும் அம்மாவை விட்டிட்டு ஒரு நிமிசம் கூட இருக்கமாட்டாய். இப்ப மட்டும் உன்னால் இப்படிப் போக எப்படி முடிந்தது?

சிந்தனையைக் கலைத்துக்கொண்டு சேவல் ஒன்று கூவியது.



அதனைத் தொடர்ந்து ஆங்காங்கே தூரத்தூர வேறும் சில கூவின.

நிலவு.... தென்மேற்காய் உள்ள பனங்காட்டில் பாழாய் எறித்துக் கொண்டிருந்தது.

கண்களை மூடிக்கொண்டு வல்லிபுரக்கோயில் பக்கம் தலையைத் திருப்பினேன். கண்களுக்குள் ஒளி வட்டங்கள் வந்து வந்து பெரிதாகி.... முகங்களாகி முகங்களாகி தம்பி.. தம்பிதான்.. தம்பி ரமேஸ்தான் சிரித்தபடி...

"அண்ணா இனியும் இப்படியே இருந்தால் எப்போதண்ணா சுதந்திரமாய் வாழுகிறது...?" என்று கூறுவதைப் போலிருந்தது.

கண்ணைத் திறந்து பார்த்தேன். எழுவான் கரையில் வெளுப்பாயிருந்தது.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக்கொண்டேன்.

இப்போது மனசு பாரங்குறைந்த மாதிரி ஏதோ ஒரு புத்துணர்வு பிறந்து தேங்கி வழிந்தது நெஞ்சில்.

*– முல்லைக் கோணேஸ்*

## உலக கெரில்லா இயக்கங்களில் முதன்மையானர்வர்கள் புலிகளே

விடுதலைப் புலிகள் இயக்கம் சாதாரண கெரில்லா இயக்கமல்ல. தற்போது, உலகில் பெரும் எண்ணிக்கையிலான ஆயுதங்களைக் கொண்டதும் பெருமளவு உறுப்பினர்களைக் கொண்டதுமான கெரில்லா இயக்கமாகும். வடக்கில் இன்னமும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களிலேயே உள்ளார்கள். வடக்கில் வெற்றியடைவதாகப் படையினர் கூறுகிறார்கள். ஆனால் வடக்கைத் தவிர்த்து ஏனைய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்கும் இலக்குகள் மாற்றமடைந்து அதிகரித்து வருகிறது.

- இராணுவ ஆய்வாளர் வினோத் முனசிங்க



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நீண்ட பயணத்தில்...

நேற்று வரை தமிழீழ நிர்வாகக் கட்டமைப்பின் சுகந்தம் வீசிக்கொண்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாடு இன்று சிங்களப் படையின் காலடிகளில் கொடூர அழுத்தத்தினால் திணறிக்கொண்டிருக்கிறது. காற்றிலே செந்தமிழ் கலந்து செடி, மரம் கொடிகளிலெல்லாம் தமிழ் மணம் வீசிய காலம் போய் இன்று அரை குறைத் தமிழும் அந்நியமான சிங்களமும் கோலோச்ச மௌனமும், பயமும் கலந்த பார்வைகளும் பணிவு பூசிய வார்த்தைகளுமே இம்மண்ணின் மொழியாகிவிட்டன.

வலிகாமத்தின் செம்மண் பூமியும் வல்லைவெளியின் உப்புக்காற்றும் வளமிழந்து விட்டதுபோல ஒரு தோற்றம். சுதந்திரத்தின் சுகம்தேடிப் பனங்கூடல்கள் பரிதவிக்கின்றன.

தொடர்ந்துகொண்டிருக்கும் ஒரு யுத்தத்தின் விளைச்சல்கள் இவை. ஆக்கிரமிப்பு யுத்தத்தை மக்களின் மனவுறுதி என்ற இரும்புக் கவசத்தினால் முகம் கொடுத்த விடுதலை யுத்தம் சந்தித்த ஒரு தற்காலிகப் பின்னடைவு இது.

பிரதேசங்கள் கைப்பற்றப்படுவதும், விடுவிக்கப்படுவதும் விடுதலை யுத்தத்தில் மிகச் சாதாரண சம்பவங்கள். உன்னதமான லட்சியத்தை கரமேந்தி உள்ளார்ந்த விசுவாசத்துடன் மேற்கொள்ளப்படும் போராட்டங்களில் பின்னடைவுகள் இன்னொருபக்கத்தில் வெற்றியை நோக்கிய நகர்வுகளே! அது சிலவேளைகளில் எதிரியைத் திணறடிக்கும். பலமிழக்கச் செய்யும் ஒரு யுத்த தந்திரமாகவும் இருக்கலாம்.

சீனதேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் 13 வருடங்கள் கட்டிக்காக்கப் பட்ட தளப்பிரதேசம் தந்திரோபாய ரீதியில் கைவிடப்பட்டதும், அதன் பின்விளைவாக முழுச் சீனமும் விடுவிக்கப்பட்டதும், சோவியத் யூனியன் விடுவிக்கப்பட்ட பின்பும் மூன்று வருடங்கள் எதிரியின் உள்ளூர்ப் பிரதிநிதிகளுடன் யுத்தம் புரிந்ததும், இரண்டாம் உலகயுத்த காலத்தில் 'லெனின் கிராட்' எல்லை வரை பறிகொடுக்க வேண்டியிருந்ததும், இறுதியில் சோவியத் ஒன்றியம் உலகம் வியக்கும் வல்லரசாக எழுந்து நின்றதும் வரலாறு. எரித்திரியப் போராட்டம் முற்றாக நசுக்கப்பட்டதென எதிரி இறுமாப்புக் கொண்டிருக்க மக்கள் அவர்களை விரட்டியடித்துப் புதிய உலகை அமைத்தது அண்மைய சரித்திரம்.

விடுதலை யுத்தம் என்பது வளைவு சுழிவுகளைக் கொண்டது. முன் செல்வதும், பின்னடைவதும் மீண்டும் முன் செல்வதும் எழுதப்படாத ஒரு நியதி.

"போராடுவது, தோல்வியடைவது, மீண்டும் போராடுவது, தோல்வியடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது, தோல்வியடைவது, இறுதி வெற்றி வரை; இது மக்களின் நியதி. போராடுவது தோல்வியடைவது, மீண்டும் போராடுவது தோல்வியடைவது, மீண்டும் மீண்டும் போராடுவது தோல்வியடைவது; அவர்கள் சவக்குழி வரை; இது பிற்போக்குவாதிகளின் நியதி.

இது எழுபது கோடி மக்களை ஜப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்தும் பிரிட்டிஷ் கைக்கூலிகளான உள்ளூர் ஆட்சியாளர்களிடமிருந்தும், உறுதிகுலையாத விடுதலைப் போராட்டத்தினூடாக விடுவித்த சீனப் பெருந் தலைவர் மாசேதுங் அவர்களின் அனுபவ வெளிப்பாடு.

எமது விடுதலைப் போராட்டத்திலும், முற்றாக இராணுவ ஆக்கிரமிப்புக்குள் மூழ்கி இனவெறிக் கொலைக் களமாக எதிரியால் மாற்றப்பட்டிருந்த தென்தமிழீழத்தின் பெரும்பகுதி இன்று விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது சர்வதேச அனுபவங்கள் இங்கு நிரூபணமானதின் ஒரு உன்னத உதாரணமாகும்.

ஆனால் –

இவற்றின் மேலாக இன்றைய நிலையில் – இன்றைய நிலையிலிருந்து கிளைவிடக்கூடிய சாதக, பாதக தோற்றப்பாடுகள் பற்றியும் நாம் உற்று நோக்கவேண்டியவர்களாயுள்ளோம், ஏனெனில் திடீரென எழும் பாதகமான நிலைமைகளால் ஏற்படுத்தப் படக்கூடிய குழப்பமான உணர்வலைகள் எமது தேசிய உத்வேகத்தை பலவீனப்படுத்தக்கூடும் அல்லது எமது வேகத்தில் குறைவை ஏற்படுத்துவது போன்ற ஒரு தோற்றத்தை வெளிப் படுத்தக்கூடும்.

எனவேதான் நாம் எதிரியின் நிலையையும், அவனது நீண்ட குறுகிய கால இலக்குகள் பற்றிய எமது நிலையையும் எமது நீண்ட, குறுகிய கால நோக்குகள் பற்றியும் புரிந்துணர வேண்டிய வர்களாயுள்ளோம். உன்னதமான ஒரு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



விடுதலைப் போராட்ட யுகத்தின் மகத்தான மக்கள் திரள் என்ற அடிப் படையில் எம்மையும், எதிரியையும் பல்வேறு பரிமாணங்களிலும் இனங் காண்பதும், எடைபோடுவதும் அவற் றிற்கேற்ப எமது கருத்துலகையும், வாழ் வுலகையும் வகுத்துக்கொள்வதும் அவ சியமாகும்.

வெவ்வேறு அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த போதிலும் 1948ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலங்க ளில் சிங்களப் பேரினவாதமே சிறீலங் காவின் ஆட்சியாளர்களின் அடிப்ப டைக் கொள்கையாக வகுக்கப்பட் டது. வெளியில் பல்வேறு வடிவங்க ளில் கொள்கைகள் முன்வைக்கப் பட்ட போதிலும் இலங்கைத்தீவு ஒரு சிங்கள பௌத்த நாடு என்பது உறுதி யாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இவ்வடிப்படையில் தமிழீழ மக்க ளின் தேசியத் தனித்துவம் சிதைக்கப் பட்டு, அழிக்கப்பட்டு, ஒரு அடிமைக் குழுவாக மாற்றும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இது மொழியுரிமை, கலாச்சாரம், பொருளாதாரம், நிலப் பறிப்பு எனப் பல்வேறு முனைகளி லும் உத்வேகம் பெற்றது.

அதேவேளையில் தமிழீழ மக்களா கிய நாம் எமது தேசியத் தனித்துவத் தைப் பேணிப் பாதுகாக்கவும், எமது மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவுமான ஒரு உறுதியான போராட்டத்தை முன்னெடுக்க வேண் டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட் டோம்.

இன்று நடைபெறும் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கும், இதற்கெதிராக எமது மக்களால் முன்னெடுக்கப்படும் விடுத லைப் போராட்டத்திற்குமான அடிப் படைக் காரணம் இதுவே.

இதன் விளைவு இராணுவ ஆக்கிர மிப்புகள், பெருமளவிலான படு கொலைகள், விமானக்குண்டு வீச்சு கள், சிறையிடல்கள், சித்திரவதைக்குட் படுத்தல் என்பன மட்டுமன்றி காலாதி காலமாக வாழ்ந்துகளித்த மண்ணை யும் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு உழைத்த தோட்டங்களையும் மனம் வெதும்பக் கைவிட்டு வெளியேற வேண்டிய இடப்பெயர்வுகளுமாகும்.

இந்த அவலங்கள் மத்தியிலும் அசைந்து கொடுக்காத எமது மக்க ளின் மன உறுதி, விடுதலைக்கான நெஞ்சார்ந்த வேட்கை உன்னதமா னது; உலக வரலாற்றுக்கே உன்னத மான பக்கங்களைப் பங்களித்தது.

# விடுதலைப் புலிகளை வெல்வதென்பது!

சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை யுத்தத்தின் மூலம் வெற்றிபெற முடியும் என்பது கேள்விக்குறியே. கடந்த 13 ஆண்டுகால யுத்தத்திலும் 60,000 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். காலமும் வளங்களும் விரயமாகும் யுத்தத்தின் மூலம் யுத்த வெற்றியை கெரில்லாக்களிடமிருந்து பெறமுடியாது. 1985ம் ஆண்டு பாதுகாப்பு செல்வினத்திற்கு 619.5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டு 2000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்தத்திற்கான நிதி அதிகரிப்பு புலிகளை அழிக்க முடியாது என்பதையே காட்டுகிறது. கடந்த 13 வருட காலத்திலும் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளும், பாதுகாப்பு அமைச்சர்களும் யுத்தத்தை நிறுத்தக் காலக்கெடுக்களை நிர்ணயித்த போதும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. அரசு எதிர்பார்க்கும் யுத்த வெற்றி என்பது கல்லில் நார் உரிப்பது போன்றதாகும்.

– அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர்

எமது தேசிய தனித்துவம் பாது காக்கப்பட வேண்டும் என்பதற்கா கவே எமது போராட்டம் ஆரம்பிக் கப்பட்டது என்பதும் அதை ஒடுக் கவே இவ்வளவு துன்ப துயரங்களும் இழப்புக்களும் எமது மக்கள் மேல் சுமத்தப்பட்டன என்பதும் இன்று மறைக்கப்பட்டு இத்துன்ப துயரங்களி லிருந்து விடுபடுவது ஒன்றே பிரதான அம்சம் என நம்பவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கைங்கரியத்தில் அரசும், அரசு சார்பு தொடர்பு சாதனங்களும் மட்டு மன்றி தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்களாகத் தம்மைக் காட் டிக் கொள்பவர்களும் படுதீவிரமாக இறங்கியுள்ளனர்.

இதேவேளையில் –

சொல்லளவில் மட்டுமன்றி மனத ளவில் கூட இக்கூற்றை ஏற்றுக்கொள் ளாத போதிலும் எம்மில் ஒரு சிலர் இக்கருத்தின் பின்னால் இழுபடுவது துரதிஷ்டவசமானதே. இவர்களின் விரக்தியுற்ற நடைமுறையும், நம்பிக்கை யிழந்த மனோநிலையும் எதிரியின் ஒரு பிரசார சாதனமாக இவர்களையறி யாமலே மாற்றிவிட்டுள்ளது.

உடனடியாக நாம் சந்திக்கும் பிரச் சினைகள், தாங்கமுடியாத இடுக்கண் கள் எமது நீண்டகால இலட்சியங்க ளைச் சார்ந்தவையே! எனவே நாம் அடிக்கடி தோன்றும் பிரச்சினைக ளைக் கையாளுவது நீண்டகால இலக் கின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

அடிக்கடி தோன்றும் பிரச்சினைக ளைத் தனித்தனியாக நோக்கி அந் நேரம் சந்திக்கும் நிலைமைகளுக்கேற்ப கையாளுவோமாயின் எமது நீண்ட கால இலக்கு ஊறுபடுத்தப்படும் அபாயம் உண்டு. அது மட்டுமின்றி இதுவரை காலமும் நாம் செய்த தியா கங்களும், இழப்புகளும் பயன் குறைந்த வையாக ஆகிவிடும்.

எமது எதிரி விரும்புவதும் அதுவே!

இந்நிலையில் தான் உலக வரலாற் றிலே தனது முத்திரையை ஆழமாகப் பதித்த, இராணுவ ஆக்கிரமிப்புக்கெதி ராக 5 இலட்சத்துப் பத்தொன்பதா யிரம் மக்கள் தமது உறுதியான எதிர்ப்பைத் தெரிவித்து வெளியேறிய இடப்பெயர்வும், அடுத்த ஒரு கட்டத் தில் இராணுவ, அரசியல் அழுத்தங் கள் காரணமாக அவர்களில் ஒரு பகுதியினர் மீண்டும் வலிகாமத்திற் குள் கொண்டுசெல்லப்பட்ட சம்பவ மும் இடம்பெற்றுள்ளன.

யாழ் குடாநாட்டின் ஒரு பகுதி கொடிய விஷங்கொண்ட நச்சுப்பாம்பு களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இது இன்று எமது மக்களின் ஒரு பகுதியினரின் திறந்த வெளிச் சிறைச் சாலை. மரணமும், துன்பமும், ஒடுக்கு முறைகளும் இம்மக்களைச் சுற்றித் தம்கோர நாக்குகளை நீட்டிக்கொண் டிருக்கின்றன.

யாழ் குடாநாடு –

இது தமிழீழ மக்களின் பாரம்பரிய பூமிகளில் ஒன்று. காலம் காலமாக எமது உழைப்பையும், வியர்வையை யும் இந்த மண் ஏற்றது; தன்னை வழங்கொழிக்கும் பூமியாக மாற்றிக் கொண்டது. சுற்றிநிற்கும் பாக்குத் தொடுவாயும், இடையிடையே ஊடுரு விச்செல்லும் உப்புக் கடல்களும் இம்மக்களுடன் பல்லாயிரக்கணக் கான ஆண்டுகள் உறவு பூண்டவை. எமக்கென ஒரு காணி, எமக்கென ஒரு வீடு, எமக்கென ஒரு கலாச்சாரம், எமக்கென உன்னத உறவுகள் என ஒரு தனித்துவ வாழ்வு இங்கு செழித்திருந் தது. ஆடலும், பாடலும் கோவிலும்,

நா. யோகேந்திரநாதன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விரதமுமென எழுதப்படாத விதிகளுக்குள்ளே இயங்கி வந்த ஒரு சிறப்பு எம் மக்களுக்குரியது.

இம்மண்ணை விட்டு வெளியேறுவது; இம்மரபைப் பிரிந்து வாழ்வது ஜீரணிக்க முடியாக் கொடுமை என்பது உண்மை. இப்பிரச்சினையை மட்டும் தனித்து, முழுநிலைமைகளிருந்து பிரித்தெடுத்து நோக்கப்பட்டால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததே.

ஆனால் –



நாம் இம்மண்ணைவிட்டு வெளியேறுவது எமது நீண்ட விடுதலைப் போரின் ஒரு பகுதி. எமது சொந்த மண்ணில் சுதந்திரத்துடனும், சுபீட்சத்துடனும் ஒரு நிரந்தர, நிம்மதியான வாழ்வைச் சிருஷ்டிக்க நாம் கொடுக்கும் தற்காலிக விலையே.

ஆனால் இவ்வடிப்படை உண்மை எதிரியினால் மறைக்கப்பட்டது. இடப்பெயர்வு என்ற விஷயம் ஒரு தனிப் பிரச்சினையாகப் பிரித்தெடுக்கப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டது. இப்பிரசாரம் வெறும் தொடர்பு சாதன வாயிலாக மட்டுமன்றி இராணுவ அரசியல் அழுத்தங்களூடாகவும் முன்வைக்கப்பட்டது.

துரதிஷ்ட வசமாக எம்மவரில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் பிரச்சாரங்களில் மயங்கியது மட்டுமன்றி தமது குழப்பமான மனநிலைகள் நடைமுறைகள் மூலமாகவும், எதிரியின் நோக்கத்தின்பால் தம்மையறியாமலே தம்மை இணைத்துக்கொண்டனர்.

இவர்கள் மிகச்சிலராக இருப்பினும் கூட இவர்களின் கருத்துருவாக்கம் கவனிக்கப்படாதவிடத்து பரந்து, மேலாதிக்கம் செலுத்தவல்லது. இவர்களின் கருத்தே பரந்துபட்ட பொது மக்களின் கருத்தாக எதிரியால் பிரச்சாரம் செய்யப்படக்கூடியது.

இவர்கள் பரந்த மக்கள் திரளின் வாழ்விலிருந்து உயர்ந்த ஒரு நிலைமையை யாசிப்பவர்கள். பல்வேறு அம்சங்களையும் தமது சொந்த நலன்களுக்கூடாகவே பார்ப்பவர்கள். இவர்களின் அறிவுஜீவித் தன்மை காரணமாக தொடர்புச் சாதனங்களிலும், சுற்றிவர நிற்கும் சமூகத்திலும், தம் கருத்துக்களை நிலைநிறுத்தும் வாய்ப்புப் பெற்றவர்கள். இன்னும் சொல்லப் போனால், “பீரங்கிக் குண்டுகளுக்கு நெஞ்சைக் கொடுக்கும் ஆற்றல் பெற்ற இவர்கள் சீனி பூசிய துப்பாக்கிக் குண்டுகளால் தோற்கடிக்கப்படக் கூடியவர்கள்” அடிப்படையில் இவர்களின் தற்காலிக நிலைமை கண்டு குழப்பமடையும், சோர்வடையும் நிலைமை எமது நிரந்தர விடிவுக்கான பாதையை ஊறுவிளைவிக்கக்கூடியதே. எனினும் இவர்களின் குழப்பம் நிரந்தரமானதல்ல. எதிரியின் இலக்கு நிலங்களைக் கைப்பற்றுவது மட்டுமல்ல; அடிப்படையில் தமிழினத்தின் தேசிய தனித்துவத்தை அழிப்பதாகும். எனவே இவர்களும் அரசியல் ஒடுக்குமுறைகளுக்கும், இராணுவ ஒடுக்குமுறைகளுக்கும் உட்படவேண்டியவர்களே. எனவே இயல்பாகவே இவர்கள் விடுதலையின் தாற்பரியத்தை வெகு விரைவிலேயே புரிந்துகொள்வர்.

இன்னுமொரு சாராரோ மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள். சுற்றாடலில் ஆதிக்கம் வகிக்கும் கருத்துக்களின் பின்னால் சிறிதளவு விருப்பம் கூட இன்றியே இழுபடுபவர்கள். அச்சம் கலந்த, இழப்புக்களுடன் கூடிய ஒரு வாழ்வை இவர்கள் பூரணமாக வெறுத்தாலும் சூழ்நிலை காரணமாகவும் ஆதிக்க சக்திகளுக்கெதிராக நிற்கும் வல்லமை இன்மையாலும் அதற்குள் அமுங்கிப் போவார்கள்.

மற்றுமொரு பகுதி மக்களோ மிக உறுதியான நிலைப்பாடு எடுத்தவர்கள். சிங்களப் பேரினவாதத்தையும் அதன் பிரதிநிதியான அரசையும், அரச படையினரையும் பற்றித் தெளிவான கண்ணோட்டம் உடையவர்கள். தவிர்க்க முடியாத காரணங்களால் இவர்கள் இராணுவ சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டுக்கொண்ட போதிலும், இவர்கள் பார்வையில் தளர்ச்சி இல்லை. இவர்களின் ஒவ்வொரு நகர்வும் தேசிய விடுதைப் போரின் வெற்றியை நோக்கியே அமையும்.

மூன்று வகைப்பட்ட மனநிலையைக் கொண்ட எமது மக்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள போதிலும் இவர்கள் அனைவரும் ஒருங்கே இராணுவ, அரசியல், இன ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களே. இவ்வொடுக்குமுறைகளை மூன்று சாராரும் வெவ்வேறு விதமாகவும், வெவ்வேறு அளவுகளிலும் முகங்கொடுக்க வேண்டியிருந்த போதிலும், ஒட்டுமொத்தத்தில் எமது மக்களின் மன உறுதியைச் சிதைப்பதிலும், போராட்டத்திற்கெதிரான சிந்தனைகளை விதைப்பதிலும், இன ஒழிப்பை மேற்கொள்வதிலும் எதிரி மிக முனைப்புடன் செயற்படுவான்,

எதிரியின் ஒடுக்குமுறை என்பது இரு முனைகளில் கட்டவிழ்த்துவிடப்படும். ஒன்று நேரடியானதும் மற்றையது மறைமுகமானதும்.

விடுதலைப் புலிகளை வேட்டையாடுகிறோம் என்ற போர்வையில் இளைய தலைமுறையை அழிப்பதும், கைதுசெய்வதும், சித்திரவதைகள் மூலம் அவர்களின் பௌதீக, மன நிலையை குலைப்பதும், மக்களை எந்நேரமும் ஒரு அச்சமூட்டும் சூழ்நிலையில் வைத்திருப்பதும் எதிரியின் நேரடி ஒடுக்குமுறையாகும். இது எமது தேசியக் கடமைகளிலிருந்து எம்மைத் தூரத் தள்ளுவதற்கும், நாளாந்தக் கொடுமை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



களே வாழ்வின் பிரதான பிரச்சினை என மனோரீதியாக ஏற்றுக்கொள்ள வைப்பதற்குமான ஒரு தந்திரோபாய மாகும்.

இவ்வழிமுறை உலகப் பிற்போக்கு வாதிகள் அனைவரும் கையாளும் முறை என்றாலும் கூட இது எங்கும் வெற்றிபெற்றதாகச் சரித்திரம் இல்லை. மாறாக எதிர்விளைவுகளே ஏற்பட்டிருக்கின்றன. எதிரிக்கெதிரான கோபாவேசத்தை மக்களின் மனதில் கொழுந்துவிட்டெரியவைக்கவும் எதிரியின் முழுமையான தோற்றத்தைப் புரியவைக்கவுமே இது உதவும்.

ஆனால், எதிரியின் மறைமுக ஒடுக்குமுறையென்பது மிகவும் ஆபத்தானதும், நீண்டகால அடிப்படையில் எமது மக்களைச் செயலிழக்க வைத்து, அடிமை வாழ்வுக்கு 'இசைவாக்கம்' பெறுவதை நோக்கித் தள்ளக் கூடியதாகும்.

இன ஐக்கியத்திற்கும், இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தவும் என்ற பிரச்சாரத்தின் பின்னால் சிங்களக் குடியேற்றத்திட்டங்களை நிறுவுவதற்கான முன்னெடுப்புக்கள் தற்சமயம் ஆரம்பிக்கப்படுகின்றன, இது ஒரு நிலப்பறிப்பு நடவடிக்கை என்றாலும், இது அதற்கு அப்பாலும் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது என்பது கவனத்திலெடுக்கப்படவேண்டும்.

யாழகத்தில் ஆரம்பிக்கப்படும் ஒரு சிங்களக் குடியேற்றமானது அடிப்படையில் சாதாரண சிங்கள மக்களைக் கொண்ட ஒரு ராணுவ முகாம் என்பதே உண்மையாகும். இங்கு குடியேற்றப்படுபவர்களுக்கு பாதுகாப்பு என்ற பெயரில் ஆயுதப்படையின் பின்னணி என்றுமே இருக்கும். அத்துடன் இவர்கள் கூட காலப்போக்கில் ஆயுதபாணியாக்கப்படுவர். இதன் விளைவு இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு எமது மக்கள் முகம் கொடுப்பது மட்டுமின்றி இக்குடியேற்றங்களைச் சுற்றியுள்ள கிராமங்களின் மக்கள் இவர்களின் சகலவிதமான ஆதிக்கத்திற்கும் உட்படவேண்டி வரும். வேண்டுமென்றே இனமோதல்கள் உருவாக்கப்படுவதும் அதைச் சாட்டாக வைத்து இன ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும் தவிர்க்கமுடியாததாகி விடும். மேலும் இரு இனங்கள் அருகருகே வாழும்போது மேலாதிக்கமும் அரசியல் பலமும் கொண்ட ஒரு இனத்தின் கலாச்சாரமும் நடைமுறைகளும் எமது மக்கள் மத்தியில் ஊடுருவுவது தவிர்க்க முடியாததாகும். இது எமது மக்களின் தேசிய தனித்துவத்தைச் சிதைக்கும் மாபெரும் ஆபத்தாகும். மணலாற்றுக் கிராமங்கள் பல கைவிடப்பட்டதும், அங்கு தொடரும் அனர்த்தங்களும் இவற்றிற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

மறைமுக ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவம் கலாச்சாரச் சீரழிவாகும். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள், சினிமா போன்ற பல்வேறு சாதனங்களூடாகவும் மக்களிடையே போலித்தனமான டாம்பீக வாழ்வுக்கான அவாவைத் தூண்டுவதன் மூலமும் இக்கைங்கரியம் முன்னெடுக்கப்படும், சிறீலங்காவின் தொலைக்காட்சியில் தரமான ஜப்பானிய; வங்காள, இத்தாலிய சினிமாப் படங்கள் சிங்கள மொழிபெயர்ப்புடன் ஒளிபரப்பப்படுவதும், தமது கலாசாரம் சார்ந்த தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதும், தமிழில் மூன்றாம் தர தென்னிந்திய திரைப்படங்களும், எமது வாழ்வுடன் தொடர்பற்ற தரங்கெட்ட நாடகங்கள் ஒளிபரப்பப்படுவதும் நாமறிந்ததே. மேலும் மின்சாரம், தொலைக்காட்சி, சினிமா போன்ற மாயைகளூடாக எமது மக்களின் சிந்தனையைச் சிதைத்து ஒரு உதிரித்தனமான, அடிமைக் குழுவாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிலையில்தான் தமிழீழ தேசத்தின் குடிமக்களான எமது கடமை பன்மடங்காகின்றது. சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்த பின்பு யுத்தம் ஒரு புதிய பரிணாமத்தை எட்டியுள்ளது. எமது போராட்டம் கூட இதற்கேற்ப புதிய வடிவத்தை எடுக்கும்போது தமிழ்த் தேசிய இனமாகிய நாமும் எமது நடைமுறை வாழ்வையும் ஒரு புதிய கட்டத்திற்கு முன்னெடுக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

இன்று எமது தேசம் துண்டாடப்பட்டுள்ளது. யாழகம், தென்தமிழீழம், வன்னி, மன்னார் எனத் தனித்தனி தீவுகளாக்கப்பட்டுள்ளது. இது எமது பலத்தைச் சிதைக்கவும், எமது ஆன்ம பலத்தை மெலிய வைக்கவும் எடுக்கப்படும் முயற்சியாகும்.

எனவே இச்சுவர்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் உடைக்கப்படும். ஆனால், மக்களாகிய நாம் மனோரீதியாக, உறுதியான ஆதரவு மூலமாக, நெருக்கமான உறவுகள் மூலமாக, எமது பலத்தைப் பேணவேண்டும்; தொடர்புகளை நிலைநிறுத்த வேண்டும். வலிகாமத்தில் நடக்கும் இராணுவக் கொடுமைகளுக்கு எதிராக வன்னி கிளர்ந்தெழ வேண்டும். தென்தமிழீழம் கொதித்தெழ வேண்டும். இப்பெரும் சுவர்கள் பல்வேறு முனைகளாலும் தாக்கப்பட்டுத் தகர்க்கப்படவேண்டும்.

“உயர்ந்த மலைகளும், அகண்ட ஆறுகளும், ஆழமான பள்ளத்தாக்குகளும் எம்மைப் பிரித்தாலும் எமது கைகள் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கும்”

எனவே –

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட எமது பிரதேசங்களில் வாழ்பவர்கள் மட்டுமன்றி, அதற்கு வெளியே வாழ்பவர்களும் கூட எதிரியின் நேரடி, மறைமுக ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்தில் உறுதியுடனும் தெளிவுடனும் முன்செல்ல வேண்டும்.

எமது போராட்டத்தை, வெற்றியை நோக்கி நகர்த்தும் வலுவும், நேர்மையும் கொண்ட விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தும் அதேவேளையில், விடுதலை என்பது எம் ஒவ்வொருவரதும் ஜீவன் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

குழப்பமானவர்களைத் தெளிவடைய வைப்போம். பலவீனங்களைப் பலம்பெற வைப்போம். பலம் பெற்றவர்களை மேலும் முன்செல்ல வைப்போம். இறுதிவெற்றிக்கான நம்பிக்கையை எங்கும் விதைப்போம். ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மண்ணில் ஓங்கி ஒலிக்கும் விடுதலைக் குரல்கள்

இலங்கைத் தீவில் தமிழர்களின் நீண்டகால வரலாற்றை எழுதி வைத்தவர்கள் தமிழர்களல்ல. தமிழினத்தின் சரித்திரத்தையே தமிழர்களுக்கு விரோதமாகப் புனைந்து வைத்தவர்கள் சிங்களப் பிக்குகள். இந்தியாவில் தோன்றிய பௌத்தம் இந்தியாவிலேயே அழிந்துபோன வரலாற்றை மறந்துபோகாத நிலையில் மிகவும் வஞ்சமாகவும்; தமிழர் விரோத மனப்பான்மையுடனும் புனையப்பட்ட கட்டுக்கதைகளே மகாவம்சம், சூளவம்சம் போன்ற சிங்கள இதிகாச வரலாற்று நூல்களாகும். தமிழரை அழிக்கவும்; சிங்கள இனவாதத்தைக் காக்கவுமாக ஒரே நேரத்தில் இரு முயல்களைப் பிடிக்க ஓடும் இந்த நூல்களைத் தொகுத்துப் பார்த்தால். "அவர்களிடம் ஒரேயொரு கருத்துத்தானிருக்கிறது. ஆனால், அதுவும் தவறாயிருக்கிறது" என்ற கருத்தே நினைவில் தட்டும்.

வரலாற்றில் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே தோல்வியடைந்த இனமாகத் தமிழர்களை அடையாளம் காட்டும் பிழையான அத்திவாரத்தில் கட்டப்பட்டது சிங்கள வரலாறு. இன்றைய சிங்களப் பேரினவாதம் மற்றவர்களை ஆளுமை செய்யும் மனப்பான்மையை தன்னுள் பெருநோயாக வளர்த்து வர இந்த வரலாற்று நூல்களே என்றும் துணைபோயின. இந்நிலைப் பட்டவர்களுடன் பாராளுமன்றம் ஏறி விவாதித்த தமிழர், "மூடனுடன் விவாதித்தால் இறுதியில் யார் மூடன் என்பது தெரியாது போகும்!" என்ற நிலைக்குள் சிக்குண்டுபோக, தாம் இரண்டாயிரம் வருடங்களாக தமிழருக்கெதிராக வளர்த்துக்கொண்ட இனவெறியின் உருட்டியெடுத்த வடிவத்தை இராணுவப் பூதமாக்கி, வடக்கே இறக்கிவைத்தனர் சிங்களப் பேரினவாதிகள்.

இத்தகு இனவாத நெருக்குதல்களுக்குள் நின்றுதான் தமிழினம் கடந்த காலங்களில் தனது இருத்தலைத் தக்கவைக்க வேண்டியிருந்தது. ஆனால், நீரோட்டத்தை எதிர்த்து நீந்தி, தனக்கென ஒரு புதிய பாதையை அமைக்கும் வல்லமையை இவ்வாழ்வானது பெற்றிருக்கவில்லை. எப்போதுமே ஒரு நாடு உரிமை கொண்ட தேசிய இனமாகப் பரிணமிக்க வேண்டுமானால் அவ்வினம் மேலும் பல அடிப்படைத் தகைமைகளை தன்னகத்தே சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். அத்தகைய தலைமைத் தகுதியானது தாழ்வு மனப்பான்மையை அறுத்தெறிந்து; வீரம்செறிந்த மக்கள் குழுவாகத் திரள்வடையும்போதுதான் சாத்தியமாகிறது. ஒற்றைத்தூசியிலிருந்து ஆரம்பித்த திரட்சியே இறுதியில் உலகத்தின் உருவாக்கத்திற்குக் காரணமானதென்ற கொள்கைபோல; விடுதலைப் புலிகள் என்ற முதலாவது வித்திலிருந்து திராணியுள்ள இனமாகத் தன்னை உலகின்முன் அடையாளம் காட்டிநின்றது தமிழினம்.

எப்போதுமே, "ஆசையின் வித்து மனதில் விழும் போதே அதை அடைவதற்கான திறனும் விளைந்து விடுகிறது!" என்ற தத்துவஞானி எமர்சனின் வாக்கிற்கமைய தமிழினத்திடமிருந்து சுட்டாலும் வெண்மை குன்றாத சங்கு நிகர்த்தோராக புலிகள் அணி விளைய; அவற்றுள் வலம்புரிச் சங்குகளாய் உருப்பெற்றனர் கரும்புலிகள். அணு சக்தியைக் கண்டுபிடித்து உலகத்தின் கைகளில் கொடுத்த ஒபன்ஹீமரின் பின், அணு ஆயுதத்தை விட வலிமை கொண்ட உயிராயுதத்தை எடுத்துத் தமிழினத்தின் கைகளில் ஒப்படைத்தவர்கள் கரும்புலிகள். இவ்விதம் உயிராயுதத்தையே கையில் எடுக்கவேண்டிய பெரும் நெருக்குதலைத் தமிழினத்தின் மீது ஏற்படுத்தி வைத்த பொறுப்பு சிங்கள வரலாற்றையே சாரும். இப்பேற்பட்ட பல இமாலயத் தவறுகளை நிகழ்த்திவிட்ட பின்னரும் கூட அரசு மேலாதிக்க நோயிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டதாக இல்லை.

## சிறக்கை முளைக்கிறது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


இல்லாவிட்டால் தீர்வுத்திட்டப் பொதியை தலையில் ஏந்தியபடி சூரியக்கதிர் வடக்கே வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தீர்வைக் காட்டியடிக்க மக்களற்ற நிலையில், "காது அறுத்தாலும் அறுக்கும்! பேன் பார்த்தாலும் பார்க்கும் குரங்கு!" என்ற மனோநிலையில் வடக்கே கொப்பேறியிருக்கிறது இராணுவம். மந்திகள் சேனை வெற்றிபெற்றதாக இன்னொரு வரலாறு எழுதப்படப்போவதில்லை! என்ற உறுதியுடன் போராட்ட அரங்கில் புதிதுபுதிதாய் பிரவேசிக்கின்றனர் தமிழர்.

இவ்விதமாக வாழ்வின் சிறந்த பகுதி, "வெற்றி பெறுவோம்!" என்ற நம்பிக்கையுடன் போராடும் காலமே! என்ற உண்மையை உணர்ந்த நிலை தமிழீழத்தில் மட்டுமல்ல; தற்போது வெளிநாடுகளிலிருந்து திரும்பும் தமிழரிடையேயும் ததும்பி நிற்கக்காண்கிறோம்.

பொன்னையா புலேந்திரன் என்பவர் துபாயில் வேலைபார்த்துவிட்டு நாடு திரும்பும் வழியில் தாண்டிக் குளத்தில் வைத்தே தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் கொண்டார். அத்தருணம் அவர் கூறிய கருத்துக்கள் சுதந்திரத்தின் இருட்டான பக்கங்களிலெல்லாம் விளக்கேற்றி வைத்தது.

தமிழருக்கெதிராகச் செய்யப்படும் எந்த விடயமானாலும் சிங்கள இனம் வேற்றுமைகளை விடுத்து ஒன்று திரண்டுவிடும். ஆயுதங்களைத் தமிழினம் எப்போது கைவிடுகிறதோ அப்போது சிங்கள இனம் ஒன்றுதிரண்டு தமிழரை அழித்துவிடும். தமிழருக்கெதிராக அவர்கள் ஒன்றுபட்ட நேரங்களிலெல்லாம் நாம் அடங்கிப் போவதே மேலென நினைத்தோம். கைகட்டி, வாய்பொத்தி நின்றோம். நாம் அடங்கிப்போகவேண்டுமெனவே நினைக்கும் சிங்களவரின் ஆண்டான் அடிமைப் போக்கிற்கெதிராகவே ஆயுதமேந்துவதாகக் கூறியவர்; தான் நேரிடையாகக் கண்ட அனுபவத்தையும் ஈழநாதம் பத்திரிகைக்கு விபரித்தார்.

இவர் காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய காலத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. "பத்து வருடங்களாக அங்கு நான் எழுது வினைஞராகக் கடமையாற்றினேன். அங்கும் நாம் சிங்களவருக்குப் பயந்தே வாழ்ந்தோம். ஒருநாள் அங்குள்ள தமிழ் மேற்பார்வையாளர் ஒருவரை சிங்களவர் சூழ்ந்து தாக்க முயன்றனர். தற்பாதுகாப்புக் கலையாக அவர் வீசிய சிலம்புவீச்சுக் காரணமாக அவர்களால் அவரை நெருங்கமுடியவில்லை. இத்தருணம் அங்கு வந்த தமிழ்ப் பொறியியலாளர் குறுக்கிட்டு, சமாதானத்தை ஏற்படுத்தி, எல்லோரையும் வேலை இடங்களுக்குச் செல்லும்படி கூறி; கம்பையும் வாங்கிக்கொண்டார். ஆயுதம் கையிலிருந்தபோது சமாதானத்திற்கு உடன்பட்ட சிங்களவர், அவர் கையில் கம்பு இல்லை என்பதை அறிந்ததும் அந்தத் தமிழரை ஒன்று கூடி நின்று நையப் புடைத்தனர். இக் காட்சியை என் கண்களால் கண்டேன். ஆயுதம் ஒன்றைத் தவிர சிங்களவருக்கு விளங்கக்கூடிய பாஷை வேறு எதுவுமில்லை!" என்றார். முப்பத்தைந்து வயதை நெருங்கியதால் இவரைக் காரியாலயப் பணிகளுக்குப் போகும்படி பணித்தும் அவர் முற்றாக மறுத்துவிட்டார். அவர் வீடுதிரும்பாமலே ஆயுதப் பயிற்சிக்குப் புறப்பட்டுப்போன காட்சி தமிழினம் வரலாற்றை மறக்கவில்லையென்ற பட்டயத்தின் மீது ஓங்கி முத்திரை குத்தியது.

இதேபோல சவுதி அரேபியாவில் பேருந்து ஓட்டுனராக கடமையாற்றியவர் சிறீ ஞானேந்திரன். வீமன்காமம் வடக்கைச் சேர்ந்த இவர் போராட்டக்களம் சென்றுவிட்ட தனது மூன்று சகோதரிகளையும் போர்ப்பயிற்சி பெற்ற பின்பே சந்திப்பேனெனத் தெரிவித்து, மலர்ந்த முகத்துடன் பயிற்சி முகாம் சென்றார். "எனது மூன்று சகோதரிகளின் மண வாழ்வுக்காக உழைக்கவே வெளிநாடு சென்றேன். நான் வருமுன்பே அவர்கள் எமது மண்ணின் விடிவுக்காகப் போரரா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ட்டத்தில் இணைந்துவிட்டார்கள். காலத்தின் கட்டாயம் அவர்களைப் போராளிகளாக்கியது. நான் சகோதரிகளுக்காக உழைத்து முடிக்கும் வரை காலம் காத்திருக்கப்போவதில்லை. சகோதரிகளும் நானும் இணைந்து போராடி எமது சொந்த மண்ணை மீட்டெடுத்த பின்பே எம் சொந்த வீட்டிற்குத் திரும்புவோம்!" என்று தெரிவித்தார். அவரின் ஈரம் கசிந்த போர்க்குரலுக்கு தலைகுனிந்து மரியாதை கொடுத்தது தமிழீழம், "எனது ஆசையெல்லாம் தலைவரின் காலத்திலேயே தமிழீழ நாட்டுக்கான எல்லைக்கல்லை நாட்டிவிட வேண்டும் என்பதுதான்" என்றபடியே அவர் புறப்பட்டபோது; தமிழர் எல்லாவற்றையும் இழந்தாலும் எதிர்காலத்தை இழந்துவிடவில்லை என்ற பேருண்மை அங்கே சுடர்த்தது.

இதுவரை தமிழீழம் பழம் பெருமைகளை நிறையப் பேசியது; பேசுகிறது. ஆனால் அப் பழம் பெருமைகள் எவையும் நமக்கொரு நாட்டை உருவாக்கும் கருத்துப் பலத்தை நம்மிடையே வளர்த்ததாகத் தெரியவில்லை. மாறாக நமது இயலாமையை மூடி மறைக்கும் போர்வைகளாகவே அவை பயன்பட்டன. ஆனால் சிறக்கை முளைக்கும் இப் பறவைகளோ நிஜத்தை நிஜத்தாலேயே எதிர்கொள்ளக் காண்கிறோம். பிலோமினாதன் எட்வேட் செல்வராஜன் என்ற புதிய கடற்புலி வீரர் கூறும்போது, "நான் கடற்றொழிலில் ஈடுபட்டபோது இரு தடவைகள் இராணுவம் சுட்டது. உயிரைப் பணயம் வைத்துப் போராடியிருந்தால் எமக்கு இந்த நிலை வந்திருக்காது" என்றார். அதுபோல குருநகரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை என்ற 19 வயது வாலிபர், "எனது தாயார் கொல்லப்பட்டபோது, கொண்டுசெல்ல சவப்பெட்டியும் இல்லாத நிலையில் கோயில் வளவிலேயே அடக்கம் செய்த காட்சி என் கண்களிலிருந்து இன்னும் அழிந்து போகவில்லை. நாமும் ஓட ஓட, 'அஞ்சியவனைக் குஞ்சும் விரட்டும்' என்பது போல எதிரியும் விரட்டிய படியே இருக்கிறான். எதிரியை அவனுடைய சொந்த இடத்திற்கே விரட்டி; எமது இருப்பை உறுதிசெய்யப் போராட வேண்டியது அவசியம்!" என்றார். இப்படி சூரியக்கதிர் என்ற ஒரு முள் தைத்த அனுபவமே காடளவு எச்சரிக்கையை நமது மக்களிடையே ஏற்படுத்திவரக் காண்கிறோம்.



எப்பொழுதும் விலங்குடைத்தல் என்னும் விடுதலைச் செயற்பாட்டில் இரு விசைகள் தொழிற்படுகின்றன. ஒன்று எதிரி எம்மீது போட்டுள்ள கால்விலங்கை உடைப்பது; மற்றையது நாமே நம்மீது போட்டுக்கொண்டுள்ள கைவிலங்கை உடைப்பது. கைவிலங்கை உடைக்காது கால்விலங்கை உடைப்பது இயலாத காரியம். தமிழீழத்தை நம்மால் அமைக்க முடியுமென உறுதி கொள்வது கால்விலங்கு உடைக்கும் செயல். அதற்கு வேண்டிய அடிப்படைத் தேவை, "நம்மால் முடியும்!" என்ற நம்பிக்கையே! இதுவே கைவிலங்கு உடைக்கும் பணி. இப்புதிய போராளிகள் கைவிலங்கு தெறித்த மனிதர்களாக வெளிவருகிறார்கள். கைவிலங்குடைத்தோர் கால்விலங்குமுடைப்பர்! இது விதி. இதுவே எதிர்காலத்தில் தமிழினம் விடுதலை கண்ட வரலாறாக மாறும். மகா அலெக்சாண்டர் உலகப் படையெடுப்பைத் தொடங்க முன்பு ஒருநாள் தான் தேடிய செல்வங்களையெல்லாம் நண்பர்களிடைய பகிர்ந்தளித்தான். அப்போது நண்பர்கள் "எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாயே உன்னிடம் மீதமிருப்பது யாது?" என்று கேட்க, "நம்பிக்கை" என்று பதில் கூறிப் புறப்பட்டு; உலகத்தின் பெரும்பகுதியை தன் காலடிக்குக்கீழ் கொண்டுவந்தான். இப்படியே எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாலும்; உலகத்தையே வென்றெடுக்கும் நம்பிக்கையை தமிழினம் கைவிட்டுவிடவில்லை என்பதை இப் புதிய வீரர்களின் போர்க் குரல்களில் கேட்கிறோம்.



- கி. செ. துரை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "நல்லதோர் வீணை செய்தே"



"எப்படிப் பட்டவர்கள் எம் மக்கள்?" மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியே எப்பொழுதும் மேலெழுகின்றது. "சூரியப்பிரகாசம் –1" இன் போது, கட்டிய துணியோடு கைதடி தாண்டுகையில் கேட்கப்பட்ட கேள்வி இது. இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் விழி பிதுங்கி, வாய் மூடி, மௌனித்துப் போனது சிங்கள அரசு. இப்பொழுதும் அதே கேள்வி மேலெழுகின்றது. ஆனால், இப்பொழுது வேறுபாடு என்னவெனில், சிங்களம் உரக்கக் கத்துகின்றது; வானுக்கும் மண்ணுக்கும் துள்ளிக்குதிக்கின்றது; யாழ்ப்பாணம் திரும்பிய மக்களைத் தனது நாளேடுகளின் தலைப்புச் செய்திகளை உருவாக்கும் மாந்தராக்குகின்றது; வண்ண ஒளிப்படங்களின் நாயக, நாயகிகளாக்குகின்றது; எம் மக்கள் அங்கு என்ன செய்தாலும், அவர்கள் தோசை சுட்டு விற்றாலும், ஆட்டு மந்தை மேய்த்தாலும் அதனையே அதிசயச் செய்தியாக்குகின்றது. யாழ்ப்பாணம் திரும்பும் மக்களை, "வாழும் போது இறந்தோர் திரும்புகின்றனர்" என்றும், செத்த நகராகப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணமண் சிங்களப் படையின் சீரிய பாதம் பட்டு அகலிகை உயிர்த்தாற்போல் உயிர்க்கின்றது என்றும் வர்ணிக்கின்றது. யாழ்ப்பாண நகரைக் கட்டியெழுப்பி யாழ் மக்களை மீண்டும் கல்விக் கடலுக்குள்ளும், வேளாண்மைத் தொழிலுக்குள்ளும் முற்றிலுமாக மூழ்கடிக்கப்போவதாகவும் பெருமையடித்துக்கொள்கின்றது. எவ்வளவு பரிவு... எவ்வளவு அன்பு... எவ்வளவு கரிசனை...

எனவே, இப்படிப்பட்டவர்தான் தமிழ்மக்கள் என்கிறது சிங்களம். கிடுகு வேலிக்குள் அதுவே உலகமென்றும், தானுண்டு, தனது குடும்பம், தோட்டம், அரசாங்கத் தொழிலுண்டு என்றும், அடக்க ஒடுக்கமாக வாழ்ந்த மக்களிடையே, புலிகள் போன்ற பயங்கரவாதிகள் தோன்றியது ஒரு தற்செயல் விபத்து. இப்போது, எல்லாமே சரியாகிவிட்டது. இம்மக்கள் இரண்டொரு வார இலவச உணவுப்பங்கீட்டினைப் பெறுவதையும், இ.போ.ச. நவீன வண்டியில் இருந்து போவதையும். சதோச சலுசலாவில் சகாய விலையிற் பொருட்கள் வாங்குவதையும் இடைக்கிடைவந்து, இல்லாமலே போகும் மின்னொளியைக் காண்பதையுமே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வாகக் கருதும் எளிமையான மக்கள். அதனால்தான், "அவர்கள் புலிகளைக் கைவிட்டு எம்பக்கம் வந்துவிட்டனர்" என்கிறது சிங்களம்.

"இல்லை இல்லை; இதுவல்ல உண்மை; யாழ்ப்பாணத்தார் அப்படியானவர் அல்லர். தமது உழைப்பால் தேடிய தோட்டங்களில், வீடு வாசல்களில், நிம்மதியாக, வசதியாகத் தனிமையாக வாழ விரும்பும் மத்தியதர வகுப்பு மனநிலை கொண்டவர்கள். எனவேதான் அவர்கள் வலிகாமம் திரும்பினர்." என்கிறார் த.வி. கூட்டணிக்குத் தள்ளாத வயதிலும் தலைமை தாங்கும் சிவசிதம்பரம். "புலிகளை வெறுத்தும்தான், மறுத்தும்தான் மக்கள் வலிகாமம் வந்தார்களா?" என்ற சிங்களத்துச் செய்தியாளரின் கேள்விக்குச் சிவசிதம்பரம் மட்டுமல்ல, புலிகளை எதிர்க்கும் தமிழ்க்குழுக்கள் கூட பதில் சொல்ல மறுத்துவிட்டனர். அது உண்மையல்ல என்பது மட்டுமன்றி; "ஆம்"எனத் தாம் அளிக்கும் பதில், தம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு பேரம் பேசும் ஆற்றலையும் இழக்க வைத்துவிடும் என்கிற பயமும் இவர்கட்கு மிகுதியாக உண்டு. அதனால்தான் புலிகளை அழிக்க விரும்புவோர் கூட, தாம் அரசியல் அநாதைகள் ஆகிவிடாமல் தமது அரசியல் வாழ்வைத் தக்கவைக்கப் புலிகளையே நம்பியிருக்கிறார்கள். இது ஒரு விசித்திர நகை முரண் என்பது வேறு விடயம்தான். எனவே, மீண்டும் அக் கேள்வி எழுகின்றது. "இப்படிப்பட்டவர்களா எம் மக்கள்"

அல்லது, ஆய்வாளர், அறிஞர், அறிவுஜீவிகள் எனத் தம்மை, தாமே அழைப்போர் கூறிக்கொள்வது போல நிலவுடமைச் சமூகத்தின் அடிப்படைகளை இன்னமும் கொண்ட, சாதியடிப்படையிலான ஒரு சமூக அதிகாரப்படி நிலை முறைமையைப் பின்பற்றுகிற, அதன் மூலம் தனது சமூக அதிகாரப் பேணலைக் காப்பாற்ற விரும்புகின்ற, அதற்காக ஆளும் அதிகாரமுடையோரோடு அவர் எவராயினும் சரி இணக்கமாகச் செல்லும் இயல்பு உடையவர்களா எம் மக்கள்? நாவலரிலிருந்து மெத்தப் படித்த பொன்னம்பலம் இராமநாதன் வரை, அன்றும் சரி இன்றும் சரி – பாரம்பரியத்தைப் பேணுவதை முதன் நிலைப்படுத்தியதை இதற்கு இவர்கள் சான்றாகுகின்றனர். இன்னும் சில வரலாற்றாளரோ, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆகியோர், தம் காலத்தில் எம் மக்கள் பற்றிய தமது மனப் பதிவுகளை எவ்வாறு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வெளிப்படுத்தினர் என்பதை விளக்கு கின்றனர் "இந்த நாட்டின் நல்லாட் சிக்குத் தமிழரின் மூளைத்திறன், அவர் களின் சுறுசுறுப்பான உழைப்பு என் பன கடந்த காலங்களில் மிக்க பய னுள்ளதாக அமைந்தன. அதே போலவே, எதிர்காலத்திலும், விலை மதிக்கமுடியாத பங்கை இவர்கள் ஆற் றுவர். நாட்டின் நல்லாட்சிக்கு பிரித் தானியர் எப்போதுமே தமிழரின் உத வியை நாடி நிற்பார் என, 1930 களில் ஆங்கிலேய ஆள்பதி ஒருவர் கூறிய தைப் பொதுமைப்படுத்தி எம் மக்கள் இத்தகையவர்கள் என எண்ண இடமி ருக்கின்றது என்கின்றனர். எனவே எம் மக்களின் சொந்த முகம் – உண்மை முகம் எது? அந்நியர் எவராலும் அடி முடி அறியப்படாத எப்படிப்பட்டவர் கள் எம் மக்கள் என்கிற கேள்விக்கு விடை காணவே முடியாதா?

வலிகாமத்திலிருந்து ஏன் வந்தார் கள்? பின்பு ஏன் திரும்பிப் போனார் கள்?

இக் கேள்விகளுக்கான மிகச் சரி யான விடையை அண்மிப்பதற்கு, நாம் பல நூற்றாண்டுகால வரலாற்றுப் பயணமொன்றை மேற்கொள்ள வேண் டும். அப்போதுதான், அந்நியர் ஆதிக் கம் என்கிற பாரிய வரலாற்று நெருக் கடிகள் எதிர்ப்பட்ட போதெல்லாம், அதற்கு முகம் கொடுக்க எத்தகைய உத்திகளை எம் மக்கள் பயன்படுத் தினர் என்பதை நாம் அறிய முடியும்; வெளிக்காட்டப்பட முடியாத அவமா னச் சின்னமாகத் தாழ்வுச் சிக்கல் வடுவாக – தன் மானத்திற்கேற்பட்ட தழும்பாக எம் மக்களின் ஆழ்மன திலே பதிந்துவிட்ட அடிமை வாழ்வு மறுப்பின் வெளிப்பாடு, எதிர்ச் செயற் பாடு எது? என்பதை உணரமுடியும்.

எத்தனை கொடியேற்ற இறக்கங்க ளைக் கண்டவர்கள் எம் மக்கள். ஒவ வொரு ஏற்ற இறக்கங்களின் போதும் பல்வேறு உத்திகளூடான பாரம்பரி யப் பேணலாக – வெளியார் ஆதிக்கத் திற்கு எதிரான முனைப்பான செயற் பாடாக இணங்கிப் போவது போல அந்நியனோடு உறவாடிப் பின்னர் தம் சொந்த வழியிற் செல்லும் தந்திரோ பாயமாக எத்தனையோ வழிகளைக் கையாண்டு, தமது சுகத்தைச் சொந்த முகத்தைத் தேசியத்தின் ஆன்மாவை வேறெவரிடத்திலும் பறிகொடுக்கா மல் காப்பாற்றி வருபவர் எம் மக்கள். 1621-ல் போத்துக்கேயரிடமும், 1658-ல் டச்சுக்காரரிடமும், 1796-ல் ஆங்கிலே யரிடமும் அடிமைப்பட்டதற்கும், 1948-ல் நாதியற்றுப்போனதற்கும், 1956, 58, 77, 81, 83-ல் அடியுதைபட் டதற்கும், பலம்மிக்க தேச விடுதலைப் படையணி இன்மையே பிரதான காரணம் என்பதை உணர்ந்தவர்கள் எம் மக்கள். இதன் வெளிப்பாடாகவே விடுதலை உணர்வென்னும் அகல் விளக்கை அணையவிடாமல் நெஞ்சக் கூட்டுக்குள் வைத்துக் காப்பாற்றிய தாலேயே, 1970-களில் தமிழர் விடுத லைப் போராட்ட அணியாக முகிழ்ந்த புலிகள் இயக்கம் வளர்ச்சியடைந்த புது வரலாறு பரிணமித்தது. இந்தப் புது வரலாற்றின் அடிவரலாறு சங்கி லியனில், பூதத் தம்பியில் பண்டார வன்னியனில், இன்னும் பெயர் தெரி யாது, முகமறியாது, விடுதலைக்காக கழுவிலேற்றப்பட்ட மண்ணின் மைந் தரில் உள்ளது என்பதே உண்மை. இது முன்னைய கதை; அண்மைய கதை எவ்வாறு உள்ளது?



1990–ம் ஆண்டின் போர் தொடங் கிய பின்னாலான நாட்களில், போரோ சையைத் தவிர வேறோசை கேட்காத நேரங்களில், சிதறும் தசைத் துண்டங் கள், பாய்ந்திடும் பச்சைக் குருதியென எங்கும் காரிருள் சூழ்ந்த வேளையில் எவ்வாறு இருந்தனர் எம் மக்கள்? அசைக்கமுடியாத மனவுறுதியின் வெளிப்பாடாக உள்ளார்ந்த ஆற்ற லின் எல்லையை தமது தாங்குசக்தி யின் உச்சத்தை அப்போது அடைந்த னர் தமிழ் மக்கள். இப்படிப்பட்ட மக் களை எவரால் என்ன செய்யமுடியும்? தாமும் வாழ்ந்து, தமது போராளிக ளையும், தாயகத்தையும் வாழவைத்த மாண்புடையவர்களே எம் மக்கள்!

எனவேதான், பாரிய படையெடுப்பு எதிர்வந்தபோதும், அது சரிவராத போது பின்பு கதையை மாற்றி எதிரி வஞ்சக உறவாடிய போதும், அந்தந்தச் சூழலுக்கேற்ப தமது பட்டறிவு சொன்ன பாதைக்கேற்ப நடந்தனர் எம் மக்கள். எம் மக்கள் கையாண்ட உத்தியின் பெறுபேறுதான் என்ன? வலிகாமத்தில், வடமராட்சியில், தென்மராட்சியில், தென் தமிழீழத்தின் எல்லைப் பரப்போடும் வன்னிப் பெரு நிலத்திலும் – எம் மக்கள் கால் பதித்து பரவி நிற்கின்றனர். எங்கெல்லாம் எம் மக்களோ அங்கெல்லாம் புலிகளும்!

இப்போது வட தமிழீழத்தின் ஆகக் கூடிய குடித்தொகை கொண்ட நிலப் பரப்பாக வன்னிப் பெருநிலம் பெரு மிதம் அடைகின்றது. தமிழீழத்திற்குள் புதிய குடித்தொகைப் பரம்பலிது.

எனவே அறுதி மிக்க தேசிய விடு தலைப் படையணியாகப் புலிகள் பூர ணமாக உருவெடுக்கும் வரை, இடம் பெயர்ந்தும் இடம் சேர்ந்தும் எம் மக்கள் வகுக்கும் உத்திகளை சிங்களம் எவ்வாறு புரியும்? ஆழமான, நுட்ப மான மனப்பாங்குள்ள எம் மக்களைத் தவறாகக் கணிப்பதன் விளைவு தவிர்க்கமுடியாத பெருஞ் சங்கடத் துள் சிங்களம் சிக்குகின்றமையேயா கும்.

பாரதி பாடியது போல "நல்ல தோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில்" எறிபவரல்லர் எம் மக்கள்; "சுடர்மிகு அறிவுடன்" உள்ள அவர்கள், "நிலச் சுமையென ஒரு போதும் வாழ்ந்திடார்" என்பதை இந்த உலகம் மிக விரைவில் அறியும்!

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இராணுவ ஆட்சேர்ப்பிற்கு அரசின் புதிய யுக்தி

சமாதானப் படையணி என்ற பெயரில் பத்தாயிரம் தொண்டர்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது. தொண்டர் படையணிக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்படும் எனவும் ஆனால் அவர்கள் இராணுவப் பணியில் ஈடுடமாட்டார்கள் எனவும் அரசாங்கத் தரப்பு தமது செய்திகளில் தெரிவித்துள்ளனர். அரசின் இப் புது முயற்சியானது ஆக்கிரமித்த யாழ் குடாநாட்டினை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் புதிய யுக்தி என்பதில் ஐயம் எதுவுமில்லை. அதாவது அரசாங்கம் இராணுவத்திற்கென ஆள் சேர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சி தோல்விகண்டதைத் தொடர்ந்து இப்புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது எனலாம். யாழ் குடாநாட்டின் மீது படையெடுப்பதற்கு இராணுவம் தயாரானபோதே இராணுவத்தில் உள்ள ஆள் பற்றாக்குறை பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. யாழ். குடாநாட்டை இராணுவத்தால் கைப்பற்றக்கூடியதாக இருப்பினும் அதனைத் தக்கவைத்துக்கொள்வதற்கு துருப்புக்கள் போதாது எனவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு இல்லாது போனால் இராணுவத்தில் பெரும் பகுதியைக் குடாநாட்டிற்குள்ளேயே முடக்கிவைக்க வேண்டிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சந்திரிகா அரசு, யாழ்ப்பாணத்தில் ஈட்டும் இராணுவ வெற்றியானது சிங்கள இளைஞர் பயத்தைப் போக்கும், இராணுவத்தில் சேரத்தூண்டும் என்றே கருதியது. ஆனால், அவ்வாறனதொரு உந்துதல் ஏற்பட்டதாக இல்லை. ஆனால், அரசாங்கம் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிறைவு செய்ய வேறு வழிகள் செய்யாமல் இல்லை. ஒரு புறம் இராணுவத்திற்கென ஆட்சேர்ப்பதற்கான அனுமதி இராணுவ உயர்பீடத்திற்கு அனுப்பிய வேளை, இராணுவத்திற்கென பல சலுகைகளையும் கவர்ச்சிகரமான திட்டங்களையும் அறிவித்தது. இதேசமயம் இராணுவத் தலைமை வேறு வழி மூலமும் தன்னாலான முயற்சியைச் செய்தது. இராணுவத்தில் இருந்து தப்பிப் போனவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதாக அறிவித்தது. அத்தோடு புதிய ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளை பல நிலையங்களில் மாதக்கணக்கிற்கு நடாத்தியது. இவை யாவற்றிற்கும் முக்கியமாக இருந்தது இராணுவத்தில் சேரும் இளைஞர்கள் உயிருக்கு அஞ்சத்தேவையில்லை என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் றொகான் தலுவத்த வழங்கிய வாக்குறுதி. உலகத்திலேயே போரில் ஈடுபட்ட ஒரு இராணுவத்தின் தளபதி இவ்வாறானதொரு வாக்குறுதியை வழங்கியமை சிறீலங்காவிலேயேதான் இருக்கமுடியும். ஆனால், இம்முயற்சியும் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காத நிலையிலேயே தற்பொழுது இராணுவத்திற்கு உதவிசெய்ய வேண்டி புதிய படையணி ஒன்றை உருவாக்கிவிடுவதற்கு அரசாங்கம் முனைகிறது. அவ்வாறு திரட்டப்படுபவர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கப்படினும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள்ளேயே அவர்கள் பயன்படுத்தப்படுவார்கள் என்று உத்தரவாதமும் அளிக்க முனைகிறது. ஆனால் அரசின் திட்டத்தின்படி தொண்டர் படையினில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் எந்தளவிற்கு முன்வருவார்கள் என்பதையும் அதன் செயற்பாடுகள் எந்த வகையினதாக இருக்கும் என்பதையும் தற்போது கூறமுடியாது. ஆனால் இத்திட்டத்தின் நோக்கங்கள், அவற்றினால் விளையக்கூடிய விபரீதங்கள் என்பன என்னவென்பதை தற்போது அடையாளம் காணமுடியும். அரசாங்கத்தின் திட்டப்படி இராணுவத்திற்கு உதவியாக செயற்படும் அதேவேளை, யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகம், புனர்வாழ்வுப் பணி என்ற ரீதியில் சிவில் நிர்வாகத்தை சிங்கள மயப் படுத்தும் நோக்கம் கொண்டதும் ஆகும். அதாவது ஒரு புறம் இராணுவத்தின் நிர்வாகப் பணியைக் குறைக்கும் அதேவேளை, தமிழர்கள் கையிலிருந்து சிவில் நிர்வாகத்தைப் பறிப்பதாகவும் இருக்கும். ஆனால், அரசாங்கத்தின் இத்திட்டமானது யாழ் குடாநாட்டில் நிலைமையை மேலும் மோசமாக்குமே ஒழிய ஒரு போதும் சிவில் நிர்வாகம் ஒன்றையோ புனர் அமைப்புப் பணிகளையோ ஏற்படுத்த உதவப் போவதில்லை. ஏனெனில் யாழ் குடாநாட்டுக்கு அனுப்பப்படும் தொண்டர் படையணி இராணுவ அணியாகவே எதிர்கொள்ளப்படும் என்பதும் நிச்சயம். ஆகையினால் அதனை ஒரு சமாதானப் படையணி என்றோ, புனரமைப்பு தொண்டர்பணி என்றோ எவரும் கருதுவது தவறானதாகவே இருக்கும்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலைப் பயணத்தில் எனைப்போன்றோர்
புயல்களாய் விரைய,
ஏதும் புரியாமல்
எண்ணம் தெளியாமல்
நான் ஏன் தாமதித்தேன்?

இப்போதைய எனது இரவுகள்
கற்பனைக்குள் அடங்காத
பயங்கரத்தைச் சுமந்தவை.
ஹிட்லரின் நச்சுவாயுக் கூடத்து
யூதர்களின் நிலை அல்ல எனது நிலை
அதை எத்தனை மடங்கு
வர்க்கித்தாலும் முடியாது
யுகங்களாகக் கழியும்
ஒவ்வோர் நாளும்
சிந்தனை சிக்குற
கனவுகளில் நான் களங்கமுறுவதாய்
நிம்மதியற்ற இவ்வாழ்வில்
அமுங்கிப் போய்...
நான் ஏன் தாமதித்தேன்?

அன்னையும் தந்தையும்
அருகிருக்கும் உறவுகளும்
கைகள் கட்டப்பட-நான்



# நான் ஏன் தாமதித்தேன்?

கட்டியிழுக்கப்படுவதாய்
கண்ட கனவுகளில்
என்னுள் ஒவ்வோர் நிமிடமும்
எனக்காய் காத்திருக்கும்
சிதை எரிகள் மூட்டப்படுவதாய்.
நான் ஏன் இதுவரை தாமதித்தேன்?

கூனிக் குறுகி
இளமையை உருமறைத்து
இல்லாத துணையை எனக்கிட்டு
வயோதிபத்தின்
எல்லையுள் வந்தவள் போல்
எனை மாற்றி...
ஐயோ! நான் ஏன் தாமதித்தேன்?

சுடுகாட்டு நிசப்தத்தில்
நிலவற்ற இரவுகளாய்

காவலிடப்பட்ட என் வேலிக்குள்
கண்களெல்லாம் எனை விழுங்குவதாய்
எனது வீதிகளிலேயே
உலா வரமுடியாச் சிறைக்குள்
வசந்தம் இம்முறையும்
வருடி நிற்கும் காலத்தில்-நான்
கசந்துபோய் தனிமைச் சுமையில்
ஊமைக் காயத்துடன்
உளம் மறுக...
நான் ஏன் தாமதித்தேன்?

வல்லாறுகள் பலமுறை எச்சமிட்டபின்
எரிந்துபோன என் பள்ளியில்
மாமரத்து நிழல் கூட
அறிவூட்டும் கூடங்களாயின அன்று
இன்று வாசல் தாண்டி
வெளிவருவதற்கும் முடியாமல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பள்ளி வாசலே என் பலியிடமாய்
அருகிருக்கும் 'அவர்கள்'
தங்ககமே எனக்கிட்ட தடைகளாய்
சொல்லமுடியாத சோதனைக்குள்
நான் வாட ஏனிங்கு தாமதித்தேன்?

நீர் பொழியும் விழிகளுடன்
தூரத்தே கேட்கும் குரைப்பொலியில்
நான் துடிக்க,
எமைப் போன்று
என் சோதரியும் துடிக்க,
பறக்கமுடியாத பறவைகளாய்,
முகம் மூடி ஒளிக்கின்ற நிலவுகளாய்
ஐயோ! நாம் ஏன் தாமதித்தோம்?
கட்டியிழுக்கப்படும்
எனது கனவுகளில் கூட
கைகளில் ஒரு கருவியில்லையே.
மிருக வதைக்குள் நானுருகி
உயிர் பிரியும்
நாட்களைக் கணக்கிடவா நானிருந்தேன்?

எனது கூட்டுக்குள்ளேயே
குதறப்படுவதற்கா குடியிருந்தேன்?
புயல்கள் பிறப்பெடுத்த இதே பூமியில்
புண்ணாகி நான் வாடுவதா?
கண்ணீரில் மட்டுமே
கவலைகளைக் கழுவுவதா?
நானும் என் சோதரியும்
அயல் வீட்டுப் பெண்களும்
நெஞ்சமெரிய நாள் கடத்தும்
நிலையதனைப் புரிந்திடுக.
எதுவுமில்லாத கரங்களில்
கட்டப்படாத கால்களில்
இட்ட விலங்குகள்
தெரிகிறதா? பாருங்கள்!
தனியிருக்கும் இக்கொடிய நிலையைவிட
கொல்லும் சா வரட்டும்.
வரவேற்போம்.
வேண்டாம் இவ் வாழ்வு.
இன்னும் தாமதியாது விரையுங்கள்.
நான் வருவேன்.
விலகும் இடைவெளியில்
இச் சிறையிருப்பை உடைத்து
இனியும் தாமதியாது நான் வருவேன்

— அம்புலி

## விடுதலைப் புலிகள் தடை நீடிப்பைக் கண்டித்து...

**விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை நீடித்திருப்பது கண்டனத் துக்குரியது என திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி அவர்கள் குறிப்பிட்டு பேசிய உரையில் இருந்து...**

தேவகவுடா அரசிலே தி.மு.க. அரசும் சேர்ந்து இருக்கிற நிலையிலே விடுதலைப் புலிகள் மீது தடை நீடிப்பு செய்திருப்பது கண்டனத்திற்குரிய தல்லவா? நியாயமா அது?

ஈழத் தமிழர்கள் அங்கே படுகொலை செய்யப்படுகின்றார்கள். அந்த இனப்படுகொலையைக் கண்டித்து அவர்களைப் பாதுகாக்கின்ற ஒரே இயக்கம் பிரபாகரன் தலைமையிலே இருக்கின்ற விடுதலைப் புலிகள் அல்லாமல் வேறு யார்? மற்றவர்கள் எல்லாம் ஓடி வந்து இந்தியாவுக்குள் இருக்கிறார்கள். நாங்கள் கேட்கிற வாதங்களுக்கு பதில் சொல்லுங்கள். வேறு எந்தப் போரா ளிக் குழுக்களுக்காவது தடை இருக்கின்றதா? தடை போட்டால் எந்தப் போராளியும் வரக்கூடாது என்று தடை போடுங்கள். அதையே கூட நாங்கள் விரும்பவில்லை.; வாதத்திற்காக நான் சொல்லுகிறேன். போராளிகள் குழுக்க ளிலே விடுதலைப் புலிகளுக்கு மட்டும் தடை போடவேண்டிய அவசியம் என்ன? சந்திரிகா அரசுக்கு மிகப் பெரிய நெருக்கடி வந்திருக்கின்றது. இன்றைக்குக் கூட லக்ஷ்மன் கதிர்காமர் என்ற இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சரை அனுப்பியிருக்கிறார்கள். அவரிடம் பேசும்பொழுது மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறையோ அல்லது நம்முடைய தமிழக அரசோ , பழைய நரசிம்மராவ் அரசு எந்தக் கொள்கையைக் கையாண்டதோ அதே கொள்கையைக் கையாளக்கூடாது; அப்படி நீங்கள் செயல்படுவீர்களே யானால் தமிழ் மக்களுடைய மிகப் பெரிய வெறுப்புக்கு ஆளாவீர்கள் என்பதை சுட்டிக்காட்டுவது எங்களுடைய இன்றியமையாத கடமை.

உலகத் தமிழர்கள் உங்களை நம்பிக்கையோடு எதிர்நோக்குகிறார்கள். எனவே, பழைய நிலையையே நீங்கள் கடைப்பிடிக்கக்கூடாது. வி.பி.சிங் ஏன் 'அமைதிப்படை'யை வாபஸ் வாங்கினார்?

நான் இந்தக் கூட்டத்தின் வாயிலாக வெளியுறவுத் துறை அமைச்சருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்:

'அமைதிப் படை'யை வாபஸ் வாங்கியதின் நோக்கமென்ன? ராஜிவ் காந்தி அனுப்பிய அந்த 'அமைதிப்படை' ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டு வருகிறது. இந்தியாவினுடைய ஒப்புதலோடு இந்தப் படுகொலை கள் நடைபெற்றுக்கொண்டுவருகிறது என்றுதானே நினைக்கவேண்டியுள் ளது! இதை ஏற்றுக்கொள்ளலாமா? அதற்கு நாம் உடன்படலாமா? நீங்கள் எங்கள் இனத்தை அழித்தால் அதற்கு ஆதரவு காட்டமாட்டோம் என்று சொல்லவேண்டியவர்களுக்கு நாம் சொல்லியாகவேண்டும்.

இலங்கையில் இவ்வளவு நெருக்கடிகள் இருந்தும் சந்திரிகா அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இதுவரை தடைபோடவில்லையே. அந்த நாட்டிலேயே தடை இல்லாதபோது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இங்கு என்ன தடை? அது எப்படி நியாயமாகும்? கேட்டால், ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத் தினால் இங்கே தடை போடப்பட்டிருக்கலாம் என்று சிலர் சொல்லக்கூடும்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே தீர்ப்பு வந்தாகி விட்டதா? உச்சி நீதிமன்றம் வரையிலே போய் எல்லா விசயமும் முடிந்து போய்விட்டதா? ஜெயின் கமிசன் பல வருடங்களாக நடக்கிறது. அந்த ஜெயின் கமிசனிலே இதுவவை வெளிவந்திருக்கிற செய்திகளைக் கேட்டால் எதை எதையோ கிளறுகிற மாதிரி பல விசயங்கள் வெளியே வந்துகொண்டிருக்கின்றன! ராஜீவ் காந்தி கொலைக்குக் காரணமானவர்கள் பற்றி அதிர்ச்சியடையக்கூடிய செய்திகள் எல்லாம் வந்திருக்கிறது. அது மட்டுமல்ல; ஜெயின் கமிசனிலே வி.பி.சிங் போய் சாட்சியம் சொல்லப் போகிறார். ஒதுங்கியிருந்த தி.மு.க.வே மறுபடியும் நாங்கள் சாட்சி சொல்லப் போகிறோம் என்று போகிறது. இப்படி எல்லோருமே போய்க் கொண்டிருக்கும் பொழுது ஒரு மாறுபட்ட சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எதற்காக விடுதலைப் புலிகளுக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் தடை நீடிக்க வேண்டும்? அது என்ன நியாயம்?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவின் போக்கு

அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு வரும் வரவு செலவுத் திட்டங்கள் இராணுவ வரவு செலவுத் திட்டங்களாக அமைந்திருப்பதனை அவதானிக்கலாம். பாதுகாப்பமைச்சிற்கு அதிகளவில் நிதியினை ஒதுக்குவதும், அந்த நிதியினைத் திரட்டும் வழிமுறைகளைக் கூறுவதுமே அண்மைக்கால வரவு செலவுத் திட்டங்களின் பிரதான நோக்கங்களாக இருந்துள்ளன. உண்மையில் நிதியமைச்சரினால் அன்றிப் பாதுகாப்பமைச்சரினால் இலங்கையில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதே பொருத்தமாயிருக்கும். அந்தவகையில், நிதியமைச்சு, பாதுகாப்பமைச்சு ஆகிய இரண்டையும் தனது பொறுப்பிலேயே ஜனாதிபதி சந்திரிகா வைத்திருப்பதும் பொருத்தமே.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற குறுகிய காலத்தில் இரண்டு முழுமையான வரவு செலவுத் திட்டங்களையும் ஒரு சிறிய (மினி) வரவுசெலவுத் திட்டத்தினையும் சமர்ப்பித்துள்ளது. 1995ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தினையும், அதே ஆண்டு மே மாதம் ஒரு மினி வரவு செலவுத் திட்டத்தினையும், அதே ஆண்டு நவம்பர் மாதம் தனது இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தினையும் சமர்ப்பித்தது. ஒரே யாண்டில் மூன்று வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்த பெருமை இவ் அரசாங்கத்திற்கு உண்டு.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவின் போக்கினை மூன்று கட்டங்களாகப் பிரித்து நோக்கலாம்.

1. முதலாம் கட்ட ஈழப்போர் – 1983 – 1989 காலப்பகுதி
2. இரண்டாம்கட்ட ஈழப்போர் – 1990 – 94 காலப்பகுதி
3. மூன்றாம் கட்ட ஈழப்போர் – 1995

### 1-ம் கட்ட ஈழப்போர்

1983 – 1989 காலப்பகுதியிலான ஏழாண்டுகளில் அரசாங்கத்தின் மொத்தப் பாதுகாப்புச் செலவு 25129 மில்லியன் ரூபாவாகும். இக்காலப்பகுதியில் சராசரி வருடாந்தம் 3590 மில்லியன் ரூபாவினை அரசாங்கம் பாதுகாப்பிற்குச் செலவிட்டது. மேலும் 1988, 1989–ம் ஆண்டுகளில் பாதுகாப்புச் செலவில் ஒரு வீழ்ச்சியை அவதானிக்கலாம். இலங்கையின் சார்பில் இந்திய இராணுவம் ஈழப்போரை நடாத்திய காலமே இதுவாகும். அதாவது தமிழீழப் போரை நடாத்திக் களைத்துப் போய் இலங்கை இராணுவம் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த காலகட்டமே இதுவாகும்.

### 2ம் கட்ட ஈழப்போர்

1990 – 94–ற்கு இடைப்பட்ட ஐந்தாண்டுகால 2–ம் கட்ட ஈழப்போருக்காக இலங்கை அரசாங்கம் 77653 மில்லியன் ரூபாவினைச் செலவிட்டது. இக்காலப் பகுதியில் சராசரியாக வருடாந்தம் 15531 மில்லியன் ரூபாவை அரசாங்கம் போருக்காகச் செலவிட்டது. இலங்கை இராணுவம் பிரமாண்டமான அளவில் விரிவடைந்தது இக்காலகட்டத்திலேயே ஆகும். 1989–ம் ஆண்டு பாதுகாப்புப் படையினரின் சம்பளத்திற்காக அரசாங்கம் 1723 மில்லியன் ரூபாவினைச் செலவிட்டது. ஆனால் 1994–ம் ஆண்டு இச்சம்பளக் கொடுப்பனவு 10604 மில்லியன் ரூபாவாகும். எனவே 2ம் கட்ட ஈழப்போர்க் காலத்தில் பாதுகாப்புப் படையினரின் சம்பளக் கொடுப்பனவுக்காக அரசாங்கம் செலவிட்ட தொகை 513 சதவீதத்தினால் அதிகரித்தமை, பாதுகாப்புப் படையினரின் ஆட்பலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது.




மேலும் 2–ம் கட்ட ஈழப்போர்க் காலத்தில் போர்த் தளபாடங்களின் கொள்வனவுக்காகச் செலவிட்ட தொகையிலும் பெரிய அதிகரிப்பினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. போர்த் தளபாடங்களின் கொள்வனவிற்காகச் செலவிடப்பட்ட தொகை 1989–ல் 2396 மில் ரூபாவிலிருந்து

| ஆண்டு | பாதுகாப்புச் செலவு (மில். ரூபா) | மாற்றம் (சத வீதத்தில்) | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|
| 1980 | 458 | – | 0.5% |
| 1981 | 479 | 4.6% | 0.5% |
| 1982 | 486 | 1.5% | 0.5% |
| 1983 | 979 | 101.4% | 0,7% |
| 1984 | 1275 | 30.2% | 0.8% |
| 1985 | 4614 | 261.9% | 2.8% |
| 1986 | 4351 | –5.7% | 2.4% |
| 1987 | 6001 | 37.9% | 3.1% |
| 1988 | 4890 | –18.5% | 2.2% |
| 1989 | 4119 | –15.8% | 1.6% |
| 1990 | 6906 | 67.7% | 2.1% |
| 1991 | 10609 | 53.6% | 2.9% |
| 1992 | 13231 | 24.7% | 3.1% |
| 1993 | 20463 | 54.7% | 4.1% |
| 1994 | 26444 | 29.2% | 4.6% |
| 1995 | 32134 | 21.5% | 4.8% |
| 1996 | 37984 | 18.2% | 5.0% |

ஒதுக்கப்பட்ட தொகை. அண்மையில் இது 42000 மில் ரூபாவாக உயர்த்தப்பட்டது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




1994–ல் 15840 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. இவ் வகையில் 2–ம் கட்ட ஈழப்போர்க்காலத்தில் போர்த் தளபாடங்களின் கொள்வனவுக் காலத்தில் போர்த் தளபாடங்களின் கொள்வனவுக்குச் செலவிட்ட தொகையில் ஏற்பட்ட 561 சதவீதம் அதிகரிப்பு இலங்கை இராணுவத்தின் ஆயுதபலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைக் காட்டுகிறது.

### 3–ம் கட்ட ஈழப்போர்

1995–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19–ம் திகதி சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது. 1995–ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசாங்கம் தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தினைச் சமர்ப்பித்தபோது பாதுகாப்புச் செலவாக 24144 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருந்தது. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்தவுடன் மே மாதம் ஒரு மினி வரவு செலவுத் திட்டத்தினை அரசாங்கம் சமர்ப்பித்தது. பாதுகாப்புச் செலவிற்கு மேலும் 13200 மில்லியன் ரூபாவினை அரசாங்கம் ஒதுக்கியது. இதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்காக பாதுகாப்பு வரியினை 3.5 வீதத்திலிருந்து 4.5 வீதமாக உயர்த்தியது. மேலும் குறிப்பிட்ட சில பொருட்கள் மீதான கலால் வரியினை உயர்த்தியது. இலங்கை மின்சார சபையின் லாபத்திலிருந்து 1500 மில்லியன் ரூபா பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கப்பட்டது. அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்பதன் மூலம் 1000 மில்லியன் ரூபா பெறப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவில் 1000 மில்லியன் ரூபா மீளப் பெறப்பட்டு பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்தியே 1995–ம் ஆண்டு மூன்று அன்ரனோ விமானங்கள் உட்பட ஏராளமான போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்து 'முன்னோக்கிப் பாய்தல்', 'இடி முழக்கம்', 'சூரியப்பிரகாசம்' போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

முதலாம் கட்ட ஈழப்போரின் போது 3590 மில்லியன் ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவு, 2ம் கட்ட ஈழப்போரின் போது, 15531 மில்லியன் ரூபாவாக அதிகரித்து, 3ம் கட்ட ஈழப் போரின் போது, அதாவது தற்போது வருடச் சராசரி பாதுகாப்புச் செலவு 35060 மில்லியன் ரூபாவாக உள்ளது. 1983 – 89ற்கு இடைப்பட்ட ஏழாண்டுகளின் மொத்தப் பாதுகாப்புச் செலவு 25129 மில்லியன் ரூபா. ஆனால் தற்போது ஓராண்டின் பாதுகாப்புச் செலவு 39000 மில்லியன் ரூபாவாகும். 1983ம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7 வீதம் பாதுகாப்பிற்குச் செலவிடப்பட்டது.

ஆனால் இன்று உள்நாட்டு உற்பத்தியில் 5 வீதம் பாதுகாப்பிற்குச் செலவிடப்படுகிறது. வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளில் கூட சராசரியாக உள்நாட்டு உற்பத்தியில் 3.4 வீதம் தான் பாதுகாப்பிற்குச் செலவிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தின் அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவு பொருளாதாரத்தின் மீது பல சுமைகளை ஏற்படுத்தி விடுகின்றது. பாதுகாப்புச் செலவுக்காக நிதியின் ஒரு பகுதியினைப் பெறும் நோக்கத்துடன் 1992–ம் ஆண்டு அனைத்து விற்பனைகள் மீதும் 1 வீதப் பாதுகாப்பு வரியினை அரசாங்கம் விதித்தது.

காலத்துக்குக் காலம் இவ்வரி வீதம் உயர்த்தப்பட்டு வந்து தற்போது 4.5 வீத வரி விதிக்கப்படுகின்றது. இவ் வரி விதிப்பு பொருட்களின் விலைகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தி பணவீக்க விளைவுகளுக்கு வழி வகுக்கின்றது. பாதுகாப்பு வரி மூலம் பெறப்படும் வருமானம் அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவின் 40 சதவீதத்தினை மட்டுமே நிதியிடுவதற்குப் போதுமானதாகும். இதன் விளைவாக மேலும் நிதியினைப் பெறும் நோக்கத்துடன் 1996–ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் "தேசத்தைப் பாதுகாக்கும் நிதி" என்ற பெயரில் ஒரு புதிய வருமான வரியை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 15000 – 30000 ரூபாவிற்கு இடைப்பட்ட மாத வருமானம் பெறுவோர் 2 வீதத்தினையும் 30000 ரூபாவிற்கு மேற்பட்டு வருமானம் பெறுவோர் 3 வீதத்தினையும் தமது வருமானத்திலிருந்து செலுத்தவேண்டும். எனினும், பாதுகாப்புப் படையினர் இதனைச் செலுத்தத் தேவையில்லை. இவற்றைவிட 'வெண்தாமரை இயக்கம்' என்ற பெயரிலும் போருக்கான நிதியை அரசாங்கம் திரட்டிக்கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவு காரணமாகச் சமூகப்பணி, பொருளாதாரப் பணிகளுக்கு அதிகளவு நிதியினை ஒதுக்கமுடியாமல் திணறுகின்றது. கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய மூன்றுக்கும் செலவிட்ட மொத்தச் செலவில் 1984ம் ஆண்டு கல்விக்கு 52 வீதமும், சுகாதாரத்திற்கு 36 வீதமும், பாதுகாப்புக்கு 12 வீதமும் செலவிடப்பட்டது. ஆனால், 1995ல் கல்வியின் பங்கு 28 வீதமாகவும், சுகாதாரத்தின் பங்கு 19 வீதமாகவும், பாதுகாப்பின் பங்கு 53 வீதமாகவும் இருந்தது. எனவே 1980 – 1995 காலப்பகுதியில் கல்வி, சுகாதாரம் என்பவற்றின் மீதான மொத்தச் செலவின் பங்கு 88 வீதத்திலிருந்து 47 வீதமாக வீழ்ச்சியடைய, பாதுகாப்புச் செலவின் பங்கு 12 வீதத்திலிருந்து 53 வீதமாக அதிகரித்தது. எனவே இன்று அரசாங்கம் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்காகச் செலவிடும் மொத்தத் தொகையிலும் பார்க்கக் கூடுதலான தொகையினைப் பாதுகாப்புக்குச் செலவிடுகின்றது.




— சி. வரதராஜன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பஞ்சு விளக்கைத்
தூக்கிப் பார்க்கிறேன்
குளிர்கிறது
நெஞ்சு.
எங்கள் மண்
இருளால்
மூழ்கடிக்கப்பட்டபோது
ஒருவன்
எண்ணைச் சிக்கனம்
இதுவென
ஏற்றி வைத்தான்.
ஒளி பிறந்தது!
மலையாய் உயர்ந்தே
மனதில் நிற்கிறது
அவன் மதிப்பு.
பெயரறியாப் பெரியோன்
அவன் வாழ்க!

*(தி. உதயசூரியனின் கவிதை)*




# புலமையாளர்களும் பெயரறியாப் பெரியோர்களும்

## சி. சுந்தரேஸ்வரன்

**போர்**, எந்தவொரு கணத்திலும் இல்லையென்றாகி விடக்கூடிய இருப்பு, தடைகள், அழுத்தங்கள், இவை எல்லாவற்றையும் புறமொதுக்கி வாழ்வதற்காக முனைப்புடன் எழும் மனிதர்களின் வாழ்வின் குறியீடாக ஆகிவிட்ட ஒன்றே இந்தச் 'சிக்கன விளக்கு'. இது மட்டுமன்றி சிறிதளவு பெற்றோல் விடுவதற்கும், ஊதுவதற்குமென இரு குழாய்களுடன், தெருவெங்கும் ஓடும் மோட்டார் சைக்கிள்கள், தாவர எண்ணையில் இயங்கும் உழவு இயந்திரங்கள், பார ஊர்திகள், பொதுப்போக்குவரத்து வாகனங்கள் என்பனவும் இவ்வாறான வாழ்வின் குறியீடுகளே.

ஆழ்ந்து சிந்தித்தால் இன்றைய இயல்பற்ற வாழ்க்கையின் 'இயல்பான' ஓட்டத்திற்கு இந்தக் கண்டுபிடிப்புகளின் மகத்தான பங்கு புலனாகும். வாழ்க்கை ஆணியடித்தது போல் அசைவற்று நின்றுவிடாமல், நகர்வதற்கு வழிவகுத்தவை இவை போன்ற கண்டுபிடிப்புகளாகும். எனினும் இந்தத் 'தொழில்நுட்பங்கள்' எந்தவொரு மரபு ரீதியான கல்வி நிறுவனங்களிலிருந்தோ, ஆய்வு நிறுவனங்களிலிருந்தோ அன்றிப் புலமையாளர்களிடமிருந்தோ தோன்றவில்லை. மாறாக, இவற்றைத் தோற்றுவித்த பெயரறியாப் பெரியோர்கள் சாதாரண மக்களே. ஒரு தேசிய இனத்தின் ஆன்மா நசுக்கப்படும் பொழுது, அதன் புலமையாளர்களின் மௌனம் அல்லது செயலறு நிலை, எதிரியின் கொடுமையை விட தாங்கமுடியாத ஒன்றாக இருக்கிறது. ஒரு சராசரி மனிதனின் வாழ்வின் சுமையைக் குறைப்பதிலும், அவலங்களை இல்லாதொழிப்பதிலும் கல்விமான்களும், ஆய்வாளர்களும் மிகக் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருக்க வேண்டும். இவ்வாறு நடைபெறாமை உண்மையிலேயே மிக வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.

அண்மையில் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், பிரித்தானியாவிற்கான இலங்கைத் தூதுவர் திரு. விக்கிரமசிங்கஹவுடனான ஒரு பேட்டி நிகழ்ச்சியை ஒலிபரப்பியது. அப்பேட்டியில் அவர் பிரித்தானியா உட்படப் பல நாடுகளில் தமிழ் பேசும் மக்களிற்குச் சாதகமான உணர்வுகள் காணப்படுவதைக் குறிப்பிட்டு, அந் நிலையை மாற்றி அரசிற்குச் சாதகமான வகையில் மக்களின் அபிப்பிராயத்தை வென்றெடுப்பதற்கு தொடர்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தினர். 'இன்ரர் நெற்' எனும் கணணித் தகவற் பரிமாற்ற வழி மூலம், அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சில தமிழ் ஆய்வாளர்கள், தமிழ் பேசும் மக்களிற்குச் சாதகமான ஆய்வுகளையும், தகவல்களையும் வழங்கி வருவதைக் குறிப்பிட்டு இதற்கு மாற்றாக ஒரு பாரிய பிரச்சார நடவடிக்கையை சிங்களப் புத்திஜீவிகள் அரசுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரினார். இது குறித்து 03—03—96 திகதியிடப்பட்ட ஞாயிறு 'ஐலண்ட' பத்திரிகையிலும், 'எல்.ரி.ரி.ஈ', இன்ரர்நெற் கார்லெற்றனும் கனடாவும் (L.T.T.E. internet Carleton and Canada) என்ற தலைப்பில் ஒஸிமண்டியாஸ் என்பவரும் ஒரு கட்டுரையை வரைந்துள்ளார். விரல் விட்டு எண்ணக்கூடிய சில தமிழ் ஆய்வாளர்களின் முயற்சியைக் கூட அரசும், சிங்கள புத்திஜீவிகளும் உடனடியாகக் கவனத்திற்கெடுத்து அதற்கான எதிர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வினைகளை வெளியிடுவது அங்கு நோக்கப்படவேண்டிய ஒன்றாகும், இவ்வாறான விடயங்களை அவர்கள் எவ்வாறு மிக விழிப்பாகவும், அவதானமாகவும் கையாளுகின்றனர் என்பதற்கு இவை நல்ல சான்றுகளாகும்.

இந்நிலையில் ஒரு தேசிய இனம் என்ற தகுதியைத் தமிழ் பேசும் மக்கள் கொண்டிருக்கின்றனர் என்பது குறித்தும், அவர்கள் வாழும் பிரதேசம் அவர்களின் பாரம்பரியத் தாயகமே என்பதை நிரூபிப்பது தொடர்பாகவும், கடந்தகால வரலாற்றில் இத் தேசிய இனத்தின் சமூக, பொருளாதார, கலாச்சார அடையாளங்கள் பாதிக்கப்பட்டமை தொடர்பாகவும், காத்திரமான ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டனவா? அவற்றின் முடிவுகள் எந்த அளவிற்கு உள்நாட்டு, வெளிநாட்டு, பொதுசனத் தொடர்பு ஊடகங்களினூடு வெளிக்கொணரப்பட்டன என்ற கேள்விகள் நம்முன் எழுகின்றன. மறுபுறத்தில் அரசின் அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் விதத்தில்,

1. எமது பாரம்பரியப் பிரதேசத்தின் சூழல் மற்றும் அங்கு காணப்படும் வளங்கள்.

2. இம் மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையிலான விவசாயம், மீன்பிடி, மற்றும் கைத்தொழில் தொடர்பான தொழில்நுட்ப உருவாக்கம்.

3. பொதுச் சுகாதாரம் மருத்துவம்.

4. கலை – பண்பாட்டம்சங்கள் – தொடர்பூடகங்கள்.

5. தந்திரோபாய நடவடிக்கைகள் என்பன குறித்தான ஆய்வுகளும் மிக மிகச் சொற்பமான அளவிலேயே இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுவும் ஒரு கசப்பான உண்மையாகும். தமது கடின உழைப்பிற்கும், கல்வி தொடர்பான அக்கறைக்கும் பெயர்போன தமிழ் பேசும் மக்களிடையே இவ்வாறான ஓர் இடைவெளி தோன்றியுள்ளது துரதிஷ்டவசமானது. பல்வேறு சமூக, பொருளாதார அரசியல் மற்றும் கலாச்சாரக் காரணிகளால், நாம் அரச சேவைகளைப் பெறும் நோக்கில் கல்வி கற்றமை இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். உண்மையில், நாம் கற்ற கல்வியினூடாக ஆய்வு மனப்பான்மையோ அன்றிப் புதியன புனையும் ஆர்வமோ தூண்டப்படவில்லை. ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த தொழில் நுட்பங்களை அதிக சிரமமின்றிப் பின்பற்றுவதற்கான அடிப்படைகளை மட்டுமே எமது கல்வி எமக்களித்ததேயன்றி புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கும் பண்பினை அது எமக்கு வழங்கத் தவறிவிட்டது. மரபுரீதியான கல்வி நிறுவனங்களின் கையறு நிலைக்கு இவ்வாறான கல்விப் பாரம் பரியமே பிரதான காரணமாகும். புத்திஜீவிகளின் வெளியேற்றம் இதனுடன் தொடர்புபடுத்தி நோக்கப்படக்கூடியதொன்றே. தனிப்பட்ட நலன்கள், அரசினாலும் பல்வேறு போராளிக் குழுக்களாலும் பட்ட இன்னல்கள் என்பன அவர்களின் வெளியேற்றத்தைத் தூண்டின என்பது மறுக்கமுடியாததே. எனினும் அவை மட்டும் காரணமன்று. வளர்ப்பு வசதிகளற்ற சூழ்நிலையில் வாழ்வதற்கும், தொழிற்படுவதற்கும் தமது அறிவைத் தகவமைத்துக் கொள்வதற்கு அவர்களால் முடியாது போயிற்று என்பதுவும் அதற்கான பிறிதொரு காரணமுமாகும். அதாவது சாதகமான சூழ்நிலைமைகளில் பயனுடையதாகத் தோன்றிய அவர்களின் கல்வியறிவு நிலைமை உவப்பற்றதாகவும், சிரமமானதாகவும் மாறியபோது பயனற்றதாகியது. இவ்வாறாக மாறிய சூழ்நிலைகளிற்கேற்ப தமது கல்வியறிவை மாற்றிப் பிரயோகிக்க முடியாது போன போது ஏற்பட்ட கையறு நிலையில் பலர் வெளியேறினர்.

இவ்வாறான நிலை தொடர்ந்தும் நீடிப்பதற்கு நாம் இடமளிக்கக்கூடாது. கடந்தகால வரலாற்றை நோக்குவோமெனில், நெருக்கடியான சூழ்நிலைகளே மகத்தான கண்டுபிடிப்புக்களிற்கு வழிவகுத்தன என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். அர்ப்பணிப்பு மனோபாவம் கொண்ட ஆய்வாளர்கள் மிகப் பாதகமான சூழ்நிலைகளின் கீழும் தமது விடாப்பிடியான உழைப்பினால் தம் நாட்டிற்கும், தாம் சார்ந்த மக்களிற்கும் நன்மை பயக்கக்கூடிய எத்தனையோ ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றியீட்டியுள்ளனர். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு தனி மனிதனின் செயற்பாடுகள் கூட மிகப் பாரிய பங்களிப்பை வழங்கமுடியும் என்பதற்கான, வாழும் வியட்நாமிய உதாரணமாக திகழ்கிறார் கலாநிதி வொ – டொங் – சுவான். போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த வியட்நாமிய தேசத்தை அரிசியை இறக்குமதி செய்யும் நாடு என்ற நிலையிலிருந்து, ஒரு தசாப்த காலத்தினுள் உலகின் மூன்றாவது பெரிய அரிசி ஏற்றுமதி நாடு என்ற நிலைக்கு இவர் மாற்றினார். வியட்நாமிலே இருந்து ஆய்வுகளை மேற்கொள்வது என்ற துணிகரமான முடிவை வியட்நாமில் நிலைமைகள் பயங்கரமாக இருந்த இருவேறு காலப் பகுதிகளில் அவர் எடுத்தார். முதற் தடவை 1971–ம் ஆண்டு தனது பட்டப் படிப்பை முடித்த பின் பிலிப்பைன்ஸில் அவருக்குக் கிடைத்த வசதியான வேலையை உதறித் தள்ளிவிட்டு வியட்நாம் திரும்புவது என்று முடிவெடுத்து செயற்படுத்தினார். பின் 1975ல் தனது கலாநிதிப் படிப்பை ஜப்பானில் பூர்த்திசெய்த பின், பெரும்பான்மையான வியட்நாமியர் வியட்நாமை விட்டு வெளியேறிக்கொண்டிருந்த போது அவர் அவர்களுக்கு எதிர்த் திசையில் பயணித்துக்கொண்டிருந்தார்.



சிறீலங்காவைப் பொறுத்தவரையில், ஒருவரைத் தமிழரா என்று கண்டறிவதற்காக மட்டுமே பாதுகாப்புப் படையினரால் அடையாள அட்டை கேட்கப்படுகிறது. அடையாள அட்டையைக் காட்டினாலும் விசாரணை; காட்டாவிட்டாலும் பிரச்சனை என்ற நிலையில்தான் தமிழ் மக்கள் உள்ளனர். இந்நாட்டில் உள்ள தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள். சிங்கள மக்களுக்குள்ள உரிமைகளோ, சலுகைகளோ அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்பதை உணர்த்தும் விதமாகவே இந்த செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றிற்கு முற்றுப் புள்ளி வைக்காமல் கௌரவமான அரசியல் தீர்வு எனக் கூறப்படுவதை தமிழர்களால் எப்படி நம்பமுடியும்?

(கொழும்பிலிருந்து வரும் தமிழ்த் தினசரியொன்றின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"என் சொந்த வாழ்வின் குறிக்கோள் எனது நாட்டிற்கு சேவை செய்வதும் வியட்நாமிய விவசாயிக்காக உழைப்பதுமாகும்." என்று கூறும் இந்த மனிதர் தனது குறிக்கோளை அடைவதற்கு தாண்டவேண்டி இருந்த தடைகள் ஏராளம். கூட்டுப் பண்ணை முறையில் அமைந்த பயிர்ச் செய்கை முறையைக் கைவிட்டு தனிப் பட்ட விவசாயிகளுக்கு நிலத்தைக் குத்தகைக்கு வழங்கி மேற்கொள்ளப் படும் பயிர்ச்செய்கை முறையை கைக் கொள்ள வைப்பதற்கு வியட்நாமிய மார்க்சிய அரசாங்கத்தின் ஆதரவை வென்றெடுக்க கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. (இம் முயற்சியில் ஒரு தடவை அவர் மரணத்தின் விளிம்பு வரை சென்று மீண்டார்.) மிக்ப் பெரும் எண்ணிக்கையில் விரிவாக்க உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்க வேண்டியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மில்லியன் கணக்கான கிராமிய விவசாயிகளுக்கு கல்வியறிவூட்டி அவர்களை உற்சாகப் படுத்தி புதிய முறைகளை பின்பற்றுவதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இத்தனை பணிகளையும், செய்து முடிப்பதற்குத் தேவையான அர்ப்பணிப்பும், விடாமுயற்சியும்தான் அவரின் வெற்றிக்கு காரணங்களாக அமைந்தன. இவ்வாறான தராதரங்களே எமது ஆய்வாளர்களிடமிருந்து இன்று எதிர் பார்க்கப்படுகின்றன. இதேபோன்ற சூழ்நிலைகளில் சரித்திரம் படைத்த இன்னுமொரு விஞ்ஞானி பெரு நாட்டைச் சேர்ந்த பெண் ஆய்வாளர் பல்மீரா வென்றோசில்லா ஆவார். மலேரியா நோயைக் காவும் அனோபிலிஸ் நுளம்பின் குடம்பிகளை பசிலஸ் துரிஞ்சியென்சிஸ் எனும் பக்ரீரியாக்களை உபயோகித்து அழிப்பதற்கு வழிவகுத்தமையே இவரது சாதனையாகும். இவ்வாறான பக்ரீரியாக்களை வளர்ப்பதற்கு வழமையாக உபயோகிக்கப்பட்டு வந்த விலையுயர்ந்த வளர்ப்பு ஊடகக் கரைசலுக்குப் பதிலாக, இளநீர்க் குரும்பைகளினுள் இவற்றை வளர்க்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்ததன் மூலம், இம்முறையை பரவலான பாவனைக்கு கொண்டுவர இவர் உதவினார். "ஒளிரும் பாதை" எனும் கெரில்லா அமைப்பின் தாக்குதல்களினால் பெரு நாட்டில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு இவருக்குக் கிடைத்திருக்கக்கூடிய வசதிகள் குறித்து நாம் மிக இலகுவில் அனுமானிக்க முடியும். எனினும் இவர்கள் சூழ்நிலையின் கைதிகளாக வாழாவிராது முனைப்புடன் உழைத்ததனாலேயே சாதனைகளைப் புரியக்கூடியதாக இருந்தது. இவ்வாறான அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட ஆய்வாளர்கள் உருவாவதற்கு இளம் சந்ததியினரிடையே இது தொடர்பாண விழிப்புணர்வையும் பரிச்சயத்தையும் ஏற்படுத்துவது அவசியமானதாகும். இதற்காக தமிழில் பல்வேறு ஆய்வு நூல்களும், இங்கு நடைபெறும் ஆய்வுகளை வெளிக்கொணரும் வகையிலான ஆய்வுச் சஞ்சிகைகளும் வெளியிடப்படுவது மிக அவசியம். ஜப்பானில் உள்ள புகழ்பூத்த விஞ்ஞானிகளின் ஆய்வுகள் முதலில் மொழியிலேயே வெளியிடப்படுகின்றன. பின்னரே அவை அவற்றின் முக்கியத்துவம் கருதி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் படுகின்றன. ஜப்பானியரின் தொழில் நுட்ப சாதனைகளிற்கு அவர்களிடையே உள்ள ஆய்வு முயற்சிகள் தொடர்பான பரிச்சயமே மிக முக்கியமான காரணியாகும். இப்பரிச்சயத்தை உருவாக்குவதில் தமது ஆய்வுகளைத் தமது மொழியில் வெளியிடும் அவர்களின் பண்பு காத்திரமான பங்கினை ஆற்றியுள்ளது. இவ்வகையில் இங்கு 'ஆய்வு', 'தமிழீழ நோக்கு' என்ற இரு ஆய்வுச் சஞ்சிகைகள் ஆரம்ப முயற்சிகளை வெளிக்கொணர்ந்தன. எனினும் இவை தொடர்ந்து வெளிவரவில்லை. இவைபோன்ற சஞ்சிகைகள் இங்கு வெளியிடப்படுவது காலத்தின் தேவையாகும். எனவே, இதுவரை காலமும் உருவாகத் தவறிவிட்ட புத்தாக்கச் சிந்தனையுடனான ஆய்வுப் பாரம்பரியம் இங்கு இனியாவது உருவாதல் வேண்டும். ஒரு இனம் என்ற வகையில் எமது சொந்த அடையாளங்களை வெளிக்கொணரும் வகையில் எமது சொந்தப் பொருளாதார அமைப்பை உருவாக்கும் வகையிலும் இது அமைதல் வேண்டும். இந்த வரலாற்றுக் கடமையை எமது புலமையாளர்கள் தோளில் சுமப்பார்களென இந்த நாடு நம்பிக்கையுடன் காத்திருக்கிறது.

★★★

# வல்பொல ராகுல தேரோவின் நகைச்சுவையும் இனவெறியும்

**அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்புக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றுக்கு வல்பொல ராகுல தேரோ வழங்கிய பதில்:**

அதோ! அவர்கள்தான் அனைத்தையும் சிக்கலாக்குகின்றனர். நான் கூறுவது இதுதான் விடுதலைப் புலிகளுக்கு!

"பயங்கரவாதிகளுக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தெரிவதில்லை. அவர்களுக்கு நாம் பேசும் மொழி புரிவதில்லை. அவர்களின் பாஷை தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள்தானே! அனுருத்த ரத்வத்தவுக்கு அந்த மொழி தெரியும் அல்லவா அதனை அவரைச் செய்ய விடவேண்டும்.

இங்கு வேறுபாடு காட்ட முயற்சிப்பது அவர்கள்தான். அவர்கள் அந்தக் கதையை உருவாக்கினார்கள். வெளிநாடுகள் அவற்றுக்கு ஆதரவு வழங்குகின்றன. நம் இரு பிரிவினரிடையே எதுவித இடைவெளியும் இல்லை. தீர்க்க முடியாத பிரச்சினை ஒன்றுமில்லை. சிங்கள மொழியில் அவ்வாறு கூறும் 'இனப்பிரச்சினை' என்னும் சொல்லொன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இதுபற்றி றோகண வஜிரா ஞானதேரோவிடம் கலந்துரையாடல் ஒன்றின்போது கேட்டேன். அவரும் இல்லை என்றார்.

எமது நாட்டில் அப்படியொரு சிங்கள தமிழ் வேறுபாடு இல்லை. பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருப்பதற்கு பிரச்சினை ஒன்றுமில்லையே! அந்தப் பேச்சுவார்த்தைகள் காரணமாகத்தான் பிரச்சினை இந்தளவுக்கு நீண்டது. நான் கூறுவது இவ்வளவுதான். இது ஒரு சிங்கள பௌத்த நாடு. அது எமது நாட்டின் அடையாளம். உலகில் சிங்கள பௌத்த நாடாக இருப்பது இந்த இலங்கை மட்டுமே. இந்நாட்டில் 70 சதவீதத்துக்கும் மேலாக இருப்பது பௌத்தர்கள் அல்லவா? ஆகவே இந்த நாடு ஒரு சிங்கள நாடு. அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சகாப்தத்தின் பிரதிபலிப்பு




இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருநாள் சர்வதேச கருத்தரங்கில், இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணல் என்ற ரீதியில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்தீர்மானங்கள் சிறீலங்கா அரசினைப் பொறுத்து கசப்பானதாக இருப்பினும் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று இவ்வாறானதொரு நிலையிலேயே சாத்தியமானது மட்டுமன்றி நிதர்சனமானதும் ஆகும். இக்கருத்தரங்குகளில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பினும் இலங்கைத் தீவானது இரு தேசங்களைக் கொண்ட தீவு என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்று காண்பதற்கு சிங்கள தேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சிறீலங்கா அரசும் தமிழ்த் தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இரு தீர்மானங்களும் ஏனைய தீர்மானங்களை விட முக்கியமாவையானதும் யதார்த்தத்தில் பண்பட்டவையும் ஆகும். சிறீலங்கா அரசும் பௌத்த பேரினவாதிகளும் எவ்வளவுதான் கூப்பாடு போட்டாலும், அன்றி சிங்கள குடியேற்றங்கள் மூலமும் – இராணுவ ஆக்கிரமிப்புக்களின் மூலமும் வடக்கு கிழக்கில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முனைந்தாலும் இப்பிராந்தியம் தமிழர் தாயகம் என்பது மறுதலிக்க முடியாது. இதனை வரலாற்று ரீதியாகவோ அன்றி நவீன தேசங்களின் உருவாக்கலின் படியோ புறந்தள்ளிவிட முடியாது. ஆனல், நீண்டகாலமாக, குறிப்பாக இலங்கைச் சுதந்திரத்தின் பின் இந்த உண்மையை மாற்றுவதற்கு சிறீலங்கா அரசாங்கங்கள் பகீரத முயற்சிகளை எடுத்தன என்பதை மறுப்பதற்கில்லை. தற்பொழுது கூட இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் தமிழர் தாயகத்தை சிறீலங்கா அரசின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்ட பகுதி என்பதை வலியுறுத்துவதில் சந்திரிகா அரசாங்கம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இருப்பினும் இலங்கைத் தீவின் ஒரு பகுதி தமிழருக்குச் சொந்தமானது என்பது மாறிவிடமாட்டாது. அதாவது யாழ் நகரையோ அன்றி ஏனைய எப் பகுதிகளையோ இராணுவம் கைப்பற்றுவதன் மூலம் அதனை தமிழர் தாயகம் இல்லை என்று வாதிடமுடியாது. அது ஒரு இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பகுதியென்றே கொள்ளுதல் வேண்டும். அதாவது ஒரு தேசத்தை வேறொரு நாட்டு இராணுவம் ஆக்கிரமிப்பதன் மூலம், அத்தேசமும், மக்களும் ஆக்கிரமித்த நாட்டின் தேசமாகவோ மக்களாகவோ மாறிவிட முடியாது. இதேபோன்றதே போராடும் சக்தி ஒன்று இருக்கும்போதே அதனைப் புறந்தள்ளிவிட்டு ஒரு பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்பது. தமிழர் தேசிய இனப்பிரச்சினையை விடுதலைப் புலிகள் இயக்கமே தலைமை தாங்கி நடாத்துகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை சிறீலங்கா அரசானது என்னதான் பயங்கரவாத அமைப்பு எனக் கூறிக் கொண்டாலும், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்றினை விடுதலைப் புலிகளின் இஷ்டமின்றி மேற்கொள்ள முடியாது என்பது கடந்த கால அனுபவம் மட்டுமன்றி உலகமே ஒப்புக்கொண்ட விடயமுமாகும். விடுதலைப் புலிகள் இயக்கமின்றி தமிழ்க் குழுக்களின் துணையுடன் ஒரு தீர்வுத்திட்டத்தை திணித்துவிட இந்தியா மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தமை இதற்கு சிறப்பானதொரு உதாரணமாகும். இந்த நிலையில் சிறீலங்கா அரசு தனது இராணுவத்தின் துணையுடன், தனித்தோ அன்றி தமிழ் மக்களின் முன் ஆயுதங்களின்றிச் செல்லத்தயங்கும் தமிழ்க் குழுக்களின் உதவியுடனோ தீர்வு கண்டுவிடலாம் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகும்.

அத்தோடு இப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்துடனேயே பேசித் தீர்வுகாண வேண்டும் என்பதை உலகநாடுகள் பலவுமே ஏற்றுக்கொண்டுள்ளன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கை பயங்கரவாதச் செயல்களை ஒத்தது ஒன்ற ரீதியில் கருத்துக்களை வெளியிடும் அமெரிக்கா கூட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்றே கருதுகின்றது எனலாம். இந்த நிலையில் அவுஸ்திரேலியா கருத்தரங்குத் தீர்மானமானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான யதார்த்தத்திற்கு சார்பான பரிந்துரையை எடுத்திருக்கின்றது என்று உறுதிபடக் கூறலாம். ஆனால், இப் பரிந்துரையை சிறீலங்கா அரசானது வழமை போன்று கருத்தில் கொள்ளாமல் போகலாம். ஆனால், இப் புறக்கணிப்பானது யதார்த்தத்தை நிராகரிப்பதாக அமைகின்றது என்பது மட்டுமல்ல இதன் வளர்ச்சிப் போக்கானது எதிர்காலத்தில் இலங்கையில் இருவேறு தேசங்கள் உருவாகுவதற்கும் நிலைபெறுவதற்குமே இட்டுச்செல்லும் எனத் துணிந்து கூறமுடியும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இனம் பெயர்ந்த பறவைகள்

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் கரையில் முட்டி மோதி அருகில் வளர்ந்திருந்த புற்களையும், செடிகளையும் அரவணைத்து ஓடிய இரணைமடு வாய்க்கால் நீர், தன் கலகலத்த ஓசையை எங்கோ ஒளித்து வைத்து விட்டு, அடிப்பாகத்தின் குறுணி மணல் கண்களில் தெரியுமளவிற்கு தன் அளவைக் குறைத்துக் கொண்டு இது பங்குனி மாதம் என்று பறைசாற்றியது. பச்சை நிற மரம், செடிகளும் கிரவல் தெருவின் புழுதியால் முலாம் பூசப்பட்டு செம்மை படர்ந்து தம் செழுமையை இழந்து நிற்கின்றன. தயங்கித் தயங்கி வீசிய காற்றுக்கூட எங்கோ உலைக்களத்துக்குள் பிறந்து வந்தது போன்ற திமிருடன் வெப்பத்தை அள்ளி வீசியது.

வாய்க்கால் கரையோரமாக நீண்டிருந்த தெருவில் மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்த ஆறுமுகம் மாஸ்ரர் மணிக்கூட்டைத் திருப்பிப் பார்த்தார்.

அது ஆறு மணிக்கு இன்னும் ஐந்து நிமிடம் இருப்பதாகக் காட்டியது. வயல் வெளிகளுக்கப்பால் தொலை தூரத்தில் உயர்ந்து வளர்ந்திருந்த சூரியன் மஞ்சள் குளிக்க இன்னும் ஆரம்பிக்காதது ஆறுமுகம் மாஸ்ரருக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

யோ. மைதிலி

தண்டவாளங்களின் மேல் சிலிப்பர் கட்டைகளை அடுக்கி செய்யப்பட்டிருந்த பாலத்தில் இறங்கி வாய்க்காலைக் கடந்து மறுகரைக்கு வந்து சேர்ந்தார் அவர். அவருக்கு எதிர்ப்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவரைக் கடந்து 'தடதட வென்ற' ஒலியுடன் பாலத்தின் அடுத்த கரையின் தெருப்புழுதியைக் கிளப்புவதற்காக அவசரமாகச் சென்றுகொண்டிருந்தது.

ஏற்கனவே 'ஆஸ்மா' நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஆறுமுகம் மாஸ்ரர் கைக்குட்டையால் மூக்கை மூடிப் பிடிக்காத குற்றத்திற்காகச் சிரமத்துடன் மூக்கை உள்ளிளுத்துக்கொண்டார்.

அவரை அறியாமலேயே அவரது மனதில் வெறுப்பும், கோபமும் சேர்ந்த ஒரு உணர்வு தோன்றியது. ஆனால் அது எவர் மீது என்பதை அவராலேயே புரிந்துகொள்ள முடியவில்லை.

முகத்தைச் சுற்றிப் பறந்த கிரவல் புழுதியை மெல்லக் கைகளால் வீசி அகற்றிவிட்டு, ஒரு பெருமூச்சுடன் மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

அவர் வன்னிக்கு வந்து சேர்ந்த போது வாய்க்கால் கரையோரமாகத் தெருவின் கிழக்குப் பக்கத்தை நிறைந்திருந்த நாவுண்ணிப் பற்றைகளும், சிறு கொண்டல் மரங்களும் இப்போது காணாமற் போய்விட்டன. அவ்விடங்களில் பெரிதும், சிறிதுமாக ஒரு ஒழுங்குமுறைக்கு அமையாமலே ஓலைக் கொட்டில்கள் முளைத்திருந்தன.

இவர்களில் அனேகமானவர்கள் அவருக்கு ஏற்கனவே அறிமுகமானவர்கள். தின்னைவேலிச் சந்தியைச் சுற்றியே அவர்கள் குடியிருப்புக்கள்; தொழில்கள்கூட தின்னைவேலிச் சந்தையின் வியாபார சூட்சுமங்களுடனே பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தன. இடப்பெயர்வின் தாக்கம் அவர்களின் குடியிருப்புக்களில் மட்டுமன்றி காய்ந்து கருகிப் போன உருவங்களிலும் தெளிவாகவே தென்பட்டது.

கிடுகுவேலி, துலாக்கிணறு இல்லாத குளிப்பு, நாற்புறமும் கற்சுவரால் கட்டப்பட்ட மலசல கூடம் இல்லாத காலைக்கடன்கள், ஷொப்பிங், போகாத மாலை நேரங்கள், கும்பல் கும்பலாக கோயிலுக்குச் சென்று களிக்கும் திருவிழாக்களும், வெள்ளிக்கிழமைகளும் இல்லாமை என இவர்கள் இப்போது ஒரு புதிய வாழ்வுக்குள் புகுந்து விட்டார்கள். கழுதைக்கு முன்னால் கட்டப்பட்ட புல்லுக்கத்தையாக எட்ட எட்ட போய்க்கொண்டிருக்கும், நிவாரணங்களும் மூச்சுத்திணறும் குடிசை வாழ்வும் எப்படி இவர்களுக்கு ஜீரணமாகின்றது. அவர்களுடன் தன்னை ஒருமுறை ஒப்பிட்டுப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பார்த்துக்கொண்ட பொழுதுதான் அவர் பெரிதாகப் பாதிப்படையவில்லை என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆறுமுகம் மாஸ்ரர் புத்தூருக்கு இராணுவத்தினர் வந்த செய்தி அறிந்ததுமே எவ்வித தடுமாற்றத்திற்கும் இடம் வைக்காமல் கிளாலியால் படகேறி விட்டார். ரி.வி. பிரிட்ஜ், கோழிக்கூடு எனக் கொண்டு வரக்கூடிய அத்தனை பொருட்களையும் தனி வள்ளம் பிடித்து வன்னிக்கு கொண்டுவந்து விட்டார். ஆனால் அவர் காலம் காலமாக வாழ்ந்து வந்த அந்த நாலு பரப்புக் காணியும், அதில் அவர் கட்டிய அழகான, பெரிய கல்வீடும் அடிக்கடி நெஞ்சுக்குள் வந்து உறுத்திக்கொண்டிருந்தன.

குழம்பிப் போயிருக்கும் அவரது மன உணர்வுகளைச் சீராக்க முயல்வது போன்ற முனைப்புடன் பெருமூச்சு ஒன்று அவரிலிருந்து வெளிவருகின்றது.

இரும்புக் கேற்றைத் திறந்து உள்ளே வந்த அவர், அதைத் திரும்ப மூடிக் கொக்கியைப் போட்டுவிட்டு உள்ளே செல்கிறார். அவருக்கும், அவருடைய குடும்பத்தினருக்குமாக ஒதுக்கப்பட்டிருந்த முன்னாள் உழவியந்திரக் 'கராஜ்ஜை' நோக்கி மெல்ல நடக்கிறார்.

சண்முகலிங்கம் மாஸ்டர் அவ்வுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியராக நியமனம் பெற்று வெறுங் கையுடன் கிளிநொச்சிக்கு பஸ் ஏறிய சண்முகலிங்கம் இன்று ஓய்வுபெற்ற அதிபராக மட்டுமன்றி, முப்பது ஏக்கர் நிலங்கள், உழவியந்திரம், பெரிய கல் வீட்டுடன் கூடிய இரண்டு ஏக்கர் மேட்டுக்காணி அதற்குள் தென்னை, பலா, மா, வாழை என்று கொப்பளிக்கும் செழிப்பு எனப் பல வளங்களுக்கும் உடமையாளனாகி விட்டார்.

இடம்பெயர்ந்து ஆறுமுகம் மாஸ்ரர் குடும்பம் அவரிடம் வந்தபோது, உடனடியாகவே 'ட்றக்ரர்' விட ஒரு கொட்டில் போட்டுவிட்டு கராஜ்ஜை குடியிருக்கும் வீடாகவே மாற்றிக் கொடுத்துவிட்டார். கட்டுக் கிணறு, கக்கூசு என அத்தியாவசிய தேவைகளுக்கு எவ்வித குறைபாடும் இல்லாதிருந்த போதிலும், ஆறுமுகம் மாஸ்ரரின் மனதில் ஏதோ ஒரு நெருடல் இருக்கத்தான் செய்தது.

எங்கோ வெளியில் சென்றுவிட்டு அப்போதுதான் வந்து இறங்கிய சுகந்தன் சைக்கிளை 'ஸ்ராண்டில்' நிறுத்திய படியே "அப்பா! புதுப்படக் கொப்பி ஒண்டு கொண்டு வந்தனான். போட்டுப்பாப்பமே...?" என்றான்.

"வந்தனீ முதல் உடுப்பை மாத்தி முகத்தைக் கழுவித் தேத்தண்ணியைக் குடி... பிறகு படம் போடலாம்"

சுகந்தன் எதுவுமே பேசவில்லை. மெல்ல வீட்டுக்குள்ளே போனான். ஆனால் திடீரென அவன் முகம் கறுத்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை. அது பொங்கி வந்த ஏதோ ஒரு ஆர்வம் கரைந்ததன் எதிரொலியாயிருக்கலாம் என்ற ஊகம் அவரிடம் எழுந்த போது மனதினுள் ஒரு சின்ன நெருடல் ஏற்பட்டது.

படிப்பு, விளையாட்டு, படம் என ஒரு வழமையான சுற்று வட்டத்துக்குள் தடம் பிசகாது ஓடிக்கொண்டிருந்த அவனது நடைமுறைகள் கூட, இடப்பெயர்வினால் குழம்பிப் போய் விட்டன. இது, அது என்றில்லாமல் ஏதோ ஒன்றில் ஆறுதலடைய அவன் மனம் துடிப்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

கதிரையில் போய் அமர்ந்தவாறு "சுகந்தன்" என மகனை அழைத்தார்.

சாரத்தை மாற்றியவாறு சுகந்தன் அருகில் வந்தான். தான் நிற்குமிடத்திலிருந்தே வழமையாக "என்னப்பா" என்று ஒலிக்கும் குரல் வெளிவராமல் சுகந்தனின் மனக் கசப்பை வெளிப்படுத்தியது.

"ரி.வியைப் போடன்" என்றவர், "என்ன கொப்பி அது" என ஒரு கேள்வியைப் போட்டு வைத்தார்.

"புலம்பெயர்ந்த பறவைகள்!"

சுகந்தனின் பதில் அவரை ஒருமுறை தலைநிமிர வைத்தது. மெல்ல மனதுக்குள் மீண்டும் ஒரு முறை "புலம் பெயர்ந்த பறவைகள்" என்பதைச் சொல்லிக்கொண்டார்.

"ம்... சரி.... சரி... போடு" என்றவாறே ரி.வி. பார்ப்பதற்குத் தன் மன நிலையைத் தயார்ப்படுத்த ஆரம்பித்தார்.

சுகந்தன் ஒரு சிரட்டையில் நெருப்புத்தணலை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

இனி நெருப்பைக் கொழுத்தி 'காபறேற்றரைச்' சூடாக்கி கயிற்றை இழுத்து, ஜெனரேட்டருடன் மல்லுக்கட்டி 'ஸ்ராட்' பண்ண வேண்டும்.

ஒரு சுருட்டை எடுத்துப் பற்றவைத்தார் ஆறுமுகம் மாஸ்ரர். ஏதோ ஒரு இடைவேளை ஓய்வை அனுபவித்த சுகம் மனதில் நிறைந்தது.

வெளியே 'ஜெனெரேட்டரின்' சத்தம் ஆரம்பிக்க 'டெக்கில்' சைபர் இலக்கங்கள் ஓடத்தொடங்குகின்றன.

சுகந்தன் படப்பிரதியை கொண்டு வந்து 'டெக்கினுள்' தள்ளி விட்டு, அதை இயக்கிவிடுகிறான்.

ரி.வி. திரை விழிப்படைகின்றது.

ஆங்கிலத்தில் திரையில் விழுந்த சில எழுத்துக்களை அடுத்து தமிழில் பல வர்ணங்களில் மாறி மாறி 'புலம் பெயரும் பறவைகள்' என்ற வசனம் காட்சிப்படுத்தப்படுகின்றது.

எழுத்துக்கள் மங்கி மறைய வெண் நுரைகளால் தன்னை அலங்கரிக்கும் கருநீலக்கடல், அதன் பின்னே பரந்த ஆகாய வெளி நீலத்திரையாக வானம் ஒளிவிட, ஆங்காங்கே வெண்பஞ்சு திரள்களாக மேகக் கூட்டங்கள்.

எங்கோ வெகு வெகு தொலைவில் புள்ளியாகத் தெரிந்த ஒரு காட்சி மெல்லப் பெரிதாகிக் கொண்டு வருகின்றது. காட்சி நெருங்க நெருங்க அது புள்ளியல்ல; புள்ளினங்கள் எனத் தெரியவருகின்றது.

சுகந்தனின் விழிகள் அகல விரிகின்



றன. "ஊருப்பட்ட குருவிகள்!", அவனால் ஆச்சரியத்தைத் தாங்கமுடியவில்லை.

ஆறுமுகம் மாஸ்ரர் மெல்லச் சிரிக்கிறார். "இதுகள் குருவிகள் இல்லை. சைபீரிய நாரைகள்!"

"இதுகள் எங்கையிருந்து வருகுது?..."

"ரஷ்யாவின்ரை துருவப் பகுதியிலையிருந்து"

"ரஷ்யாவோ... ஐயோ.... நாரை இவ்வளவு தூரம் பறக்குமோ?"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"எல்லா நாரையுமில்லை. இதுகளைப் புலம்பெயரும் பறவைகள் என்டு சொல்லுறது. காலநிலையள், சூழ்நிலைகள் மாறயுக்கை இடம்பெயரும். பிறகு திரும்பிப் போடும்."

சுகந்தன் திரும்பித் தன் தகப்பனின் முகத்தைப் பார்த்தான். அவன் விழிகளில் "அப்ப நாங்கள் எப்ப திரும்பிப் போறது?" என்ற கேள்வி ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் எழுந்து நிற்பதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது.

அவர் பார்வையை வேறு பக்கம் திருப்பி சுவரில் தொங்கிக்கொண்டிருந்த போராளியான அவரது மூத்த மகனின் படத்தைப் பார்க்கிறார். திரையில் காட்சி மாறுகின்றது.

பரவைக்கடல் –

மத்தியில் சிறுசிறு தீவுகள். சிறு குன்றுகளாக உயர்ந்து நிற்கும் மண் பிட்டிகள். தூரத்தே தெரியும் பனங் கூடல்கள். நிர்மலமான வானம்!

இவற்றிற்கப்பால் வெட்ட வெளியின் நடுவில் ஒரு சிறு கோவில்!

அது பார்த்துப் பார்த்துப் பரிச்சயமான இடமாகத் தெரிகின்றது.

ஆனையிறவு –
ஆட்காட்டிவெளி –
வல்லைக்கடல் –
செம்மணி வெளி –

ஒவ்வொன்றாக நினைவுக்குக் கொண்டு வருகின்றார். மூளையின் படிமங்களுக்குள் எவையுமே விழ மறுக்கின்றன. மீண்டும் நினைவுகளுக்குள் ஓடித்திரிகிறார்.

கொம்படிப்புளி –

சரியாக அடையாளம் கண்டுகொண்டதன் திருப்தி முகத்தில் இழையோடுகிறது.

அங்கு தென்பட்ட பல தீவுகளில் ஒன்றை இலக்காக வைத்து கமரா மெல்ல மெல்ல கிட்ட நெருங்குகிறது.

காற்றைக் கிழிக்கும் இரைச்சலுடன் தீவு திடீரென மேலெழுகின்றது.

திடுக்கிட்டுத் திகைத்தவராய் திரையை மீண்டும் உற்று நோக்குகின்றார்; அது ஒரு பறவைக்கூட்டம்.

அத்தனையும் சைபீரிய நாரைகள்!

"அப்பா நல்ல வடிவாயிருக்குது!", சுகந்தன் கத்துகிறான். அதைத் தொடர்ந்து வேறு சில தீவுகளும் மேலெழுந்து வருகின்றன.

அவனுடைய கருத்தை ஆமோதித்து, ஏதோ சொல்ல முயன்றவர் திடீரெனத் திடுக்கிடுகிறார்.

காட்சியில் ஏதோ ஒரு குழப்பம் தொனிக்கிறது. குழப்பம் காட்சியிலா அல்லது அவரது கண்களிலா என்பதை உடனடியாகத் தீர்மானிக்க முடியாத நிலையில் கண்ணாடியைக் கழற்றுகிறார். திரையில் எதையோ தேடுபவராக, வெறுங் கண்களுக்கு அபரிதமான சக்தியைக் கொடுத்து நோக்குகிறார்.

அத்தனையும் கழுகுகள்!

மூளைக்குள் ஏதோ பயங்கரமான ஜந்து புகுந்து அதன் அடுக்குகளையும், அவ்வடுக்குகளில் படிந்திருந்த நம்பிக்கைகளையும் விறாண்டுவது போல ஒரு வேதனை.

ரஷ்யாவில் ஏது கழுகு? கழுகுகள் இடம்பெயர்வதாக அவர் கேள்விப் பட்டதில்லையே.

இப்போ என்ன நடந்துவிட்டது?

கழுகுகள் மூர்க்கத்தனமான வேகத்துடன் வட்டமிடுகின்றன. உலகத்தையே அதிரவைக்கும் பேரிரைச்சல் எழுகின்றது. எங்கோ மிகத் தொலைவில் சிறு பறவைகளின் அவல ஒலி எழுந்து அவர் நெஞ்சைப் பிழிகின்றது.

"என்ன இப்போ நடக்கிறது?" தனக்குள்ளே பிறந்த கேள்விக்குப் பதில் கண்டு பிடிக்க முடியாமல் தடுமாறுகிறார்.



கழுகுகளின் இரைச்சல் காதைச் செவிடாக்கும் படியாகவும் நெஞ்சைக் கிலிகொள்ள வைக்கும் வகையிலும் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

கண்ணுக்கும், நெஞ்சுக்கும் வாழ்வுக்கும் ஆனந்தத்தையும், நம்பிக்கையையும் தந்துகொண்டிருந்த ரஷ்ய நாரைகள் எப்படிக் கழுகுகளாக மாறின? வசந்தத்தைச் சுமந்து வரும் இவை ஏன் இப்படிச் சூறாவளியாக மாறிக் குதியாட்டம் போடுகின்றன?

கழுகுகளுக்குப் பிணம் மட்டும் தான் தேவை. மனித உடல்களைக் கொத்திக்குதறி, கிழித்துத் துண்டம் துண்டமாய், சதைச் சிதறல்களாய்...

நினைக்கவே அவரது நெஞ்சு நடுங்குகிறது.

அவர் திரைக்குள் ஆழமாக ஊடுருவிப் பார்க்கிறார். எங்காவது ஒரு கரிக்குருவி தெரிந்தால் நிம்மதி.

கழுகுகள் கரிக்குருவிக்குப் பயம் என்றும், அவை எவ்வளவு உயரத்தில் ஓடி ஓடிப் பறந்தாலும் கரிக்குருவி கலைத்துக் கொத்தும் என்றும் அவர் கேள்விப்பட்டிருக்கிறார்.

ரீ.விக்கு நீளமும் உயரமும்தான் உண்டு. அகலப்பக்கத்தையும் ஒரே நேரத்தில் காட்டும் முப்பரிமாணத் தன்மை அதற்கு இல்லை என்பது நினைவுக்கு வருகிறது.

கரிக்குருவி எங்காவது உட்பக்கத்தில் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கை மனசை நிறைக்க மனம் சற்று நிம்மதியடைகின்றது. கதிரைச் சட்டத்தில் கிடந்த துவாயை எடுத்து முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொள்கிறார்.

சுகந்தன் ரீ.வியுடன் ஒன்றிப்போய் அசையாது அதையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

எனினும் கழுகின் பேரிரைச்சலும், பறவைகளின் அவல ஒலிகளும் இன்னும் கேட்டுக்கொண்டே இருக்கின்றன.

அவரது மனம் ரீ.வி, திரையை இழுத்துக்கொண்டு எங்கோ ஓடுகின்றது. அதைத் தடுத்து நிறுத்த அவர் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகின்றன.

அந்தக் கிராமத்தில் கடல் உள்ளொடுங்கி வளைந்து இருப்பதனால் தான் போலும் அதற்கு 'நாச்சிக்குடா' என்று பெயர் வந்திருக்க வேண்டும்.

கடலின் தென் முனையிலிருக்கும் கமரா வடமுனையிலிருக்கும் தென்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னந்தோப்பைத் தெளிவாகக் காட்டுகி றது. தென்னைகள் மத்தியில் தெட்டம் தெட்டமாகக் குடிசைத் தொகுதிகள். மண்டைதீவு, கொழும்புத்துறை, மாதகல் என எங்கிருந்து வந்தார்களோ அந்தந்த இடத்தின் பெயர்களை நமது குடியிருப்புகளுக்கு வைத்து இழந்து போன வாழ்வை, இடம்பெயர்வுக் குள்ளும் அவ்வேழைத் தொழிலாளர் கள் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

தொழிலுக்குச் சென்ற வள்ளங்கள் இன்னும் திரும்பாததனால் கடற்கரை வெறிச்சோடிப்போய்க் கிடக்கிறது.

தூரத்தே தெரிந்த காட்டின் பற்றை களை நோக்கிச் செல்லும் ஒன்றிரண்டு பேர் மட்டும் அக்கிராமம் விழிப்படை வதற்குக் கட்டியம் கூறுகின்றனர்.

கிழக்குத் திசையாகத் திரும்பிய கமரா வரண்டு கிடக்கும் பாலை மரங் களுக்குள்ளும், நாவல் மரங்களுக்கும் மேலாக உயருகின்றது. நிர்மலமான வானத்தில் தோன்றிய கரும்புள்ளிக ளின் பின்னணியில் பேரிரைச்சல் எழு கின்றது.

இன்னும் முற்றாகத் துயிலெழாத அக்கிராமம் என்ன நடக்கின்றது என் பதைப் புரிந்துகொள்ளாமல் தடுமாறு கின்றது. இன்னமும் வெளிச்சத்தி னால் முலாம் பூசப்படாத அந்த வானத் தைக் கழுகுகள் மின்னல் வேகத்தில் நிறைக்கின்றன. பயங்கரமான பேரி ரைச்சல் எழுந்து திக்குகளை அதிர வைக்கின்றன.

கழுகுகளின் வாயிலிருந்து தீப்பந் தங்கள் வீசப்படுகின்றன. நெருப்புக் கோளங்கள் உருண்டை உருண்டை யாக குடிசைகளை நோக்கி வருகின் றன.

எங்கும் அவலக்குரல்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பேதமில் லாமலே கதறலொலிகளில் சகலரும் கலக்கின்றனர். கையொருபக்கம், காலொருபக்கம், தலையொருபக்க மாக உடல்கள் சிதறுகின்றன. வெண் மணற்பரப்புகள் தன்னிறத்தை அவல மாக இழந்துகொண்டிருக்கின்றன.

ஆறுமுகம் மாஸ்ரர் ஒன்றும் புரி யாதவராக தலையை ஒரு முறை குலுக்கி விட்டு, மீண்டும் ரீ.வி. திரை யைப் பார்க்கிறார்.

அவை கழுகுகளா?

மீண்டும் உற்றுப்பார்க்கிறார். அவை சைபீரிய நாரைகளா?

எல்லாம் ஒன்றாகி, ஒன்றே பலவாகி, மனிதப் பலியை அரங்கேற்றிக்கொண்

# பசிய மனங்களில் பதியும் ஓவியங்கள்




'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்'

இங்குள்ள ஆரம்பப் பாடசாலைகளில் நிறையக் குழந்தை ஓவியர்கள் ஏதாவது வரைந்துகொண்டே இருப்பார்கள். அவர்களின் கீறல்கள், கிழிசல்கள் அனைத்தும் அரங்கேறும். அவர்களின் ரசனையை இனங்கண்டு அவர்களோடு ஆசிரியர் இணைந்து செயற்படுவார். இதனால் குழந்தைகள் எழுத்துக்களைக் கூட இலகுவாக வரைந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு அது கடினமாக இருப்பதில்லை. சித்திரங்கள் மூலம் கருத்து மிகத் துரிதமாக பற்றிக்கொள்ள உதவி அவனை மீண்டும் மீண்டும் உற்சாகத்தோடு ஈடுபடவைக்கிறது. இந்த வகையில் தாய் நிலத்தைப் பிரிந்து அகதியாய் அந்நிய நிலங்களில் வேரின்றி அலையும் அவலத்தை தடுத்து நிறுத்தி, தாய் நிலத்தின் மீது ஒரு பற்றுணர்வை, தேடுதலை குழந்தைகள் மனதில் வண்ணப்படமாய் விழுத்தும் முயற்சியாக இதனைக் கருதலாம்.

இம்முயற்சியின் வெளிப்பாடு, குழந்தை வரைஞர்களிடம் இந்த ஓவிய நூல் வந்தடைவதிலும் தங்கி இருக்கிறது. உலகத் தமிழர் இயக்கம் (ஜெர்மனியின்) எதிர்கால சிற்பிகளின் உருவாக்கத்தில் தனக்குரிய ஒரு பக்கத்தை என்றும் தக்கவைத்துக்கொண்டே செல்லும் என்பதற்கும் இவ் ஓவிய முயற்சி ஒரு எடுத்துக்காட்டாகும். ஓவியர் கண்ணாவினால் வரையப்பட்ட இவ் ஓவியங்கள் – நாங்கள் சிறுவயதில் ஆடி ஓடி மகிழ்ந்த விளையாட்டுக்கள், எங்களது முற்றம், இயல்பானதொரு வாழ்க்கை, தோட்டம், துரவு என்று சுற்றிச் சுற்றி வருகிறது மனது. பிரிவின் துயர் எம்மை நெருடுகிறது. குழந்தைகளுக்கும் இது அம்மாவின் பூமி, இது அப்பாவின் பூமி, இதைப் பிரிந்துதான் நாங்கள் இங்கு அகதியாய் இருக்கிறோம் என்கிற சோகச் செய்தி எட்டுகிறது.

இன்று சீனா போன்ற நாடுகளில் கூட இதுபோன்றதான் முறைகளில் குழந்தைகளுக்கான பாடவிதானங்கள் தயாரிக்கப்படுவதாகக் கூறுகிறார் கள். சரித்திரம், வரலாறு போன்ற நிகழ்வுகளை ஓவியங்களுக்கூடாக கதைபோல நகர்த்திச் செல்வதன் மூலம் நிறையப் பலன்கள் இருக்கின்றதை பலர் ஒத்துக்கொள்கிறார்கள். ஓவியர் கண்ணா இதுபோன்ற பல முயற்சிகளில் ஈடுபடுவார் என்றும் போராட்ட சரித்திர வரலாறுகளைச் சொல்லும் பல வர்ணப் பயிற்சி நூல்களை இன்னும் அவர் திறம்பட மேற்கொள்ளுவார் என்று திடமாக நம்புகிறோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டிருக்கின்றன. ஆகாயத்தில் செத்துப் போன மனிதம், தரையில் உயிரோடிருக்கும் மனிதர்களை வெறும் சதைத் துண்டுகளாகப் பிய்த்து எறிந்துகொண்டிருக்கிறது.

அடக்கமுடியாத பதட்டம் அவரை ஆட்கொள்கின்றது. கண்ணாடியை துடைத்துவிட்டு மீண்டும் கண்களில் மாட்டிக்கொள்கிறார்.

தரையில் ரஷ்யத் தயாரிப்பான எம்.ஐ.24 சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தள்ளிக்கொண்டிருக்கின்றன.மேலே இஸ்ரேல் தயாரிப்பான 'கிபீர்' விமானம் றொக்கற்றுகளைச் செலுத்தி நிலத்தைப் பிளந்துகொண்டிருக்கிறது.

ரஷ்யாவும், இஸ்ரேலும் பகைநாடுகள். இராஜதந்திர உறவைக்கூட ஏற்படுத்த தயாரற்ற இருவேறு முனைகள்.

ஆனால், இரண்டும் மஞ்சள் அங்கி போர்த்திக்கொண்டு ஏழை மீனவர்கள் குருதியில் புண்ணிய ஸ்தானம் செய்கின்றன. குடிசைகளை ஓமகுண்டமாக்கி, பச்சை இரத்தத்தை அவியல் சொரிகின்றன.

இது எப்படிச் சாத்தியம்?

மீண்டும் மீண்டும் எழும் கேள்விகளுக்கு மேலும் கேள்விகளே பதிலாக நீண்டு செல்ல மூளை முடிவற்ற குழப்பத்தை நோக்கி இழுத்துச் செல்லப் படுகின்றது.

மரண ஓலம் கிராமத்தை நிறைக்கிறது. வானம் மூர்க்கத்தனமான இரைச்சலால் அதிர்கின்றது. எங்கும் கழுகுகள்... கழுகுகள்.... கழுகுகள்...

அவரது கண்கள் கரிக்குருவியைத் தேடி அலைகின்றன. நெஞ்சுக்குள் ஒரு பிரயளயம் எழுந்து குமுறுகிறது. அவரால் இருக்கையில் இருக்கமுடியவில்லை.

"சுகந்தன்!" அவரையறியாமல் அவர் கத்திவிடுகிறார்.

அவன் அவருடைய கத்தலுக்கு காரணம் புரியாதவனாக மிரள மிரள விழிக்கிறான்.

"எல்லாம் கழுகுகளடா!"

"இல்லையப்பா நீங்கள்தானே சைபீரிய நாரையள் எண்டு சொன்னனீங்கள்!"

"அது முந்தி.... இப்ப இதுகும் கழுகு தான்....!"

அவனுக்கு எதுவும் புரியவில்லை. "இல்லையப்பா" என்று தொடங்கியவன் எதையோ நினைத்தவனாக இடையில் நிறுத்திக்கொண்டு விடுகிறான்.



திடீரெனத் திரையின் ஒரு மூலையில் ஒரு சின்னஞ்சிறிய புள்ளி தோன்றிப் பெரிதாகி.... பெரிதாகி....

"அது... அது... கரிக்குருவி". மனதுக்குள் எல்லையற்ற உவகை பொங்க இதழ்களில் வெளிவராத ஒரு முணுப்பு தவழ்கிறது. கதிரையின் இரு கைப்பிடிச் சட்டங்களையும், அவரையறியாமலே அவரது கைகள் இறுக்கமாகப் பற்றுகின்றன.

மின்னல் வேகத்தில் வந்த கரிக்குருவி தன் கூரிய சொண்டினால் கழுகு ஒன்றின் தலையைக் குத்திக் கிழிக்கிறது. கழுகின் தலையிலிருந்து இரத்தம் கடலெனச் சொரிகின்றது. கழுகின் அலறல் ரீ.வியின் ஒலிபெருக்கியை அதிரவைக்க, அது சுழன்று மண்ணை நோக்கி விழுந்துகொண்டிருக்கிறது.

சில கணங்களுக்குள் கழுகுகளேயில்லாத நிர்மலமான வானம் தெரிகிறது. கரிக்குரிவிகள் மட்டும் திரையின் பரப்புகள் முழுக்க அமைதியுடன் உலாவருகின்றது.

கருக்குருவி மெல்ல கீழிறங்கி வர, கமராவும் அதனுடன் சேர்ந்து நிலப் பரப்பை நோக்கி நகர்கின்றது.

பரந்து விரிந்த பச்சை நிறம், அதில் தெட்டம் தெட்டமாக கத்தரிப்பூ வர்ணங்கள்.

திரையெங்கும் கினியா பற்றைகள். அவற்றை அலங்கரிக்கும் சிறுமலர்க் கொத்துக்கள்.

அவர் மூளையில் ஏதோ ஒன்று பொறி தட்டுகிறது. "கினியாப் பற்றைகளில் தான் கரிக்குருவி கூடுகட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து...."

நிம்மதி நெஞ்சை நிறைக்க மெல்லக் கண்களை மூடியவாறு பின்னால் சாய்கிறார்.

புலம்பெயரும் பறவைகள் மட்டும் வந்துபோன எமது மண்ணில் இனம் பெயர்ந்த பறவைகளும் வர ஆரம்பித்த பின்புதான் அவருக்குக் கரிக்குருவியின் அவசியம் பிடிபடுகின்றது.

இனி கினியாப் பற்றைகளை விறகுக்காகக் கூட யாரும் தறிப்பதற்கு இடமளிக்கக்கூடாது என தனக்குள் தானே முடிவெடுத்துக்கொள்கிறார்.

ஏனெனில் –

கினியா பற்றைகளிலும் கிரவல் புழுதிபடிகிறது. அதன் பசிய இலைகள் வரண்டு செம்மை படர்கின்றன. பச்சைக்குள்ளிருந்து கத்தரிப்பூ நிறத்தில் புன்னகை காட்டும் அதன் பூக்களும் வெம்மையால் வதங்குகின்றன.

ஆனால் –

கரிக்குருவிகளின் கூடுகளை அவை பாதுகாத்துக் கொண்டேயிருக்கின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெண்களின் உரிமைகளும் தமிழீழ ஒறுப்புச் சட்டமும்

இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் சிறிலங்காவின் ஆட்சி அலகுகளாக இல்லாமல், தமிழர் தாயகமாக, தமிழீழத் தனியரசாக மாறி வருவது உலகம் அறிந்த விடயம். ஒரு தனியரசுக்குரிய அம்சங்களில் ஒன்றாகத் தமிழீழத்திற்கு உரிய வகையில் சட்டங்களும் உருவாக்கப் பட்டுள்ளன. அந்த வகையில் "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" குறிப்பிட்டுக் கூறப் படக்கூடியது. சட்டக் கோவையில் பெண்களுக்கான உரிமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நடைமுறையில் உலகில் பெரும்பாலான ஆட்சி நிர்வாகத் துறைகளில் ஆண்களது செல்வாக்கும் மேலாதிக்கமுமே நிறைந்து காணப்படுவதை எவரும் அறிவர். சட்டம் இயற்றுதல், அதனைப் பிரயோகித்தல் என்பவற்றைக் கூட ஆண்களே மேற்கொள்கின்றனர். எனவே ஆண் நிலைப் பட்ட ஆணாதிக்க தீர்மானங்களும் முடிவுகளுமே பொதுவாக பெண்கள் மேல் திணிக்கப்படுகின்றன. எனவே பெண்கள் தொடர்பான மரபு ரீதியான கருத்தியல் சிந்தனையிலிருந்து வெளிவரும் சட்டங்களினால் பெண்கள் பல்வேறு முறைகளில் பாதிப்புக்குள்ளாகி வருவது சர்வசாதாரண நிகழ்வாகியுள்ளது. ஆனால் தமிழீழ ஒறுப்புச் சட்டத்தை உருவாக்கிய சட்டவாக்க குழுவில் பெண்கள் முக்கிய இடத்தைப் வகித்தனர். "பெண்கள் சமவுரிமை பெற்று, சகல அடக்கு முறைகளிலிருந்து விடுதலை பெற்று, ஆண்களுடன் கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகர சமுதாயமாக தமிழீழம் அமைய வேண்டும்" என்று தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களின் கொள்கைக்கு பலம் சேர்க்கக்கூடிய வகையில் இச்சட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

தமிழீழ ஒறுப்புச் சட்டமானது தமிழீழத்தில் அடையாளம் காணப் பட்ட குற்றச் செயல்களையும் (தண்டனை) அடக்கியதாக அமைந்துள்ளது.

இச்சட்டத்தில் ஒறுப்புகள் தொடர்பான வரையறுப்பின் போதே முதலிலேயே பெண்ணுரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். குற்றவாளியாகக் காணப் படும் பெண் கர்ப்பிணியாக இருந்தால், அவருக்கு சாவொறுப்பு வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக எளிய, கடும் சிறையொறுப்பு வழங்கப்படலாம் என்று சொல்லப்படுகின்றது (பிரிவு47). அதிலும்கூட கருவுற்ற காலத்தில் எளியதும், அதன் பின்னரான காலத்தில் கடுமையானதுமான சிறையொறுப்பையுமோ அல்லது முழுமையாக எளிய சிறையொறுப்பையுமோ வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (பிரிவு48). இதனால் கருவுற்ற பெண் ஒருவர் தனது கருவினை சுமக்கும் வேளையில் கடும் ஒறுப்புக்களால் துன்பமடையாமல் இருக்கமுடியும்.

இதன் பின்னர் வருகின்ற பொதுப் புறடைகள் எனப்படும் பாதுகாப்புகளுடன் தொடர்புடைய பகுதியில் பாலியல் வல்லுறவு கொள்ளும் நோக்குடன் ஒருவர் ஒரு பெண்ணைத் தாக்கினால் அவரை அப் பெண் கொல்வதற்குக்கூட சட்டம் ஒப்புதலை வழங்குகின்றது (பிரிவு 73–இ). கொலையைவிட வேறேதும் தீங்கைக்கூட அப் பெண் செய்யலாம் என்று அனுமதிக்கப்படுகின்றது. ஒரு பெண்ணுக்கு (மட்டுமே) பாதுகாப்பைத் தருவதற்காக உயிர் போக்கல் கூட சட்டப் படியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையே இதிலுள்ள சிறப்பான விடயமாகும்.

குழந்தைப் பேறுகளின் போது பெண்கள் உடல், உளரீதியாக பல துன்பங்களை அடைகின்றனர். கருவுற்றிருக்கும் காலத்தில் கணவர்களின் கொடுமையான செயல்கள், குழந்தைப் பேறினால் உண்டாகும் உடல் நோ என்பவற்றால் தாய்மார் சில சமயம் குழப்பமான மனநிலையைக் கொண்டிருக்கலாம். அதன் காரணமாக தன் குழந்தையை பன்னிரண்டு மாதங்களுக்கு உட்பட்ட காலத்தில் தாய் கொன்றால், அது கொலைக் குற்றமாகக் கருதப்படமாட்டாது. சாதாரண ஒரு மனித உயிர் போக்கலாகக் கொண்டு, ஒறுப்பின் அளவு குறைக்கப்பட்டு, பெண்ணின் உள, உடல் நிலைகள் கருத்தில் எடுக்கப் பட்டுள்ளது. (பிரிவு 206 புறநடை 04)

.அவ்வாறே பெண்களுக்கு கருக் கலைப்புச் செய்யும் உரிமையும் தன்மைக்கு ஏற்றவாறு வழங்கப்படுகின்றது. அதாவது ஒரு பெண்ணுக்கு பாலியல் வல்லுறவினால் உண்டான கருவையும் அன்றி குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண் தன் கணவரின் ஒப்புதலுடன் தொண்ணூறு நாட்களுக்கு மேற்படாத கருவையும் கலைப்பதற்கு தமிழீழ ஒறுப்புச் சட்டம் ஒப்புதலளிக்கின்றது (பிரிவு 215) புறனடை, புறனடை விலக்கு. எந்த ஒரு பெண்ணினதும் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கமில்லாமல், அப்பெண்ணின் விருப்பமின்றி கருக்கலைப்புச் செய்யப்பட்டால் அது குற்றமாகக் கருதப்படும் (பிரிவு 215, 216, 217). இதன் மூலம் ஒரு பெண் தனக்கு ஏற்படக்கூடிய பழிச் சொற்கள், துன்பச் சுமைகளிலிருந்து மீளவும், தன் தகுதிக்கு ஏற்ப குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பும், பெண் தனது கருவைப் பேண விரும்பினால் அதற்கான உரிமையும் அளிக்கப்பட்டுள்ளன.

ஒரு பெண்ணின் நன் மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர் மீது எவரேனும் வன்முறையைக் கையாண்டால் அதனை மேற்கொள்பவர் மீது நடவடிக்கை எடுத்து, பெண்னின் சிறப்பு மதிப்பை பேண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (பிரிவு 256) பெரும்பாலும் இத்தகைய குற்றச் செயல்களில் ஆண்களே ஈடுபடுவதால் இத்தவறு புரியும் ஆண்களைத் தண்டித்து பெண்களைக் காக்கும் நோக்குடன் இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

ஆட்கவருதல் தொடர்பாக உள்ள சட்ட ஏற்பாடுகளிலும் ஆண்களிலும் வயது பதினாறாக இருக்க, பெண்களின் வயது பதினெட்டாக உயர்த்தப் பட்டுள்ளது. இளம் பெண்ணின் பாது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காப்பை தீவிரமாக கருத்தில் எடுப்ப தாக இப்பிரிவு அமைகின்றது. (பிரிவு 262 இளம்பெண்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதையும் மோசமான முறையில் ஒடுக்கப்படுவதையும் சட்டம் தடைசெய்கின்றது.

ஆட்கடத்தலின்போது ஒரு பெண் அவரது விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்யக் கட்டாயப்படுத்தப் படுவார், அல்லது தவறான பாலுறவில் ஈடுபடுத்தப்படுவர் என்பதை அறிந்தும், ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றால், அவ்வாறு செய்பவர் பத்து ஆண்டுகள் வரையான சிறையினால் ஒறுக்கப்படவேண்டும் எனச்சட்டம் வரையறுக்கின்றது. (பிரிவு 267) இது பெண்களின் பாதுகாப்பில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

சட்டத்தில் மறுமணம் பற்றிக் கூறும் பகுதி பெண்களின் நலனைக் குறிப்பிடத்தக்க அளவு முன்னெடுக்கிறது. இப்பகுதியானது ஐந்து ஆண்டுகள் வரை ஒருவர் உயிருடன் உள்ளார் என்று அறியமுடியாத நிலையில் அவர் இருந்தால் மட்டுமே அவர் இறந்தவராகக் கொள்ளப்படுவர் என்கிறது. இதனால் திருமணமான ஆண்கள் தமது மனைவியர் பற்றிய பிரிவுச் செய்தியை தவறாகக் காட்டி விரைவான வேறுமணம் ஒன்றைச் செய்ய முன் வருவதை தடுக்கின்றது. மனைவியர் மட்டும் ஏன் இப்படிச் செய்யமாட்டார்கள் என்று கேள்வி சிலநேரம் சிலருள் எழக்கூடும். ஆனால், எமது சமூக அமைப்பிலுள்ள பெண்கள் இத்தகைய செயல்களில் ஆண்களைப் போல் தீவிரமானவர்கள் அல்ல. அதேவேளை, வெளியூர் செல்லும் வாய்ப்புகளாலும் தொழில் நோக்கினாலும் தொலைதூரம் பிரிந்து செல்லும் ஆண்களையே இப்பிரிவு இருதார மணத் தவறுகளை இழைத்து விடாமல் தடுக்கப் போதியளவில் வழிசெய்கின்றது. இதனால் திருமணத்தின் பின் மன உழைச்சலுடனான திருமண வாழ்வின் சுமையை பெண்கள் அடையாமல் அவர்களை பாதுகாப்பதாகவும் அமைந்துள்ளது.

பாலியல் வல்லுறவுத் தவறு என்பது 'RAPE' என்பதைக் குறிப்பதாக அமைந்துள்ள தமிழ் மொழிச் சொல்லாகும். பாலியல் வல்லுறவுத் தவறினைப் பற்றி பிரிவு *279* எடுத்துக் காட்டுகின்றது. சாதாரணமாக எல்லா நாடுகளிலும் பாலியல் வல்லுறவு ஒறுப்புக்குரிய செயலாக இனம்காணப் பட்டுள்ளது. ஆனால், தமிழீழ ஒறுப்புச் சட்டத்தில் வரையறுப்புச் செய்யப்பட்டுள்ள பாலியல் வல்லுறவு தொடர்பான ஒழுங்குகள் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பிரதானமான ஒரு இடத்தினை பிடித்துக்கொள்கின்றது. இதிலுள்ள சிறப்புகளில் *15* வயது வரையான சிறுமியர் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்படுவதும் இக்குற்றச்செயல் பாரதூரமானது என்பதனை தெளிவு படுத்தும் பொருட்டு இக்குற்றத்தை இழைத்தவருக்கு சாவொறுப்பை (மரணதண்டனை) வழங்குவதற்கான ஏற்பாடுகள் (பிரிவு *279*ல்) அமைக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடக்கூடியன வும் ஆகும். ஏனைய பெருவாரியான நாடுகளில் இப்பாலியல் வல்லுறவு தொடர்பான ஏற்பாடுகளுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

தொடர்ந்து *15* வயதுக்கும் *18* வயதுக்கும் இடைப்பட்ட இளம்பெண்களுடன் பாலுறவினை வைத்துக்கொள்வதோ அன்றி பாலுறவினை வைத்துக் கொள்ள முயலுவதோ தவறாகக் கொள்ளப்படும் என தமிழீழ ஒறுப்புச் சட்டம் (பிரிவு *283*) குறிப்பிடுகின்றது. இங்கே இத்தகைய வயதுடைய பெண்கள் ஏமாற்றப்பட்ட வழிகளினால் பாலுறவின்பால் ஈர்க்கப்பட்டு அதனால் பாதிப்படைந்தால் அத்தகைய பெண்கள் தமது நிலையை உணரும் வேளையில், தமக்கு இளைக்கப்பட்டதாகக் கருதும் குற்றச்செயலுக்கு நீதி கோர வசதி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், ஆதாரங்களைப் பெறுவதில் உள்ள சிக்கலினாலும் பெண்ணுடைய சம்மதமும் இங்கே காணப் படுவதாலும் இத்தகைய பிணக்குத் தொடர்பில் உரிமை கோர முன்வருபவர்தான் பாதிக்கப்பட்ட *3* மாத காலத்துக்குள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என சட்டம் கூறுகின்றது.

பாலியல் வன்முறை எனும் புதியதோர் குற்றச்செயல் பெண்களைப் பாதுகாக்கும் நோக்குடனும், பெண்களது உரிமைகளைப் பேணும் வகையிலும் (பிரிவு *284*) ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இத்தவறினை இழைப்பவர் நிச்சயமாக ஓர் ஆணாகவே இருப்பார். இங்கே பாலியல் வல்லுறவு கொள்ளும் நோக்கம் இன்றி ஒரு பெண்ணின் உறுப்புக்களில் அவரது விருப்பத்துக்கு மாறாக பாலியல் உணர்வுடன் அல்லது அவரை இழிவு படுத்தும் நோக்குடன் தீண்டுவது தவறாகும். இத்தகைய செயல்கள், அண்மைக்காலமாக மேற்கு நாடுகளிலேயே அதிகரித்து வருவதனையும் இத்தொல்லைக்கு எதிராக பெண்கள் அமைப்புக்கள் பலமான குரல் கொடுப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. ஆனாலும், எமது தமிழீழ ஒறுப்புச் சட்டத்திலேயே இத்தவறு தண்டனைக்குரியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காதலித்து ஏற்புடைய காரணமின்றி கைவிடல், காதலித்து உடலுறவு கொண்டுவிட்டுக் கைவிடல், காதலித்து தாய்மை அடையச் செய்தபின் கைவிடல் என்பவை குற்றச்செயலாக சட்டத்தால் வரையறை செய்யப்பட்டுள்ளன. எமது சமூக அமைப்பினை அடிப்படையாகக் கொண்டதும், பெண்கள் கவலைப்படக்கூடிய வகையில் ஏமாற்றப்படக்கூடாது என்பதற்காகவும் மோசமாக முறைதவறி நடந்த ஆண்களால் உருவான குழந்தைகள் கைவிடப்படக்கூடாது என்பதற்காகவுமே இவ்வாறு வரையறை செய்யப்பட்டுள்ளது. (பிரிவுகள் *414, 415, 416*). இவை ஏனைய நாடுகளில்

**உ**லகில், 5 பேர்களுக்கு ஒருவர் கொடிய வறுமையின் மத்தியில் வாழ்கிறார்கள். அவர்களில் எழுபது சதவீதமானவர்கள் பெண்கள் என்று 1993ம் ஆண்டின் மனித அபிவிருத்தி அறிக்கை தெரிவிக்கின்றது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆய்வொன்றின் படி, 'உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நிமிடமும் 74 ஏழைக் குழந்தைகள் பிறக்கின்றனர். வருடாந்தம், இரண்டு கோடி ஐம்பது லட்சம் பேர் என்ற விகிதத்தில் வறுமையில் உழல்வோர் அதிகரிக்கிறார்கள். இவர்களில் அரைவாசிப் பேர் பெண்கள். உலக உணவு, விவசாய ஸ்தாபனத்தின் மதிப்பின்படி வறுமையால் பீடிக்கப்பட்ட மக்களில் 70 சதவீதமானவர்களே பெண்களாக இருக்கின்றனர். இது உலக சனத்தொகையில் 20 சதவீதமாகும். உலகிலுள்ள இரண்டு கோடியே இருபது இலட்சம் அகதிகளில் பெரும்பான்மையோர் பெண்களும் பிள்ளைகளுமாவார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குடியியல்சார் சிக்கல்களாக அணுகப்படுகின்ற போதிலும், எமது நாட்டில் இத்தகைய மோசமான பாதிப்புக்குள் உட்பட்டு அல்லல்படுவதை இச்சட்ட வரைபுகள் தடுக்கின்றன. இவை தமிழீழத்தில் பெண்களின் உரிமைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தையே வெளிப்படுத்துகின்றன.

இறுதியாக, தமிழீழ ஒறுப்புச் சட்டத்தில் பெண்கள் தொடர்பில் காணப்படும் குற்றச்செயலாக பரத்தமை (விபச்சாரம்) காணப்படுகின்றது. இங்கே பரத்தமைத் தவறினை ஒருவர் விரும்பி மேற்கொண்டாலோ அத்தகைய பரத்தமை தொழில் புரிபவரிடம் ஒருவர் உறவுக்காகச் சென்றாலோ அவை தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாக அறிவிக்கப்படுகின்றன. ஆனாலும் பரத்தமையில் பெண்கள் பலவந்தமாக, அவர்களின் விருப்புக்குமாறாக ஈடுபடுத்தப்பட்டால், அத்தகையோர் கருணையுடன் நோக்கப்பட்டு, அவர்களுக்கு நன்னடத்தைப் பயிற்சி வழங்கி, அவர்களை நல்வழிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கே பரத்தமையில் தொடர்புறும் ஆண்களும், பெண்களும் சமமான ஒறுப்புக்குள்ளாக்கப்படுவர். (பிரிவுகள் 420– அ,421 ) இவ்வாறு பலவகையிலும் பெண்கள் எதிர் கொள்ளும் இன்னல்களை நீக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளும் தவறிழைத்த பெண்களின் உரிமைகளைப் பேணும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் மேலும் ஆரோக்கியமான ஆலோசனைகள் எம்மை வந்தடையும் சமயத்தில் அவை தொடர்பிலும் போதிய கவனம் எடுக்கப்பட்டு, உரிய திருத்தங்கள், மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

நன்றி:
'சுதந்திரப் பறவைகள்'



நிலவு நேராகத் தலைக்கு மேல் நிற்க
ஓவென்று இரைகிறது காற்று.
தூரத்தே
இரணமடுக்காடு பனியில் நனைகிறது.
பழைய முருகண்டித் தனியன் யானையாய்
அருகில் ஒருவரின்றி நான்.
சுற்றமிழந்து எத்தனை நாளாச்சு?
அயல் வீட்டில் குடியிருந்த அவர்களை
எங்கு தேடுவேன்?
சிதறி ஓடியது தெரியும்
பிறகு என்ன ஆனார்கள் அவர்கள்?
வாய்க்கால் நீராய் பெருகி வழிந்து
வந்தடைந்தது ஓரிடமல்லவே.
திக்கொன்றாய் சிலும்பிப் போனோம்.
மீண்டும் ஊர்புகும் நாளில்
எவரெவர் கூடி உள்நுழைவோமா?
உயிரோடிணைந்த உறவுகளே!
என் அயலிருந்தோரே!
எங்கே போய்விட்டீர்?
காண ஆசைமிகுதி. ஓடிவருக.
இரணமடுக்காடு அதிரக் கத்தவேண்டும் போல
உள்ளே ஒரு வேட்கை.
இன்று பங்குனித் திங்கள்
பொங்கலுக்கென்றே பிறக்கும் நாள்.
உச்சி வெய்யில் உருக்கினும்
தாருருகும் தெருவில் நடப்போம்.
காலிற் செருப்பும் இருக்காது.
காவடியும், பாற்செம்பும் சுமந்து
ஊரின் ஓரிருவர் நடப்பார்.
உறவெல்லாம் முன்னும், பின்னும் அணிவகுத்து
கோயில்புக மணிச்சத்தம் வரவேற்கும்.
இன்றெங்கே அந்த ரத்தங்கள்?
ஒரு முகத்தையாவது காணும்வரை
இந்தக் குளக்கரையில் குந்தியிருப்பேன்.

— மாலிகா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நாடகம்

எல்லாப் பாதைகளும் வந்து ஒன்றுகூடி, ஒற்றையாகி அந்த மண்டபத்துக்குப் போயின. சந்திப்பில்; மண்டபத்தின் முன்புறமே பொன் முடி தரித்த நாயகியின் பிரமாண்ட தோற்றம். வசீகரிக்கும் பார்வை. கபடமா, வஞ்சையா என்றறியாது தடுமாறவைக்கும் புன்னகை. கையிலே வெண்புறா வர்ணங்களின் பளபளப்பில் அவள் ஆடை, அணிகளும் கன்னத் தசைகளும் மினுமினுக்கின்றன. யாரோ ஒரு ஓவியன் – கனலுமிழும் நெஞ்சுடனோ என்னவோ – அந்த ஓவியத்தை – அவளைப் பிரம்மாண்டப்படுத்தியிருந்தான்.

அவளை மேலும் அழகூட்ட வண்ணத்துப் பூச்சிகளின் சிறகடிப்பாய் நிற விளக்குகளின் மினுமினுத்த ஒளிர்வு.

எல்லாப் பாதைவழியும் வந்து ஒன்றாகி நிரம்பிவழியும் மனிதத் தலைகள். மண்டபம் இவ்வளவையும் உள்வாங்குமா? அதன் கொள்ளிடம் போதுமா?

பிரமாண்டமான நாயகியைச் சூழவும் கீழே அழகு தேவதைகள் வெண் தாமரையை / வெண்முகிலை ஞாபகமூட்டும் ஆடைகளுடன் அவற்றின் சாதுவான அசைவு. சாமரையின் வீசலில் நாயகியின் வசீகரம் மேலும் ஏறுகிறது.

அதோ, மண்டபத்தின் முன்னால், அதன் நுழைவாயிலோரம்; தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில்; தலை மழிந்த காவியுடை மனிதர்கள். அவர்களின் விசிறல்காற்றின் இதத்தில் மெய்மறந்தபடி வேறும் சிலர். வீரத்தின் அடையாளமாகவோ அல்லது மகிமையென்றோ இரத்தம் வழியும் கருவிகளைச் சுமந்தபடி ஒரு சேனாபடை; கண்களில் பீதியா, விஷமா, கிறக்கமா, வெறியா என்றுணர முடியாதபடிக்கு நிற்கிறது படை.

முகப்பைப் பார்த்தவுடனேயே அதன் வஸீகரம் உள்ளிழுக்க முனைகிறது. மண்டபம் ஜோடனைகளில் அழகேந்தியிருக்கிறது. நூலில் பிணைத்து வண்ணத்துப் பூச்சிகளைப் பறக்க விட்டுள்ளார்கள் – எல்லாம் நீல நிற வண்ணத்துப் பூச்சிகள்.

வீதிகளெங்கும் நிறங்களைப் பிரவாகிக்கும் மின்குமிழிகள். ஒரு நர்த்தனம் மாதிரி அவற்றின் ஒளிக்கவர்ச்சி.

வெளிமுற்றத்தின் ஒளிப்பிரவாகத்தில் மண்டபம் மூழ்கித் திளைத்திருந்தது. மண்டப வாயிலிலும் வெளி வாயிலிலுமாக காற்றில் ஆடிச் சிலிர்க்கின்றன, போதனையின் வாசகங்கள்; பதாகைகளில். சமாதானத்தின் பாடல்களும் புறாக்களின் ஒலியலைகளுமாக மண்டபம் இசையில் நிரம்புகிறது.

அது அழகின் பிரதிபிம்பமாக ஜொலித்தது. காற்றுப் புகாத அந்த மண்டபத்தில் சுழல் விசிறிகளில் காற்று ஊற்றெடுக்க விடப்பட்டிருந்தது. எத்திசையிலும் ஒளிவாழ்ந்தது. சனங்கள் முண்டியடித்தார்கள். புலனாக வார்த்தைகள் கூச்சலாகவும் இரைச்சலாகவும் மண்டபத்தை நிரப்பியது. வெக்கை, சனங்களின் மூச்சில் சனங்களே அவியும் புழுக்கம். சுழல் விசிறிகள் மிகப் பிரயத்தனப்பட்டும் தோற்றுக்கொண்டிருந்தன. மண்டபத்தின் ஆசனங்கள் நிரம்பிவிட்டன. பேரிரைச்சலில் மனிதர்களின் கூச்சலும் ஆரவாரமும் மண்டபச் சுவர்களை மோதிக் கொண்டிருந்தனன.

"அமைதி! அமைதி!! அமைதிக்காகக் கூடியிருக்கும் அன்புடை மனிதர் களே! அமைதியாயிருங்கள். இன்னும் சில கணங்களில்; அடுத்த சிற்சில விநாடிகளில் உங்களின் ஆவலை நீங்களே பூர்த்தி செய்யும்படியான நிகழ்ச்சிகள் காலத்தின் பதிவாக இங்கே நிகழப் போகின்றன. பேரமைதியை வேண்டும் வரலாற்றின் நிகழ்ச்சிக்கு நீங்கள் ஒத்துழையுங்கள்: அன்பானவர்களே ஒத்துழையுங்கள்...."

ஒரு ஒலிக்குறிப்பு பேரிரைச்சலை விழுங்கிப் பேரமைதியை மண்டபத்துள் கொணர்ந்தது. சுழல் விசிறிகளும் ஒளிக்குமிழ்களும் இயக்கமுற பேரமைதி எங்கும் சூழ்ந்தது.

சட்டென அமைதியைக் குலைத்தன. கூக்குரல்கள்; கையொலிகள், விசிலடிகள்.....

## காட்சி – 1

அரங்கின் திரை விலகுகிறது. மண்டப மனிதர்கள் மௌனத்துள் ஆழ்ந்தார்கள். மெல்லிய இசை பரவுகிறது. வர்ணக்கலவையாய் ஒளி திரை விலகிய அரங்கில் நிரவுகின்றது. மேடையில் மலர்களின் பரவல். மலர்களின் நடுவே, அழகிய வேலைப்பாடுகளின் பின்னணியில் சிம்மாசனம். சிங்க முகங்கள் பக்கத்திருக்க சிறகிரண்டும் வெண்புறா இறக்கைகளாய்..... போதியின் பின்னணியில் வெண்தாமரைப் பீடத்தின் மேல் அது காலியாய் இருந்தது. அதில் யார் யாரோவெல்லாம் முன்பு கொலுவிருந்திருக்க வேண்டும். சிம்மாசனத்தின் பக்கமிருந்து புதிய வாசனை பரவியது. மலர்களின் வாசனையுடன் கலந்து இன்னும் ஏதோ...

"எங்கள் நாயகிக்கு முடிசூட்டு விழா.... எங்கள் தேவதைக்கு முடி சூட்டு விழா..."

முரசம் அதிர தாளகதியொன்றின் துள்ளல் நடையுடன் அரங்கின் குறுக்காகக் கூவியபடி ஒருவன் சென்றான்.

பிறகு, அரங்கிலிருந்து பாடலொன்று, அதுவும் "சமாதானம்" என்ற வார்த்தைகளை உச்சரித்தபடியே. நாயகியின் வருகையைக் கட்டியங்கூறியபடி பாடல் ஒலித்தது. மண்டப மனிதர்கள் ஆவலில் துடித்தார்கள். காலம், அசைய மறுத்த சுமையாக தங்களில் அழுத்துவதாக அவர்கள் உணர்ந்தார்கள். நாயகியின் உருவம் அவர்களது மனதில் விரிந்தது. எல்லோரும் ஒரு கணத்தில் எப்படி ஒரே மையத்தை நோக்குகிறார்கள்? நாயகியின் மையம். இது நாயகியின் பெருமையா... மாய வசீகரமா...?

ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. நாயகி பற்றிய பிரமையில் புதையுண்டு திணறினார்கள்.

பாடல் ஒலி மெல்லத் தேய்ந்து போகிறது. அமைதி மூடி வியாபிக்கையில் காற்றலை அதிர பேரிகை இசையின் முழக்கம். நெஞ்சை நிமிர்த்தியபடி புயங்களிலும் முகத்திலும் வீரத்தை திரட்டியபடி வரும் ஒரு குழுவின் அணிவகுப்பு. அவர்கள் ஏற்படுத்திய கம்பீரத்தில் மெய்தவறிப் போகிறது மண்டபக் கூட்டம். காவி மனிதர்களின் விசிறிகள் அசைகின்

**சத்துருக்கன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


றன. வெக்கை குறையவில்லை.

விசிறியை அசைத்தவாறே காவி மனிதர்கள் உச்சாடனம் பண்ணுகிறார்கள். அது வாழ்த்தொலி. பேரிகை முழங்க வாழ்த்தொலியின் பின்னணியில் மெல்லிய இசை அரும்புகிறது. அரங்கின் இரு மருங்கிலும் வெண் தேவதைகள் மலர்ச்சரங்களுடன்... சாமரை வீசல் முன்னும் பின்னும் பக்கங்களிலும் வர்ண மனிதர்கள் புடைசூழ நாயகி வருகின்றாள்.

அவளது நகங்களில் செந்நிறம் மின்னியது. மண்டப மனிதர்கள் ஒருகணம் திடுக்கிட்டார்கள். பின் அதுவும் மகிமை பொருந்திய அழகே எனத் தம்முள் சுதாகரித்துக்கொண்டு மகிழ்ந்தார்கள். அவளது கையசைத்தலில் புதுவித அழகு ஜொலிப்பதாகவும் புலம்பினார்கள்.

அரங்கு சாமரைகளாலும், விசிறிகளாலும் மலர்களாலும் நிரம்பியிருக்கிறது.



மெல்ல அடியெடுத்து, நிலம் சில் விட்டுப் போகும் வண்ணம் அழகு நடை நடந்து அரங்கின் மத்திக்கு வருகிறாள்.

மலர்த்தூவல்... சாமரை வீச்சு.... நிற ஒளிகளின் மின்னல்...

மண்டபம் கரகோசத்தால் திளைக்கிறது.

மலர்களின் நடுவே அசைந்து வந்தாள் அவள். வலக்கரத்தை உயர்த்தி அசைத்தாள். மகிழ்ச்சியும் பெருமிதமும் அந்தக் கரங்களில் தெரிவதாக மண்டப மனிதர்கள் புழுகினார்கள்.

‘எவரும் கலங்காதீர்கள்; இனி அச்சமில்லை; நானே உங்களின் நாயகி; இனித்துன்பமில்லை’ என்பதாய் அவளது கையசைப்பு எண்ண வைத்தது.

கரகோசம்... விசிலடித்தல்.... வெறிகொண்ட வாழ்த்தொலிகள்.... மண்டபம் குலுங்கி அதிர்ந்தது. அதன் சுவர்கள் சத்தத்தை மிகுந்த பிரயத்தனப்பட்டு தாங்கிக்கொண்டன.

நாயகி புன்னகை மலர்களின் தூவலுடன் தானும் ஒரு மலர்ச்செண்டென ஆசனத்தில் அமர்ந்தாள். எல்லோரையும் தனக்குள் வசீகரித்தாள். எல்லோர் பார்வையும் அவளில். அவள் கண்களாலும் புன்னகையாலும் மௌனத்தைப் பரப்ப முயன்றாள். சுற்றிநின்ற கண்களில் சுருக்கம் விழுந்த மனிதர்களும், அவ்வாறான ஒரு கிழவியும் அமர்ந்துகொண்டார்கள், சூழவும் வெகு பவ்வியமாக சாமரை அழகிகளும், படை வீரர்களும், காவியுடை மனிதர்களும்....

தலையை மெதுவாகத் திருப்பி கடைக்கண்ணால் பார்த்தவாறு ஒரு மெல்லிய நகை சிந்தினாள் நாயகி.

சாமரைத் தேவதைகள் நாணிக் கோணிச் சிலிர்த்து முறுவலித்தவாறே இயங்கினர். வீரர்கள் புஜங்களைச் சிலிர்த்தனர். காவியுடைச் சாமிகள் நாயகியின் புன்னகையை ஆமோதித்தனர். ஒருவன் தங்கத் தாம்பாளத்தை ஏந்திவருகிறான். அது ராஜமுடி என்று மண்டப மனிதர்கள் பெருமையுடன் உரத்துப் பேசிக்கொள்கிறார்கள்.

தங்கத்தட்டை ஏந்தி வந்தவனைக் கண்டதும் அரங்கிலிருந்த, கண்களில் சுருக்கம் விழுந்த நெடுத்த மனிதரொருவர் உசார்ப்பட்டார். ஏதோ உவகை அவரில். பளபளக்கும் ஆடைகளின் சரசரப்பொலியோடு நடந்து தங்கத் தட்டிலிருந்து அதனை எடுத்தார்.

கிரீடம் –

சிங்கமுகக் கிரீடம், தர்மச்சக்கரப் பின்னணியில் சிங்கம் கர்ஜனை செய்தது. எத்தனை அலங்காரங்கள்....? வர்ணங்களும் ஒளிர்வும் கண்ணைப் பறித்து மனதைக் கொள்ளையடித்தன. சிங்கத்தின் பற்கள் கூட கூர்மையாய் .... செந்நிறப் பளபளப்பாய்....

பொன்முடியை இரு கைகளாலும் ஏந்தி சபையைப் பார்த்தார்.

கிறக்கம்.

மயிர்க்கால்கள் சிலிர்த்தன. நாயகி கண்கள் செருகப் போதை மிகக் கொண்டவளாய் பேச்சற்றுக் கிடந்தாள். சபை கரகோசத்திலும் ஆவலிலும் துடித்தது. தலைகள் அங்கும் இங்கும் அசைந்தன. பேரிகையின் முழக்கம்; வாழ்த்தொலிகள்; ஆசிர்வதிப்புக்கள்; மலர்த்தூவல்கள்.

நாயகியின் தலையில் கிரீடம் சூட்டப்பட்டது. வாழ்த்தொலிகளின் வசியத்திலும் புகழிசையின் கிறக்கத்திலும் ஒருகணம் புதையுண்டாள் நாயகி. தன் லட்சியம் நிறைவேறியதான பேருவகை அவளில். சரித்திரத்தின் பிடி தன்னுள் என்ற இறுமாப்புப் பார்வை.

இந்தக் கிரீடம் புதியதா? அப்படி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருக்க முடியாது. இதை முன்னரும் பார்த்த ஞாபகம். இந்தச் சிம்மாசனமும் கூட. இப்போது இந்தப் புன்னகை, கையசைத்தல் எல்லாமும் எப்போதோ பார்த்தவை. அதே சாயல்கள்.

ஒருவன் எழுந்து நாயகியை நெருங்கினான். அவனது நடை தளர்ந்தது. அதை அவன் ஈடுசெய்ய முயல்வது தெரிந்தது. தன் கைத்தடியை இருக்கையில் சாய்த்துவிட்டு வந்தவன் மண்டபத்தை நோக்கிக் கையசைத்து ஆரவாரித்தான். அவருடைய சீருடை பளபளத்தது. அவன் அமைச்சனென்றும் தளபதியென்றும் பறைந்தார்கள். சீருடையில் பட்டிகள், பதக்கங்கள் என்று வெற்றியின் சின்னஙகள் மின்னின. ஒவ்வொரு வெற்றி என்பதன் பின்னும் எவ்வளவு உண்மையும், எவ்வளவு மனிதத் தலைகளும் சரிக்கப்பட்டனவோ?

அவர் குரலைச் செருமியபடி உற்சாகமாகப் பேசத்தொடங்கினார்:

'எங்களின் மகிமை பொருந்திய நாயகிக்கு இன்று முடிசூட்டு விழா, இந்த விழா நம் ஒவ்வொருவருக்குமான விழா. நாமெல்லோரும் இந்நாட்டின் முடிக்குரியவர்களே! இது ஒரு சரித்திரத்தின் தொடக்கம். மகிழ்ச்சியின் இளவரசியாகிய, சுபீட்சத்தின் மேதகு பெண்ணாக, காலத்தின் முன் மாதிரியாக எங்கள் நாயகி நமக்கு வாய்த்திருக்கிறாள். நாமெல்லோரும் பாக்கியம் பெற்றவர்கள். நாம் அகிம்சையின் வழியானவர்கள். ஞானத்தின் சொரூபமானவர்கள். நாமெல்லோரும் சமாதானத்தை நேசிக்கும் எம் தேசத்தின் புறாக்கள். இந்தச் சமாதானத்திற்காக எதையும் நாம் செய்யத் துணியவேண்டும். சமாதானம், அதுவே நம் தாரக மொழி. சமாதானத்துக்காக போர் புரியக்கூட நாம் தயார். இது சமாதானப் போர்....

போரை உத்வேகப்படுத்தி விடைபெற்றார்.

மண்டபம் பேரமைதியில் அமிழ்ந்தது.

"சாந்த சொரூபி, அமைதி தேவதை, எங்கள் இளவரசி, உங்களின் உத்தமி, உள்ளன்போடு இதோ உங்கள் முன்..." என்ற அறிவிப்பு.

நாயகி எழுந்தாள். கிரீடத்தின் மணிகள் அதிர்ந்து ஒலித்தன. பட்டாடைகள் சரசரத்தன.

மண்டப மனிதர்களின் கண்கள் ஒளிர்விலும் ஒலியிலும் கவனம் கொண்டன.

நாயகி கரங்கூப்பினாள். புன்னகை இளைந்தது. என்ன ஆச்சரியம்? சிவந்த பற்கள்; செக்கச் சிவந்த கூரிய பற்கள்.

"என் பிரியத்துக்குரியவர்களே! இந்த மகிமை பொருந்திய காலத்தின் பிதாக்களே! நானும் கண்ணீரின் புதல்வியாகவே உங்கள் முன் நிற்கிறேன். கடந்த காலத்தின் துயரம் என்மீதும் படிந்துள்ளது. நிகழ்காலத்தின் தீச்சுவாலைகளினூடே நாம் நிற்கின்றோம். இங்கே வெண்புறாக்கள் பறக்க வேண்டும். தீச்சுவாலைகளின் மேலும் புகைமூட்டங்களினூடும் எவ்வாறு புறாக்கள் வரக்கூடும்? என் இதயங்களே! என் உதிரமாக நீங்களும், உங்கள் உதிரத் துளியில் விளைந்தவளாக நானும் இன்று இருக்கின்றோம். இங்கேதான் ஒரு புள்ளியை நாம் குறிப்போம். எதிர்காலம் என்ற புதிய புள்ளியின் தொடக்கத்துக்கு நீங்கள் தயாராகிவிட்டீர்கள். கறைபடிந்த என்னுடைய சரித்திரத்தின் மீதும் காறியுமிழ்கின்றேன். திசைகளெங்கும் கவிழ்ந்த நம் தலைகளை நிமிர்த்தி நேர்நடப்போம். கபடமும் சூதும் நம்மைச் சூழ்ந்திருந்தன. இனிக் கீர்த்தி பெற்றவராக உயர்வோம். இருளை விலக்கி ஒளியைக் கொணரவேண்டும். ஒளி வெண்மையின் குறி. இந்தக் கிரீடமும் அந்த ஒளியைத் தரும். எங்கள் சரித்திரத்திற்கு பங்கமுறாவண்ணம் ஒளி தர முயல்வேன். நாம் சரித்திரத்தின் மனிதர்களே. சரித்திரத்தில் நமக்குப் பெரும் பங்குண்டு. இன்றைய சரித்திரத்தை நாமே ஆக்குவோம். அமைதியின் சரித்திரம்! சாந்தியின் சரித்திரம்!! அகிம்சையின் சரித்திரம்!!! சமாதானத்தின் சரித்திரம்!!!!"

நாயகியின் கரங்களிலிருந்து புறாக்கள் சிறகடித்துப் பறந்தன. மண்டப மனிதர்கள் திடுக்கிட்டார்கள். புறா எங்கிருந்து வந்தது என்று யாருக்குமே தெரியவில்லை. அவர்கள் நாயகியின் சரித்திரத்திலும், அவள் அழகின் பிம்பங்களிலும் புதையுண்டு கிடந்தார்களே!

புறாக்கள் பறந்துவிட்டன. நாயகியைச் சூழவும் ஆயுத மனிதர்கள். அவர்களின் விழிகள் சிவந்து பளபளத்தன.

"இரத்தம் பாய்ந்தோடிய மண்ணை அள்ளி அப்புறப்படுத்துவோம். புகையால் கறுத்த வானத்தை வெட்டி எறிவோம். கண்ணீராலும் இரத்தத்தாலும் நிரம்பிய கடலை இறைத்து முடித்து விடுவோம். துயரத்தாலும் வேதனையாலும் வெதும்பிய காலத்தை எரித்து விடுவோம்..." நாயகி பேசி முடித்தாள்.

மண்டபம் பேரமைதியில் திளைத்தது. பிறகு மெல்ல மெல்ல மனித இரைச்சலின் அலை பெருகிப் பெருகி...

இரைச்சலை மீறி பாடலொன்று. அது சமாதானத்தின் வாசனையைத் தூவ முயன்றுகொண்டிருந்தது. அரங்கில் காவியுடைப் பெரியோரின் ஆசீர்வதிப்புக்கள். ஒரு காவியுடை மழித்த தலையில் சொறிந்தது. பிறகு ஒவ்வொன்றும் பிடரியில் சொறிந்தன....

பாடல் ஒலியோடு நாயகிக்கு வாழ்த்தொலிகள்..... இன்னும் மலர்கள் தூவப்பட்டுக்கொண்டேயிருந்தன; சாமரை விசிறின.

நாயகியின் முகத்தில் நீர்த் துளிகள். கிரீடம் அவளை அழுத்துவதாக யாரோ பேசினார்கள்.

நாயகி கரங்களை மீண்டும் அசைத்தவாறு விடைபெற்றாள். அவளது

---

சிங்கள மக்கள் கொடுப்பதை தமிழ் மக்கள் எடுக்க வேண்டும். எடுக்காவிட்டால் மோசமான சூழ்நிலை வரும் என்ற தொனியும் இன்று உருவாகி வருகின்றது. இது தவறானதும் பயங்கரமானதுமாகும். தமிழ் மக்களுக்கு ஆகக்கூடியது வழங்கப்பட்டுவிட்டது என சிங்கள மக்கள் கருதுகிறார்கள். தமிழ் மக்கள் தமிழ் இதனையும் ஏற்காவிட்டால்.... என்ற நிலைப்பாடும் கூட ஒரு பேரினவாத குரலாகவே வருகின்றது. தமிழ் மக்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுடன் இணைந்து சிங்கள மக்களை சிறுபான்மையினர் ஆக்கிவிடுவர் என்ற மாயையும் கூட தட்டிவிடப்பட்டுள்ளது. இந்தவிதமான கற்பனைவாத உணர்வுகளால் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை உருவாக்கும் போலித்தனங்களால்தான் இந்தநாடு இந்த நிலைக்கு வந்துள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் வேறு வழியில்லை, பிரிவே வழி என்ற உணர்வைக் கிளர்ந்தெழச் செய்ததும் சிங்களப் பேரினவாதமே!

- கொழும்புத் தினசரியொன்றிலிருந்து....

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விரல் நகங்கள் பளீரெனச் சிவப்பில் மிளிர்ந்தன.

## காட்சி – 2

"இன்று.... சமாதானத்திற்கான மூடுவிழா.... சமாதானத்திற்கான மூடு விழா..." அரங்கின் திரை விலகியதும் ஒருவன் அதன் குறுக்காக உரத்துக் கூவிச்சென்றான்.

பாடலொன்று உரத்த ஓசையுடன் கதறியது. சந்நதமாடும் தாளகதியில் அதன் ஒலியலைகள்.....

நாயகி தன் கைகளை எறிந்து வீசிய படி மலர்கள் புடைசூழ வந்தாள். இருளின் பின்னணியில் வௌவால்கள் பறந்தன. காவியுடைகளின் மழித்த தலைகள் சந்நதமாடின. சீருடைகள், பட்டிகள் பதக்கங்கள் மின்னின. ஒழுங்கற்ற இசை. அச்சமூட்டும் இருள்.

பிறகு, மெல்ல சிம்மாசனம் மட்டும் தெரியும் மெல்லிய ஒளி. நாயகி சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தாள். அவளது பற்களும், விழிகளும் நகங்களும் பளபளத்தன. சிரிப்பொலி மண்டபத்துச் சுவர்களில் மோதித்தெறித்து மண்டப மனிதர்களின் செவிகளில் அறைந்தது.

ஒருவன் வெண்புறாவை கையிலே ஏந்தி வந்தான். நாயகி புறாவைப் பறித்துக்கொண்டாள். அவளது கரங்களில் அது ஒடுங்கிப் போய் மீண்டும் தன் விடுக்கைக்காய் துடித்தது.

முகப்பிலிருந்த பிரமாண்டமான நாயகியின் தோற்றத்தை இந்தக் காட்சி ஞாபகமூட்டியது. புறாவைத் தன் தலைக்கு மேலே உயர்த்தினாள். அது சிறகடிக்க முயன்றது. அவளின் கைப்பிடி தளரவில்லை. அண்ணார்ந்த பார்வையில் சூழநின்ற துப்பாக்கிக்காரரை கடைக்கண்ணால் பார்த்தாள். அவளது முகம் வியர்த்தது. உடல் நடுங்கியது. புறாவை அவள் பறக்க விட்டாள். அக்கணம் மண்டபம் அதிரச் சரமாரியான சப்தம். பொறியாக நெருப்புச் சிதறிக் கனன்றது.

தலைக்கெழியத் தூளாகிச் சிதறிற்றுப் புறா. அதன் இறகுகள் காற்றில் அலைந்தன. இரத்தச் சிதறல் எங்கும் படிந்தது. காற்றில் அலைந்த சிறகுகள் மண்டப மனிதர்களின் தலைகளில் விழுவதற்காகச் சுழன்றாடின.

நாயகியின் சிரிப்பு மண்டபத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மண்டப மனிதர்கள் வியர்வையில் திணறினர்.

சற்றுநேர அமைதி.

நாயகி எழுந்தாள். மார்பினை மாலைகள் நிறைத்திருந்தன. செந்நிற மலர்களாலும், சிவந்த குருத்திலைகளிலும் பறவைகளின் இறகுகளாலுமான மாலைகள் அவை. அது வாடிப் போகாமல் கண்ணீர்த்துளிகள் தெளிக்கப்பட்டிருந்தது. பிரமாண்டமான தோற்றத்துக்கு விஸ்வரூபமெடுத்தாள்.

அவள் பேசத்தொடங்கினாள். ஒவ்வொரு சொற்களும் இடிமுழக்கமாக ஒலித்தன. அவை ஒவ்வொன்றும் சுடுசரமாகத் தெறித்தன.



"இது எங்களின் நாடு. இந்த ராஜ்ஜியத்தை நாமே ஆழவேண்டும். இது ஒரே சாம்ராஜ்ஜயம். ஒரே கொடி, ஒரே சிம்மாசனம், ஒரே படை, ஒரே நிறம், ஒரே மணம், ஒரே இசை, ஒரே பாடல், ஒரே குரல்.... எல்லாம் ஒன்றே. ஒன்றைத் தவிர வேறொன்றுமில்லை. ஒன்றே நிரந்தரம்.... புறாவும் கழுகும் ஒன்றே. அவை பறப்பதில் ஒன்றல்லவா? யானையும் பூனையும் ஒன்றே... அவை விலங்குகளல்லவா..."

நாயகி மூர்ச்சையடைவதாகத் தெரிந்தது. குரல் இறுகித் தடித்தது. அவளது மூச்சில் மாலைகள் எரிந்தன. அரங்கின் திரை பொசுங்கியது. எங்கும் வெம்மை....

பாடல் ஒலிக்க கையசைத்துவிட்டு சடுதியாக பின்சென்று மறைந்தாள் நாயகி. பரிவாரம் புடைசூழ்ந்து மறையப் பேரிரைச்சல் மண்டபத்துள் எழுந்தது புலம்பலாக. இரத்த வாடை திணறச் செய்தது.

## காட்சி – 3

"... ததீம் திமிதகிட, தினு
திமி தகிட
தித் கிடதக திதிதா கிடதக
திரி கிட தகதாம்...."

நாயகி ஆடிவந்தாள். அவள் முகத்தின் நரம்புகள் வெளித்தெரிந்தன. கண்கள் செருகித் தடம்புரள்கின்றன. கன்னத்தில் வியர்வை வழிந்தோடுகிறது. அதில் மெல்லக் கரைகின்றது அழகு. கைகள் நிதானமிழந்து அசைகின்றன. அவளின் ஆடல் தேய்ந்து போகிறது.

நாயகியின் ஆடற்திறத்தில் திளைத்த மண்டபக் கூட்டம் அவள் ஆடற்திறம் இழந்துபோவதைப் பார்க்க இயலாமல் வருந்துகிறது. அவளின் ஆடற்கலையிழந்து போகுமா என்று கூட்டம் துயருற்றது. துக்கம் தொண்டையை அடைக்க விம்மினார்கள். அவளை மேலும் உற்சாகமூட்ட முனைகிறது கூட்டம். கூட்டமும் சேர்ந்தாடுகிறது. தாளமேதும் கிடையாத ஆட்டம்.

நாயகி தன்பெருமை கெட்டுப் போகாதிருக்க இன்னும் இன்னும் முயன்றாள். அவளைச் சூழ்ந்திருந்த மல்லர்களின் குதியாட்டம் அவளின் ஆட்டத்தை மறைக்க முனைகிறது. மல்லர்களை விலத்தி விலத்தி தன்னை முன்னிலைப் படுத்துகின்றாள் அவள். களைப்பு மிக ஆட்டம் தளர்கிறது. எனினும் மழித்த தலைகளின் வாழ்த்துப் பிரதாபங்கள் ஆட்டக்காரரை உத்வேகப்படுத்துகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆட்டம், ஆட்டம், ஆட்டம்.....

மாலைகள் அறுந்தன. ஆடைகள் கசங்கின. கேசங்கள் குலைந்தன.

நாயகியின் முகம் மாறி வருகிறது. அதன் சாயல் மெல்ல சிங்கமுகமாக ஆகிறது. நாயகியின் ஒரு கையில் ஒரு பறவையின் எலும்புக்கூடு.

அது புறாவினதாகத்தானிருக்கும்.

மறுகரத்தில் வெண்தாமரை மலர்.

காவியுடைப் பிறவிகளும் குதித் தாடுகிறார்கள்.

விசிறிகள் விழுந்து கால்களில் மிதிபடுகின்றன. வியர்வை பெருகி அழுக்காறாக ஓடுகிறது. பெரும் சிரிப் பொலி காட்டுக் கத்தல்.

மண்டபம் சிதறிப் போகுமோ என்ற பீதி. மண்டப மனிதர்களின் கால்களும் துடிக்கின்றன. நரம்புகள் சில்லிட ஆடத்தொடங்குகிறார்கள்.

எல்லோரின் கரங்களிலும் வெண் தாமரை பூத்துள்ளது. ஆடி ஆடி முகம் கறுக்கிறது எல்லோருக்கும். முகக் கறுப்பு மெல்ல மெல்ல வெண் தாமரை மலர்களிலும் படிகிறது.

நாயகி மூச்செறிந்து ஆடுகிறாள். 'என்னுடன் இணைந்தாடுங்கள். நமது ஆட்டத்தின் பெருமை சுழலும் உலக மெங்கும் தெரியட்டும். நமது கால்க ளின் வீரத்தில் எதிர்க்கும் எவையும் மிதிபட்டுச் சாகட்டும். ம்... ஆடுங்கள். என் பிரிய பிறப்புக்களே ஆடுங்கள். உங்கள் ஆட்டமே நம் வாட்டத்தை தீர்க்கும்...."

நாயகியின் பேச்சொலியின் வேண் டுதலில் கூட்டமும் அரங்கும் தலை தெறித்த நடனமிடுகின்றன.

'.... ததீம் திமி, தகிட தினு திமி தகிட....'

ஆடலின் உச்சத்தில் களைக்கவும் கால்களின் வேகம் குறைகிறது. உடம் பின் அசைவு தளர்கிறது. விசிறிகளும் சாமரைகளும் சோர்வைத் துடைக்க முனைகின்றன. அவள் பலங்கொண்ட மட்டும் ஆடினாள். கால்கள் பின் னின . ஒழுங்கின்றித் தடுமாறின. கண் ணிமைகள் செருகி விழியெங்கோ தொலைந்தது. கரங்களின் பிடியிலி ருந்து தாமரைப் பூ வீழ்ந்தது. ஆடை அலங்காரங்களின்றிப் புழுதி படர்ந்து போயிற்று தேகம்.

ஆடினாள்.

அரங்கு சுற்றியது.... மண்டபம் சுற்றியது..... மல்லர்களும் சொல்லர்க ளும் சுழன்றார்கள்..... எல்லாம் சுழன் றன ஒன்றையொன்று விட்டுப் பிரிந்து சுழன்றன. சுழற்சியின் வேகத்தில் எல் லாம் சிதறின.

நாயகி நிலத்தில் சரிந்து வீழ்ந்தாள். கூந்தல் கலைந்து அழகும் பெருமையும் அழிந்துபோய்க் கிடந்தாள். நாயகி யின் மணிமுடி திசையின்றிக் கழன்று வீழ்ந்தோடியது. அதன் மணிகளும் முத்துக்களும் தெறித்துப் பறந்தன. சட்டென்று எல்லாம் நின்றன.

மகிமை பொருந்திய சரித்திர காலத் தின் பொன்முடி நொருங்கிப் போயிற் றென்று யாரோ அழுவது கேட்டது.

பேரமுகை.... கனத்த அமைதியின் தனித்த விசும்பலில் மண்டபம் திகி லுற்றது.

அரங்கின் திரை மூடுகிறது.

# 1970 - 77யுகம் ஆரம்பமாகிவிட்டது விரைவில் பஞ்சம் தலைவிரித்தாடும்

**- எதிர்க்கட்சித் தலைவர் ரணில்**

இயற்கை கூட இன்று ஆட்சியாளருக்கு எதிராக செயற்படுகிறது. பருவமழைகூட பதுங்கிக் கொண் டது. நீதி நேர்மையுடன் தார்மீகமான ஆட்சி நடத்தினால் தான் பருவமழைகூட பொய்யாது பெய்யும். அத்தகைய ஆட்சி இன்றில்லை. எனவேதான் பருவமழையும் பதுங்கிக் கொண்டது. போதியளவு மின்சாரம் கிடைக்காமல் போய்விடக்கூடிய அறிகுறி இருப்பதாக ஆட்சியாளர்களே கூறுகின்றனர். இப்போது 1970–77 யுகம் ஆரம்பித்துவிட் டது. இன்னும் சிறிதுகாலத்தில் பஞ்சமும் பட்டினியும் அதன் விளைவாக கொலை கொள்ளைகளும் போட்டி போட்டுக் கொண்டு பெருகும்". இன்று முதலீட்டாளர்கள் அரசுமீது நம்பிக்கையில்லாத காரணத்தினால் முதலீடு செய்ய அஞ்சுகின்றனர்.

யுத்தம் முடிவடையும் வரை முதலீட்டாளர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றும் யுத்தம் முடிவடைந்த பின் அனைவருக்கும் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் இப்போதும் கூறுகின்றனர்.

பதவிக்குள் வந்த இரு வருடத்திற்குள் அனைவரும் தொழில் வாய்ப்பு வழங்குவோம் என்று கூறியவர்கள் இன்று முடியும்வரை காத்திருக்குமாறு கூறுகின்றனர். இன்றைய அரசு யுத்தத்தை சாட்டாக வைத்துக் கொண்டு தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் புறக்கணித்து வருவதுடன், நாட்டை அபிவிருத்தி செய்ய எந்தவொரு திட்டத்தையும் உருவாக்காமல் நாட்டை குட்டிச் சுவராக்கி வருகிறது. திருமதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருக்கும் வரை தேர்தலைப்பற்றி கவலைப்படமாட்டோம். அடுத்த தேர்தலில் மிக இலகுவாக வெற்றி பெறுவோம்.

இன்றையகல்வி முறை உகந்ததல்ல, இளைஞர், யுவதிகள் அனைவருக்கும் தொழிற்பயிற்சி முறையிலான கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். தொழிற் பயிற்சி பெறுவோருக்கு தொழில் வாய்ப்பு வழங்க இவர்களிடம் எந்தவொரு திட்டமும் இல்லை. நாம் அன்று ஆரம்பித்த செயல் திட்டங்களையே இன்று நடைமுறைப் படுத்தி வருகின்றனர். பட்டதாரிகளை இழிவுபடுத்துகின் றனர். அவர்களது கல்விமுறை தொழில் வாய்ப்புகளுக்கு உகந்ததல்ல என்று கூறுகின்றனர்.

இன்று அரச அதிகாரிகள் பொறுப்புணர்ச்சியற்று செயல்படுவதாகக் கூறுகின்றனர். "நேரத்திற்கு வருவ தில்லை, பொறுப்புணர்ச்சி இல்லை. வேலை செய்யாது வம்பளந்து கொண்டு என்னையும் அரசையும் குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள்" என்று ஜனாதிபதியே கூறியுள் ளார். இது நாட்டின் தலைமைத்துவத்தின் ஆளுமையின் மையையே எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு பொய் வாக்குறுதிகளை வழங்கிப் பதவிக்கு வந்த பின் அவற்றை நிறைவேற்றாமல் தட்டிக் கழித்து வந்தால் யார்தான் போசாமல் இருப்பார்கள் என்றார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# துரத்தப்படும் தமிழர் வாழ்வு ஆக்கிரமிப்புப்படை நகர்கிறது

'சத்ஜய' என்ற குறியீட்டுப் பெயருடன் ஆனையிறவிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை மீண்டும் மக்களின் வாழ்வில் சொல்லொணாத் துயரை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் தாக்கப்பட்டு, துயரங்களோடும், துன்பச் சுமைகளோடும், அவலங்களோடும் இடம்பெயர்ந்த மக்கள் மீதும், கிழக்கு மாகாணம், மலையகம் ஆகியவற்றிலிருந்து குடிபெயர்ந்த மக்கள் மீதும், உள்ளூர் மக்கள் மீதும் மீண்டும் எழுதப்படும் இந்தக் கொடும் துயரங்கள் என்றுதான் சாகும். பலத்த எறிகணை பீரங்கித் தாக்குதல்களும், விமானத் தாக்குதல்களும் தொடர்ந்துகொண்டிருக்க மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள காடுகளுக்குள் ஓடித் தஞ்சமடைந்துகொண்டிருக்கிறார்கள். உணவுக்கும் நீருக்கும் வசதிகளற்று அவர்கள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு இராணுவ முகாம் வீழ்ச்சியை தாங்கிக்கொள்ள முடியாது கோபமடைந்த நிலையில் சந்திரிகா அரசு மேற்கொண்டிருக்கும் இவ் இராணுவ நடவடிக்கை பல நோக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. தெற்கில் சிங்கள மக்கள் சந்திரிகா அரசின் மீது வெறுப்பும் அளவுகடந்த ஆத்திரமும் கொண்டிருக்கிறார்கள். சிறீலங்காவின் படையினர் மத்தியிலும் அவர்களுக்கு அவநம்பிக்கை தோன்றியிருக்கிறது. இந்நிலையில்தான் 'சத்ஜய' சிங்கள மக்களை சாந்தப்படுத்தும் ஒரு இராணுவ நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் மூலம் முல்லைத்தீவில் அடைந்த இராணுவத் தோல்வியை மூடி மறைத்துவிடலாம் என்றும் எண்ணுகிறது. முல்லைத்தீவின் இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம் தாக்குதலின் போது காயமுற்ற விடுதலைப் புலி வீரர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதால்தான் இந்த இராணுவ நடவடிக்கையை அரசு மேற்கொண்டதாகவும் சில அவதானிகள் கருத்துத் தொரிவிக்கிறார்கள். புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள ஒரேயொரு நகரமான கிளிநொச்சியை பிடித்துவிட்டால் யாழ்ப்பாணத்தைப் பிடித்தபோது ஏற்படுத்திய வெற்றி மாயைக்கு மீண்டும் உயிர் கொடுக்கலாம் என்ற ஒரு பிழையான கணிப்பில் அவர்கள் செயற்படுவதாக அறியப்படுகிறது.

குடாநாட்டுத் தாக்குதல் போன்று அவர்களின் கிளிாொச்சி நகர் மீதான ஆக்கிரமிப்பு ஒருபோதும் சுலபமாக அமைந்துவிடாது. இருப்பினும் துன்பங்களால் துரத்தப்படும் மக்களின் அவலமே இங்கு பெரிதாக இருக்கும். துரத்தப்படும் மக்கள் எதிரியை எதிர்கொள்ளத் திரும்பி விடுதலைப் புலிகளுடன் இணையும் போது, 'சத்ஜய' ஒரு புதிய திருப்பு முனையாக அமைந்துவிடும்.

பரந்தனில் 3–08–96 வரை தாமதப்பட்டிருந்த 'சத்ஜய' பத்தாவது நாளளவில் கிளிநொச்சியை நோக்கி நகர ஆரம்பித்தது. இத் தரை நகர்வை ஆரம்பித்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளிடம் இருந்து, எதிர்பாராத பெரும் எதிர்த்தாக்குதலை எதிர்கொண்டு பலத்த இழப்பை சந்தித்தனர்.



மிகையொலி விமானங்கள், உலங்கு வானூர்திகளின் வான்வழித் துணையுடன், 4–8–96 கிளிநொச்சி நகர் நோக்கி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது, விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த எதிர்த்தாக்குதலால் சிறீலங்காப் படையணியின் 5 டாங்கிகள் அழிக்கப்பட்டன. அவற்றுள் 2 டாங்கிகள் தீக்கிரையாக்கப்பட்டு முற்றாக எரிந்து போயுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளார்கள். இறந்த இராணுவத்தினரின் உடல்கள் மீட்பாரற்று சண்டைக்களத்தில் சிதறிக்கிடக்கின்றன. இராணுவம் இத்தகைய களத்தைத் தாண்டி எத்தனை தூரம், அதன் இலக்கை நோக்கி நகரும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. பல இயற்கை அரண்களும் அடர்ந்த காடுகளும், பற்றைகளும், புதர்களும், வெளிகளுமாக போராடு கள நிலைகள் விடுதலைப் புலிகளுக்கு மிக சாதகமாக அமைந்துள்ள இப்பிரதேசத்தில் இராணுவத்தின் நகர்வு பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும்.

சந்திரிகா அரசு எதிர்நோக்கியிருக்கும் பூதாகரமான பிரச்சினைகள் பல. பொருளாதாரம் பெரு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டைவிட்டு ஓடுவது ஒருபுறம், கொழும்பை அச்சுறுத்தும் தாக்குதல்கள் ஒருபுறம், அந்நியச் செலவாணி விழுக்காடு ஒருபுறம், இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கை தோல்வியடைவது ஒருபுறம், பொதுமன்னிப்பு வழங்கியும் இராணுவத்தை விட்டு ஓடி தலைமறைவு ஆகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு போவது ஒருபுறம், என இன்னோரன்ன பல பூதாகரமான பிரச்சினைகளை சந்திரிகா எதிர்கொள்கிறார். பல விளைவுகளால் நெருக்கடி நிலையிலிருக்கும் சந்திரிகா அரசுக்கு 'சத்ஜய' வெற்றியைத் தராது. மீளமுடியாத புதைமணலைப் போலவே, நீண்டகால இராணுவ சாதக, பாதகங்களைக் கருத்தில் கொள்ளாது நடத்தப்படும் இவ் இராணுவ நடவடிக்கை அமையும். ★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அவலத்தைத் தந்தவருக்கு

அது, 1987 ஒக்டோபர் 10-ம் நாள். ஈழத் தமிழரின் போராட்ட வரலாற்றில் அந்தநாள் மறக்கப்படவே முடியாதது. அன்றுதான் 'கோலியாத்' (இந்தியா) என்ற அரக்கன், சிறுவனான 'டேவிற்'றை (புலிகள்) சண்டைக்கு இழுத்த நாள்.

அதாவது, கிள்ளுக்கீரைகள் என நினைத்து தமிழீழ விடுதலைப் புலிகளைக் கிள்ளி எறிய, இந்திய அரசு முடிவெடுத்த நாள்.

ஆயினும், அந்தக் "கிள்ளுக்கீரைகள்" 'காஞ்சோண்டி'களாக மாறி இந்திய ஆக்கிரமிப்பை அரிக்கத் தொடங்கிய நாளும் அதுதான்.

அந்த நாட்களில், யாழ்.பல்கலைக் கழகத்திற்கு மேற்குப்புறமாக உள்ள பிரம்படி என்ற சிற்றூரில், தலைவர் பிரபாகரனின் பாசறை இருந்தது. அன்று காலையே அந்த முகாமிற்குச் சென்ற தலைவர் அவர்கள் தளபதிகளை அழைத்து, போருக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிக்கொண்டிருந்தார்.

இதேவேளை, யாழ். கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரை வெளியேற விடாது புலிகள் எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். யாழ். கோட்டைப் பகுதியில் சண்டை தொடங்கியது.

அப்போது, பலாலி இந்தியப்படைத் தலைமையகத்திலிருந்து மேஜர் பெரியசாமி என்ற பெயருடைய இராணுவ அதிகாரி, புலிகளின் தலைமைப்பீடத்துடன் 'வோக்கி' மூலம் தொடர்பு கொள்ள முயன்றார். (இந்தியப் படையுடனான சமாதான காலத்தில் இந்த இராணுவ அதிகாரி, புலிகளுக்கும் இந்திய உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையேயான தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி இருந்தார்.)

. மேஜர் பெரியசாமியின் அழைப்புச் சத்தத்தைக் கேட்ட தலைவர் அவர்கள், தானே 'வோக்கி'யை எடுத்து பெரியசாமியுடன் தொடர்புகொண்டார்.

"பெரியசாமி... பெரியசாமி... இங்கே நான் பிரபாகரன் பேசுகின்றேன்" என்று பதில் கொடுத்தார்.

எதிர்முனையில் இருந்து கிடைத்த இந்த எதிர்பாராத அழைப்பால் திடுக்குற்ற மேஜர் பெரியசாமி, "யார் பிரபாகரனா? வணக்கம் சார்!" என்று தனது ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திவிட்டு ஏதோ கதைக்க முயன்றவரைக் குறுக்கிட்ட தலைவர் அவர்கள்,

"நீங்கள் (இந்தியப்படை) தேவையற்ற முறையிற் போரை ஆரம்பித்துள்ளீர்கள். நாங்களும் போருக்குத் தயார் என உங்களது தளபதிகளிடம் சொல்லுங்கள். இனி போர்க்களத்தில் சந்திப்போம்" என்று கூறிவிட்டு, 'வோக்கி'யின் இயக்கத்தை நிறுத்தினார்.

மாரிமழையும் தீவிரமடைந்தது. போரும் தீவிரமடைந்தது.

> அமெரிக்கப் படையுடன் போரிடத் தொடங்கும்போது தாம் 30 வருடங்களிற்கு மேல் போர் புரிய வேண்டி வரும் என வியட்னாம் தலைமை நினைத்திருக்க மாட்டாது. ஆனால் அவர்களிடமிருந்த தன்நம்பிக்கையும் துணிவும்தான் அவர்களை உறுதியுடன் வைத்திருந்தது; வெற்றியையும் பெற்றுக்கொடுத்தது.

போரில் இந்தியப் படைகளை வெல்ல முடியாது என்ற கருத்தை எமது மக்களில் பலர் மிகவும் உறுதியாக வைத்திருந்தார்கள். அதுபோலவே தமிழ் மக்களை இந்தியப் படை கொலைசெய்ய மாட்டாது என்ற கருத்தையும், எமது மக்கள் நம்பிக்கையுடன் வைத்திருந்தார்கள். இதனால், எறிகணை வீச்சில்லாத, வான் வழித் தாக்குதல்கள் இல்லாத, ஒரு சண்டைபற்றி மக்களிற் பலர் கற்பனை செய்துகொண்டிருந்தனர்.

ஆனால், போர் தொடங்கிய அன்றே பிரம்படியில் இந்தியப் படைகள் புரிந்த கொடூரமான படுகொலைகள், மக்களை அதிர்ச்சிக்கும், அச்சத்திற்கும் உள்ளாக்கின. அதைத் தொடர்ந்து யாழ். கோட்டை மற்றும் பலாலிப் படைத் தளங்களில் இருந்து ஏவப்பட்ட ஆட்டிலறி எறிகணைகள் அகதி முகம்களிலும், கோயில்களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் விழுந்து மக்களைப் பலி கொள்ளத் தொடங்கின.

இந்தியாவின் அகிம்சை முகமூடியை, அதன் ஆட்டிலறிகளும், எஸ். எல். ஆர் துப்பாக்கிகளும் கிழித்துக்கொண்டிருந்தன.

இந்த இடத்தில், வேதனை நிறைந்த ஒரு சுவாரசிய சம்பவத்தைக் குறிப்பிடவேண்டிய தேவை உள்ளது. இந்திய – புலிகள் போர் கடுமையடைந்துகொண்டிருந்தபோது, இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே கிரிக்கட் போட்டி ஒன்று நடந்துகொண்டிருந்தது. அந்தப் போட்டியில் இந்தியா தோற்றுவிட்டது. இந்தத் தோல்விச் செய்தியை வானொலி வர்ணனையாளர் அறிவித்ததும், அதைப் பலாலியில் இருந்தபடி செவிமடுத்துக் கொண்டிருந்த பிரிகேடியர் பெர்னாண்டஸ் என்ற இந்தியப் படை அதிகாரி, தனது ஆட்டிலறிப் படைக்கு தொலைத் தொடர்பு கருவி ஊடாக இவ்வாறு உத்தரவிட்டார்.

"இந்தியாவின் கிரிக்கட் தோல்வியை புலிகள் கொண்டாடப் போகின்றார்கள். எனவே, உடனடியாக ஆட்டிலறித் தாக்குதல்களை மேற்கொள்ளவும்."

இந்த உத்தரவைத் தொடர்ந்து கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளை நோக்கிச் சில நிமிட நேரங்கள் பலத்த ஆட்டிலெறித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இந்தியக் கிரிக்கட் குழு ஒரு போட்டியில் தோற்றதால், ஒரு இராணுவ உயர் அதிகாரிக்கு ஏற்பட்ட பைத்தியகாரத்தனமான கற்பனை காரணமாகப் பிறந்த கட்டளையால், எமது மக்களில் எத்தனை பேர் பலியானார்கள்!

இந்திய – புலிகள் போர் தொடங்கி ஒன்று, இரண்டு மாதங்களில் குடாநாடு இந்தியப் படைகள் வசமாகிவிட்டது. அதேவேளை புலிகளின் படையணிகள் சிதைந்தும், சேதப்பட்டுச் சிதறுண்டும் காணப்பட்ட ஒரு இக்கட்டான காலப் பகுதி அது. சுருக்கமாகச் சொன்னால், இராணுவ ரீதியாகப் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டுப் போய் நின்ற நெருக்கடியான வேளை அது. அதேவேளை தலைவரின் பாசறை அமைந்திருந்த மணலாற்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அதைத் திருப்பிக் கொடு



றுக் காட்டுக்குள் ஒரு பாரிய படையெடுப்புச் செய்ய, இந்தியப் படைகள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. உணவு, மருத்துவம், படையணிகளுக்கிடையேயான தொடர்புகொள்ளல் என்பவை பெரிதும் பாதிக்கப்பட்டு, போராளிகள் ஒரு விரக்திச் சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்த காலகட்டம் அது. இதனால் புலிகள் இயக்கமே முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விடுமோ என்ற ஒரு அபாயம் நிலவிய வேளை அது. அந்தளவுக்கு இந்தியப் படைகள் ஒரு பாரிய இராணுவ – உளவியல் நெருக்கடியை எமது இயக்கத்திற்கும், எமது மக்களுக்கும் கொடுத்துக்கொண்டிருந்தன.

இந்த நிலையில் இந்தப் பாரிய நெருக்கடியைத் தீர்த்து இயக்கத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசுடன் சமாதானப் பேச்சுக்குப் போவதே புத்திசாதுரியமான வழி என, எமது மூத்த உறுப்பினர்கள் சிலர் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தலைவருக்குச் செய்தி அனுப்பினார்கள்.

இந்தச் செய்திக்குத் தலைவர் எந்தப் பதிலையும் அனுப்பவில்லை.

சமாதானப் பேச்சிற்கு எப்போது நாம் செல்லவேண்டும் என்பதில் தலைவர் ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார். அதாவது, இராணுவ ரீதியில் பலமான நிலையில் இருந்தபடிதான் நாம் சமாதானப் பேச்சிற்குச் செல்ல வேண்டும்; அப்போதுதான் எமது உரிமைகளை நாம் வலியுறுத்திப் பெறமுடியும். பலவீனமான நிலையில் இருந்தபடி சமாதானப் பேச்சிற்குச் சென்றால் – அதுவும் வலியச் சென்றால் சமாதான உடன்பாடு என்ற போர்வையில் எமது இனத்தின் அடிமைச் சாசனத்தையே எதிரி எம்மிடமிருந்து பெற முனைவான் என்பதில், தலைவர் கவனமாக இருக்கின்றார்.

சமாதானப் பேச்சிற்குச் செல்வதே சிறந்தது என்று எமது மூத்த உறுப்பினர்கள் கோரிய அந்தக் காலத்தில், புலிகள் இயக்கம் உண்மையில் பலவீனமாகவே இருந்தது. எனவேதான், இந்தச் சமாதான ஆலோசனைக்குத் தலைவர் பதில் அனுப்பாது விட்டார்.

ஆனால், மீண்டும் மீண்டும் பதில் வேண்டி அந்தச் செய்தி வந்தபோது, தொலைத் தொடர்புச்சாதனம் ஊடாகத் தலைவர் இவ்வாறு பதிலளித்தார்.

“அமெரிக்கப் படையுடன் போரிடத்தொடங்கும் போது தாம் 30 வருடங்களிற்கு மேல் போர் புரிய வேண்டிவரும் என வியட்னாம் தலைமை நினைத்திருக்க மாட்டாது. ஆனால் அவர்களிடமிருந்த தன்நம்பிக்கையும் துணிவும் தான் அவர்களை உறுதியுடன் வைத்திருந்தது; வெற்றியையும் பெற்றுக்கொடுத்தது.

அந்த தன்னம்பிக்கையும் துனிவும் என்னிடம் இருக்கின்றது.”

இந்தச் செய்தியின் உட்பொருளை அந்த மூத்த உறுப்பினர்களும் புரிந்துகொண்டு தொடர்ந்தும் போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டார்கள்.

அவலத்தையும் அபாயத்தையும் கண்டுவிட்டு மனம் இடிந்து போவது மனித சுபாவம். இந்த மனித குணத்தை ஆக்கிரமிப்பாளர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவதை, உலக வரலாற்றில் அன்றிலிருந்து இன்றுவரை காணலாம்.

போராடும் மக்கள் மீது அவலங்களை விதைத்து, தேசத்தின் உறுதிப்பாட்டை உடைத்துப் போரை வென்று மக்களை அடிமை கொள்வது, ஒரு ஆக்கிரமிப்புச் சித்தாந்தம். அமெரிக்கச் சிவப்பிந்தியர்கள் மீதும், ஆபிரிக்க நீக்ரோக்கள் மீதும் வெள்ளை இன அரசுகள் இதை வெற்றிகரமாகச் செய்துள்ளன. இரண்டாம் உலகப்போரின் போது பிரித்தானியாவை வெல்வதற்காக ஜேர்மனிய விமானப்படை, இந்த அவலத்தை பிரித்தானிய நகரங்கள் மீது விதைத்தது. பின்னர் அதே நோக்கத்திற்காக பிரித்தானிய விமானப்படை, ஜேர்மனிய நகரங்கள் மீது அந்த அவலத்தை வட்டியுடன் சேர்த்து விதைத்தது.

‘ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலின்’ போது இந்த உபாயத்தைத்தான் சிங்களப் படைகள் கையாண்டன. தென் தமிழீழ மக்களது போராட்ட உறுதியை உடைப்பதற்கு நீண்ட நாட்களாகவே – இதே வகைப் பயங்கரத்தையே சிங்களப் படைகள் அங்கே செய்து வருகின்றன. ஆனால், புலிகள் இயக்கத்திடம் இந்த ஆக்கிரமிப்புச் சித்தாந்தம் எடுபடப் போவதில்லை.

அவலத்தை – அபாயத்தை கண்டு பதறி அவநம்பிக்கை அடைவதை விட, அதற்கு எதிராக ஆவேசங்கொண்டு, அவற்றை எமது மக்கள் மீது ஏவி விட்டோரே அனுபவிக்கும்படி செய்வது தான், ஈழத்தமிழினத்திற்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள புதிய சித்தாந்தமாகும்.

நன்றி: ‘விடுதலைப் புலிகள்’

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## இளைஞர்களின் அவலம்:



# சிறைவாழ்வும் சித்திரவதையும்

'நியாயமின்றி, எந்தவிதமான நீதி விசாரணைகளுமின்றி தடுப்புக்காவலில் அடைத்துவைக்கப் பட்டுள்ள சகல அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள்' என பதவிக்கு வருமுன்னர் பொதுஜன ஐக்கிய முன் னணியினர் மேடைமேடையாகப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் தாம் பதவிக்கு வந்த பின்னர். 'கார ணங்கள் எதுவுமற்று இளைஞர்க ளைக் கைதுசெய்யமாட்டோம்' என் பதை அவர்கள் எப்போதும் தெரிவித் திருக்கவில்லை. ஆனால் இந்த அரசு பதவிக்கு வந்தவுடன் 'கைதிகளை விடுதலை செய்வதாகக்' கூறியதை செயற்படுத்தாமல் விட்டாலும், 'கார ணமின்றிக் கைதுகளைச் செய்யமாட் டோம்". எனச் சொல்லாததை மட்டும் ஒழுங்காக கடைப்பிடித்துக் கொண்டி ருக்கிறார்கள் என எண்ணத் தோன்று கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஆட்சிக் காலத்தில் கைதுசெய்யப் பட்ட பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இன்றுவரை எந்தவித விசாரணைகளுமில்லாமல் சிறீலங்கா வின் தென்பகுதிச் சிறைச்சாலைகளில் வாடிக்கொண்டிருக்கின்றனர். அவர் கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட் டுக்கான எந்தவிதமான ஆதாரங்களு மில்லாமல் விசாரணைகளும் நடாத் தப்படாமல் சிறைச்சாலைச் சுவர்க ளுக்குள் கிடந்து மனம் வெதும்பிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக் கான விடுதலை என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

இந்தச் சிறைச்சாலைகளில் தடுத்து கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் 'விசாரணை செய்– அல்லது விடுதலை செய்' எனக்கோரி பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடாத்தியுள்ள னர். ஒவ்வொரு தடவையும் யாராவது ஒரு தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த அரசியல் வாதிகள் அரசின் சார்பில் தலையிட்டு உண்ணாவிரதத்தை முடி வுக்குக் கொண்டுவருதலும்தான் நடந் துள்ளது. ஆனால் இவர்களுக்கான விசாரணைகள் எந்த மட்டத்திலும் ஆரம்பிக்கப்படாமல், சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டவர்கள் ஆயுள் கைதிகளாகும் நிலையே உள் ளது.

சிறைச்சாலைகளில் உள்ளோர் நிலை இவ்வாறிருக்க; வெளியிலுள் ளோரின் நிலையும் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலைக் கைதிகள் நிலைதான் என்பதையும் இங்கு குறிப்பிடவேண் டியுள்ளது. பொதுவாக சிறீலங்கா அரசும் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிர தேசங்களில் (அது வடக்குக் கிழக்கோ அன்றி கொழும்பு – மலையகம்) உள்ள தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் நிலை மிகமோசமாகவே உள்ளது.

அரசின் அங்கீகாரம் பெற்ற அடை யாள அட்டையுடன்தான் தெருவில் நடமாட முடியும் என்ற நிலை பொது வாக இருந்தாலும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளைப் பொறுத்தவரை அரச படைகள் இவற்றை எப்போதும் கணக் கில் கொள்வதில்லை. தமிழ் மொழி யைத் தாய்மொழியாகக் கொண்டவ ராக எவரேனும் இருந்தால் அவர்கள் சிங்கள இனவாதிகள் கண்களுக்கு பயங்கரவாதிகள் ஆகவே தோற்றம் தருகின்றனர்.

*1985*–க்கு முன்னர் யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற சுற்றிவளைப்பும் – தேடுதல்களும் பின்னர் கிழக்கு மாகா ணம் வரை பரந்து சென்றது. காலப் போக்கில் கொழும்பு – மலையகம் என சிறீலங்காவில் தமிழர் எங்கெல் லாம் வாழ்கின்றார்களோ அங்கெல் லாம் சுற்றிவளைப்புக்கள் – தேடுதல் கள் – கைதுகள் என்பன சாதாரண விடயங்கள் ஆகிவிட்டன. இப்படியா கக் கைதுசெய்யப்படுவோரை எவரும் பார்க்கவோ பேசவோ முடியாத நிலையே உள்ளது.

கொழும்பில் அண்மைக்காலமாக தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்படும் நடவடிக்கை தீவிரம் அடைந்து வருகின்றது. அனேகமாக கைதுசெய்யப்பட்டவர்கள் அனை வரும் விடுதலைப் புலிகளாகவோ அல்லது விடுதலைப்புலிகளின் செயற் பாட்டிற்கு உதவுபவர்களாகவோ சித் தரிக்கப்படுகின்றனர். அரசின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் இக் கருத்து பரப்பப்படுகின்றது. திட்ட மிட்ட இக் கருத்தாக்கத்தின் மூலம்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கைதுசெய்யப்படும் அப்பாவித் தமிழன் பயங்கரவாதியாக சிங்கள மக்கள் மத்தியில் தோற்றம் பெறுகிறான். இதற்கேதுவாக, கொழும்பில் குண்டுத்தாக்குதல் நடாத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்த குறிப்பிட்ட நபர் வந்ததாகவும், அதற்கான வெடிப் பொருட்களையும் தாம் கைப்பற்றிவிட்டதாகவும் அரசு தன்னைத்தானே போற்றிப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிடும். இந்தப் பிரச்சாரப் புயலில் எல்லா உண்மைகளும் அடிபட்டுப்போய் விடும். வெளிநாடு செல்வதாகவோ அன்றி வேறேதும் முக்கியமான அலுவல்கள் காரணமாகவோ கொழும்பு சென்று அப்பாவித் தமிழ் இளைஞன் – சிங்கள மக்களைக் கூண்டோடு அழிக்க வந்த பயங்கரவாதியாகத் தோற்றம் பெறத் தொடங்கிவிடுவான். பிறகென்ன... அவன் வாழ்வு குறுகிய நான்கு சுவர்களுக்குள் சுருங்கிப் போகும். வெளி உலகமும் சுதந்திரக் காற்றும் கனவாகிப்போகும். அடங்கிப்போனால் உடலில் உயிரை ஒட்டி வைத்திருக்கலாம். எதிர்த்து நின்றால் பொல்கட வாவியிலோ அன்றி களனி கங்கையிலோ அதுவுமில்லாவிடில் ஏதாவது ஒதுக்குப் புறமான ஒரு மலசலக் குழியினுள்ளோ அழுகிக்கிடக்க நேரிடலாம். இதுதான் – இப்படித் தான் எங்கள் இளம் சந்ததியில் பலரது வாழ்வு அழிக்கப் படுகின்றது.

அண்மையில் சிறீலங்காப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான நாவற்குழியில் தேடுதல் நடாத்திய படையினர் பெண்கள் பலரை கண்களைக் கட்டிக் கூட்டிச் சென்றுள்ளனர். அவர்கள் பற்றிய தகவல்கள் ஏதும் பின்னர் தெரியவரவில்லை. இதே போன்ற கைது கொழும்பிலும் பரவலாக இடம்பெறுகின்றன.



தமிழ் மக்களில், வளர்ந்து வரும் இளம் சந்ததியை அழித்துவிட்டால் ஒரு தலைமுறை இடைவெளி உருவாகும். அத் தலைமுறை இடைவெளிக்குள் போராட்டத்தை வேரோடு கிள்ளி எறிந்துவிடலாம் அல்லது நசுக்கிவிடலாம் என அரசு எண்ணிச் செயற்பட்டு வருகின்றது. இன்றைய சூழ்நிலையில் அரசு இச்செயற்பாட்டை தீவிரப்படுத்திவருகின்றது. இளம் சந்ததியினர் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் தம்மையும் இணைத்துக்கொள்ள முன்வராத பட்சத்தில், இந்த இளைஞர்களின் உயிர் வாழ்தல் பற்றிய சாத்தியங்கள் கேள்விக்குள்ளாகின்றன. ஆம்; போராட்டமென்பது உயிர்வாழ்தலின் இயக்கமே.

— ஆதிரையன்

# காணாமல்போன சபுமல் குமரயா

- சிரிப்பு -

சிங்கள தேசத்தில் புலிகளை ஒழித்துக்கட்டுவதாக அவ்வப்போது எழுந்து கூத்தாடிய வீரத் தளபதிகளில் ரத்வத்தை புதியவர். ரத்வத்தை 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை மூலம் சபுமல் குமரயவாக போற்றப்பட்ட ஒரு குட்டி இளவரசர்; ஊன்றுகோலுடன் படை நடத்தும் வல்லோனாக படங்களிலும், பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் படம் காட்டி வந்தார்.

'இன்னும் சில மாதங்களில் விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டிவிடுவேன்' என மூட்டைப்பூச்சிக் கணக்காகக் கதைப்பார். வாய்ச்சவடால் விடுவதிலும் ஆள் சமர்த்தர். சந்திரிகாவுக்கும் தாய் மாமன். அவருக்கும் மாமாவின்ர வீரப்பிரதாபங்களில் ஒருவிதமான ரசனை. இப்படி இவர் விட்ட வீரப் பிரச்சாரங்கள் சிங்கள மக்களுக்கு உற்சாகத்தையும், தெம்பையும், நம்பிக்கையும் அளவுக்குமீறி கொடுத்திருந்த வேளை, முல்லைத்தீவு தாக்குதல் நடந்தது. புலிகள் 'ஓயாத அலைகள்' எனப் பெயரிட்டு நடத்திய தாக்குதலின் போது, முகாம் அழிக்கப்பட்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்கள் பறிபோனபோது, அவை பற்றி பிரதிப் பாதுகாப்பமைச்சரிடமிருந்து அறிய சிங்கள பாராளுமன்றம் விரும்பியது. ஆனால், ஆளைக் காணவில்லை. பாராளுமன்றத்துக்கு முகம் கொடுக்க வெட்கப்பட்ட ரத்வத்தை மறைந்துவிட்டார். ஆனால் வீரத்தளபதி ரத்வத்தை களத்தில் நின்றுகொண்டு இராணுவ நடவடிக்கைகளை வழிநடத்துவதாக அவரது உதவியாளர்கள் கதை அளந்துள்ளனர்.



இறுதியில் திருகோணமலையில் ஆள் நிற்பது கண்டு பிடிக்கப்பட்டது. எதிர்க்கட்சியினர், களம் திருமலையில் அல்ல, முல்லைத்தீவில் என்று சுட்டிக்காட்டியதோடு இவ்வனர்த்தங்களுக்குப் பொறுப்பான ரத்வத்தை பதவி விலகவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## அடுத்த ஆண்டு அரசியல் தீர்வு

# இலவு காத்த கிளி



### காட்சி 1

சந்திரிகா: தமிழருக்கு பிரச்சினை உண்டு. தமிழர் பெரிதும் துன்பப்படு கிறார்கள். பாவம் தமிழர்கள். அவர்க ளின் துயர்களை நாம் துடைக்கவேண் டும். முன்னைய ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளால்தான் அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட நேர்ந்தது. எனது ஆட்சியில் முதலா வது முயற்சி தமிழர்களின் பிரச்சினை களைத் தீர்த்துவைப்பதுதான். அனைத்து முன்னுரிமையும் தமிழர்க ளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கொடுக்கப்படும்.

பிக்குகள்: தமிழருக்கு பிரச்சினை ஏதும் இல்லை. பிரச்சினை இருந்தால் தானே தீர்வு தேவை. தமிழர்கள் எல்லாவித உரிமைகளையும் அனுப விக்கிறார்கள்.

பீரிஸ்: பிக்குகள் கண்ணைத் திறந்து கொண்டு தூங்குகிறார்கள். தமிழர்க ளுக்கும் பிரச்சினை உண்டு. அதற்குத் தீர்வு அவசியம்.

வெளிநாட்டு தொடர்புசாதனங்கள்: சந்திரிகா ஒரு வித்தியாசமான தலைவி. தமிழருக்கு பிரச்சினை உண்டு என் பதை பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள் ளார். அவருக்கு தமிழர் மீது அக்கறை உண்டு. அவர் தமிழரின் பிரச்சி னைக்கு தீர்வுகாண விசுவாசமாக உழைத்துக்கொண்டிருக்கிறார். அவர் ஏனைய சிங்களத் தலைவர்களிட மிருந்து வித்தியாசமானவர்.

முற்போக்காளர்கள்: சந்திரிகா 21–ம் நூற்றாண்டுக்குரிய தலைவி. இன ஐக் கியத்தை உருவாக்கப் போகும் புதிய நம்பிக்கை நட்சத்திரம்.

கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் வாதிகள்: நாம் சந்திரிகாவை நம்புகின் றோம். அவர் ஒரு தாராளமானவர். அவர் எங்களுடைய பிரச்சினைகளை நன்கு விளங்கிவைத்திருக்கிறார். அவற் றைத் தீர்க்க அவர் விசுவாசமாக முயற் சிக்கின்றார்.

சில தமிழ்ப் புத்திஜீவிகள்: சந்திரிகா திறமையானவர். பாரிசில் படித்தவர். எனவே புரட்சிகரமான சிந்தனைக ளால் உருவாக்கப்பட்டவர். அவரு டைய காலத்தில் இன ஐக்கியம் இங்கு உருவாகப்போகின்றது.

### காட்சி 2

சந்திரிகா: தமிழர் கடந்த பதினேழு ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆசியாவிலேயே மிக மூத்த தலை சிறந்த யாழ் நூல் நிலை யம் எரிக்கப்பட்டது தமிழரை மிகவும் புண்படுத்திவிட்டது. அதனால்தான் தமிழர் ஆயுதம் ஏந்தவேண்டி வந்தது. தமிழரின் குறைகள் தீர்க்கப்பட வேண் டும். எரிக்கப்பட்ட நூலகம் மீள நிர்மா ணிக்கப்படவேண்டும். தமிழ் மொழி அதற்குரிய நடைமுறை அந்தஸ்தைப் பெறவேண்டும். தமிழ்ப் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். தமிழரின் கலாச்சாரமும் தனித்துவ மும் பேணிப் பாதுகாக்கப்படவும் வளர்க்கப்படவும் வேண்டும். விரை வில் தமிழரின் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும். அரசியல் யாப்பில் அதற்கான திருத்தங்கள் செய்யப் படும். பிராந்தியங்களின் ஒன்றியம்

**மு. திருநாவுக்கரசு**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உருவாக்கப்படும்.

கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்வா திகள்: சந்திரிகா உண்மையானவர். நாங்கள் எல்லோரும் அவரைப் பலப் படுத்த வேண்டும்.

பாடல் – நவாலியூர் சோமசுந்தரப் புலவருடையது.

..திருமாலின் நிறம்போல நெடுந் தெருப்போல் கிளைகள் பல ஊன்றி நடுக்காட்டில் ஓர் இலவ மரம் வளர்ந்து வந்ததன்றே.

## காட்சி 3

சந்திரிகா ரத்வத்தையையும், பீரி சையும், மங்களவீர (வெண்தாமரை இயக்கம்) ஆகிய மூவரையும் அழைத் துக் கதைக்கின்றார்.

சந்திரிகா: பேராசிரியர் பீரிஸ் அவர் களே, உங்களிடம் ஒரு முக்கியமான பொறுப்பை ஒப்படைக்கிறேன். நீங் கள் இப்பொழுது ஒரு தீர்வுத்திட்டம் ஒன்றை தயாரிக்கப் போகின்றீர்கள். அது ஒரு பெரும் பொதி. அதற்குள் எல்லாம் இருக்கவேண்டும். சமஷ்டி என்றும் இருக்கவேண்டும். சமஷ்டி இல்லை என்றும் இருக்கவேண்டும். வடக்கு கிழக்கு இணைப்பு என்றும் இருக்கவேண்டும். இணைப்பில்லை என்றும் இருக்கவேண்டும். தமிழும் சிங்களமும் சம அந்தஸ்து உடையவை என்றும் இருக்கவேண்டும். ஆனால், சிங்களந்தான் முக்கியம் என்றும் இருக்கவேண்டும். எல்லா மதங்களுக் கும் சம உரிமை என்று இருக்கவேண் டும். ஆனால் பௌத்தம்தான் மேலா னது, முக்கியமானது என்றும் இருக்க வேண்டும். சிறுபான்மையினருக்கு உரிமை என்று இருக்கவேண்டும். பெரும்பான்மையினருக்கு பாதுகாப்பு என்றும் இருக்கவேண்டும். மொத்தத் தில் அதற்குள் எல்லாமும் இருக்க வேண்டும். ஆனால் ஒன்றும் இல்லா மலும் இருக்கவேண்டும். பேராசிரி யரே உங்களுடைய அறிவைப் பயன் படுத்தி இப்படியொரு தீர்வுப் பொதியை உருவாக்குங்கள். அந்தப் பொதியின் பாரத்தால் உங்கள் முதுகும் கூனிவிடவேண்டும்.

பீரிஸ்: ஆம் உங்கள் கட்டளைப் படியே.

சந்திரிகா: மாமா, தீர்வுப் பொதி யைப் பார்த்து தமிழர் அண்ணாந்து கொண்டிருக்கும் போது, நீங்கள் அவர் களை குறிதவறாது சுட்டு விழுத்திவிட வேண்டும்.

பீரிஸ்: சரி, ஆனால், நீங்கள் கூறு வது ஒன்று, மற்றதை நிராகரிப்பதாக பெரிய முரண்பாடு உள்ளதாக அமை யுதே.

சந்திரிகா: நான் அதை சமாளிப் பேன். அதற்குத்தான் சமரவீர இருக்கின் றார். மங்கள சமரவீர நீங்கள் வெண் தாமரை இயக்கத்தினால் ஒரு நாடகத் தையே நடத்தி முடிக்கவேண்டும். சமாதானத்திற்கு உழைக்கும் ஒரு அமைப்பாக அதைக் காட்டிக் கொள்ள வேண்டும். தமிழருக்கு சமா தானத் தீர்வைக் காண்பதற்கான ஆதரவை சிங்களவர் மத்தியில் தேடுவ தற்கான ஒரு இயக்கம் போல அதில் காட்டப்பட வேண்டும். அதற்காக கிராமம் கிராமமாக சிங்களவரை நீங்கள் தூண்டுவது போல இந்த உலகை நீங்கள் நம்பச் செய்யவேண் டும். ஆனால் சிங்கள மக்களிடம் நீங்கள் போய் சிங்கள இராணுவத்தின் பெருமைகளைப் பாராட்டவேண்டும். அவர்களுடைய தியாகத்தை மேன் மைப்படுத்த வேண்டும். இறந்த இராணுவ வீரர்களின் பெற்றோர் களைச் சந்திக்க வேண்டும். அவர்க ளுக்கு பரிசுப்பொருட்களைக் கொடுக்க வேண்டும். யுத்தத்தால் அங்கவீனம் அடைந்தவர்களுக்கு உதவவேண்டும். இரத்தான இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டும். காயப்படும் இராணுவ வீரர்களுக்காக இரத்தம் சேகரிக்க வேண்டும். இவை மூலம் சிங்களக் கிராமவாசிகளை யுத்தத்திற்கு உதவி செய்ய அணிதிரட்ட வேண்டும். ஆனால் அது சமாதானத்திற்கான யுத் தம் என்று சொல்ல வேண்டும். இது சிங்களக் கிராமவாசிகளிடையே எங்க ளைப் பலப்படுத்தும். இது சமாதானத் திற்கான யுத்தம் என்று சொல்லும். அதில் உள்ள சமாதானம் என்ற சொல்லை வைத்து, உலகத்தையும் தமிழரையும் நாம் பேய்க்காட்டப் போகிறோம். இப்பொழுது மூவருக் கும் விளங்கியதா என்னுடைய திட் டம்.

பீரிஸ், அனுரத்த, சமரவீர: ஆம். ஆம். ஆம்.

## காட்சி 4

சந்திரிகா: நான் சமாதானத்தை விரைவில் கொண்டுவருவேன். அதற் குப் பல முட்டுக்கட்டைகள் உண்டு. இனவாதிகள் பலர் குறுக்கே நிற்கின்

### இன்று இல்லெங்கிலும் நாளை

எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன.
எங்கள் இமைகள் கவிந்துள்ளன.
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன
எங்கள் பற்களும் கண்டிப்போயுள்ளன.
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக
எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.
எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்



தாழ்ந்த புருவங்கள் ஒருநாள் நிமிரும்
கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்
கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்

அதுவரை நீங்கள் எங்களை ஆள்க
அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக

**சண்முகம் சிவலிங்கம்**

'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுப்பிலிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

றார்கள். பிற்போக்கான ஐக்கிய தேசியக் கட்சி குறுக்கே நிற்கின்றது. எனினும் நான் விரைவில் தீர்வைக் கொண்டுவருவேன். இதோ தீர்வுப் பொதி.

கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள்: இது மிகச் சிறந்த தீர்வு. இதுவரை காலமும் கொண்டுவரப்பட்ட எல்லாத் தீர்வுகளையும் விட இது முன்னேற்றகரமானது. இதில் சிறு குறைகள் இருக்கலாம். ஆனால் அவற்றைப் பேசித் தீர்க்கலாம்.

சந்திரிகா: தீர்வு சம்பந்தமாக தமிழ்க் கட்சிகளுடன் தொடர்ந்து கதைக்கின்றோம். எல்லா நல்ல சக்திகளையும் ஒன்றுதிரட்டி இந்தத் தீர்வை நடைமுறைப்படுத்துவேன்.

தமிழ்க் கட்சிகள்: நாட்கள் சென்றுகொண்டுள்ளன. தமிழ் மக்கள்கஷ்டப்படுகிறார்கள். அம்மணி விரைவில் தீர்வைக் கொண்டு வாருங்கள்.

சந்திரிகா: நான் தீர்வில் மிகவும் உறுதியாக உள்ளேன். எனது நிர்வாகத்தில் உங்களுக்கு சந்தேகமா? இனவாதிகளையும், பிற்போக்குவாதிகளையும் எதிர்த்து நாம் போராடவேண்டும். இப்பொழுது தீர்வுப்பொதிக்கு தடையாக உள்ளது இனவாத ஐக்கிய தேசியக் கட்சிதான். எனவே தமிழ்க் கட்சிகளே, இன்றோடு ரணிலைப் பார்த்து தீர்வைக் கொண்டுவர முயலுங்கள். பந்து இப்பொழுது உங்கள் பக்கம். ரணிலைச் சம்மதிக்கச் செய்வது உங்களுடைய பொறுப்பு. அது சரி என்றால் எல்லாம் சரி. நான் தடையில்லை. உடனடியாக அவரை வழிக்குக் கொண்டுவாருங்கள்.

### காட்சி 5

ரணிலும் 5 தமிழ் கட்சிகளும் சந்தித்தல்.

தமிழ்க் கட்சிகள்: நீங்கள் தீர்வுக்கு ஒத்துழைக்க வேண்டும். இப்பொழுது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரப்பட்டுள்ளது. புரையோடிப்போன இனப் பிரச்சினைக்கு தீர்வுகொண்டுவர நீங்கள் உதவவேண்டும்.

ரணில்: அதிகாரப் பரவலாக்கலுக்கு நாம் தடையில்லை. சந்திரிகாவின் அரசாங்கம் தீர்வுக்குத் தயாரில்லை. சந்திரிகா உங்களை ஏமாற்றுகின்றார். அவருடைய விசுவாசத்தை நாம் சந்தேகிக்கின்றோம். அவருடைய அரசாங்கக் கட்சிகளுக்கிடையிலேயே தீர்வு விசயத்தில் கருத்தொருமைப்பாடு இல்லை. அவர்கள் ஒரு தீர்வுத் திட்டத்தைமுன்வைத்திருக்கிறார்களே ஒழிய அதில் தமது கட்சி நிலைப்பாடு பற்றி சந்திரிகா எந்தவித பதிலையும் பகிரங்கமாகக் கூறவில்லை. தீர்வு பற்றி அவர் மௌனம் சாதிக்கின்றார். நான் நினைக்கின்றேன், சந்திரிகா உங்களைப் பேய்க்காட்டுகின்றார் என்று. முதலில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இருக்கும் எல்லாக் கட்சிகளும் தங்களுக்கு இடையில் ஒரு ஒருமித்த கருத்துக்கு வரட்டும். அதற்குப் பின் எங்களிடம் வாருங்கள்.

### காட்சி 6

சந்திரிகாவும் தமிழக் கட்சிகளும்

தமிழ்க் கட்சிகள்: நாங்கள் கடந்த இரு வருடங்களாக எங்களுடைய பிரச்சினையை உங்களிடம் தெளிவாகக் கூறிவிட்டோம். நீங்கள் அதன் பிறகு இரண்டு வருடங்களின் பிறகு, எங்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் கதைக்குமாறு கூறினீர்கள். நாங்கள் ரணிலிடம் எல்லாவற்றையும் தெளிவாகக் கூறிவிட்டோம். அவர் எல்லாவற்றையும் ஆறுதலாகக் கேட்டார். பிறகு அவர் சொன்னார், உங்களை ஒரு முடிவுக்கு வரட்டுமாம். முதலில் உங்களுடன் கதைத்து ஒரு தீர்வுக்கு வரட்டுமாம்.

சந்திரிகா: எனது தீர்வுத்திட்டத்தை புத்திஜீவிகளும், உரியவர்களும் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டளவில் தீர்வுத்திட்டம் சட்டமூலமாகத் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தமிழ்க் கட்சிகள்: அப்படியானால் உங்களிடம் ஒன்றும் இல்லையோ?

சந்திரிகா: இருக்கு. யுத்தம் இருக்கு. அடுத்த வருட இறுதிக்குள் அது முடிந்துவிடும்., அதன் பிறகு சமாதானம். யுத்தத்தின் மூலமாக சமாதானம். (அத்தனகலையில் சந்திரிகா சமீபத்தில் ஆற்றிய உரையிலிருந்து)

சோமசுந்தரப் புலவரின் பாடல்

பஞ்சு... கொடவளர்ந்து வந்த இலவ மரம், அதனில் மரகதமாம் மணி போல பசுமைநிறம் வாய்ந்த கொஞ்சுமொழி பிஞ்சுகளாய் அஞ்சு முகம் ஒன்றே. இலவங்காய் பழுக்கும் என்று கிளி காத்துக்கொண்டிருக்க காய் வெடித்துப் பஞ்சாய் பறந்து போயிற்று.

முற்றும்




## யூலைப் படுகொலை

யூலை 23, 1983 - எமது மக்களின் வாழ்வில் ஆறாத துயர வடுவை சுமத்திய நாள். இனவெறியாளர்களின் கால்களில் எங்கள் பூமியின் மனிதர்கள் மிதிபட்டார்கள். உயிருடன் கொழுத்தியும் வெட்டியும் கொன்றும் சிங்கள இனவெறியர்கள் தமிழர்கள் மனத்தில் பெரும் தீயை மூட்டிய நாளும் இந்நாளே. அகதிகளாய் மக்கள் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பைக் கடந்து, புகைமண்டலங்களைக் கடந்து, உயிருக்கு அஞ்சி ஓடிய அவலம் இன்னும் ஆறாத காயமாகவே இருக்கிறது. கொழும்பு நகரில் பல தமிழரது வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள் விலைமதிக்கமுடியாத சொத்துக்கள் எரியுண்டு போயின. வாழ்விழந்து தாய்மண்ணுக்கு துயரோடு திரும்பி வந்தவர்களின் முகங்களில் படிந்திருந்த கருமை சோகத்தையும், எரிவில் இருந்து தப்பி மீண்ட கதையையும் சொல்லியது. எங்களுக்கென்றொரு தாயகம் வேண்டும் என்கிற சிந்தனையை இளைஞர்கள் மத்தியில் வலுவாக விதைத்த நாளாகவும் இது இருக்கிறது.

இந்தப் படுகொலை நிகழ்வை நினைவுகூரும் அதேவேளை மனித உரிமைகள் மீறப்பட்டும், எமது வாழ்வு மறுக்கப்பட்டும், கரிய இருளினுள் சிக்கி, திசைகள் எங்கும் அகதிகளாக துரத்தப்பட்ட நாங்கள் எங்கள் மண்ணில் இழந்துகொண்டிருக்கும் வாழ்வை மீட்க போராடுவோம் என இந்நாளில் உறுதிகொள்வோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




ஜேர்மனி










# தாய்மண் மீது தமிழர் கொண்ட தாகம்

அமெரிக்கா




இத்தாலி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

Printed by VASAN LITHO PRINTER Tel: 0181 - 640 4366 (U.K)